
அவன் ஊக்கங் குறை
யாமல் இருக்கச் செய்வது
உங்கள் வேலை!
DALDA VANASPATI
The DALDA COOK BOOK
Price Re.1/-
தாய்மார்களே: உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு தடவை சமையல் செய்யும்பொழுதும் உங்களால் எவ்வளவு செய்யமுடி மென்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களி லும், அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந் தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறுவதோ, அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ இருக்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ள தாகவும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்க மளிப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில. அதிக உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப் படுவது இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைட்டமின் நிரம்பிய டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாக யிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான "உணவு சத்துக்களை" அளிக்கிறது—இந்த சத்துக்கள் நாம் சாதாரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.
டால்டா உணவுகளை மேலும் ஊக்கமுள்ளதாக்குகிற தென்பதை நிரூபித்துள்ளோம்
வைட்டமின் நிறைந்த டால்டா ஊக்கமளிக்கிறது



அழகை
மேன்மை
படுத்துங்கள்
அருணா
அணியுங்கள் ஆடையை
மேனியை அடுத்த
"அருணா" ஆடை
உள்ளத்தை உற்சாகப்
படுத்தும் உழைப்பிற்
குகந்த நிறைவேற்றம்
அருணா மில்ஸ் லி. ஆமதாபாத்

கல்கி
பொருளடக்கம்

மலர் 4
இதழ் 40

1945 மே 13

பார்த்திப ஞு
சித்திரை 31

ஒரு சின்னஞ் சிறு முயலை ஒரு பயங்கர வேட்டை நாய் துரத்திக்கொண்டு வந்தது. முயல் ஓடி ஓடிக் களைத்துவிட்டது. இதோ முயல் பிடிபடப் போகிறது, வேட்டை நாய்க்கு இரையாகப் போகிறது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட நிலைமையில் ஒரு கணம் முயல் நின்றது. ஆக்ரோஷத்துடன் திரும்பியது. திரும்பிக் கண்ணில் அனல் எழ வேட்டை நாயைப் பார்த்தது. மறு கணம் முயலானது வேட்டை நாயைத் துரத்த ஆரம்பித்தது! வேட்டை நாய் விழுந்தடித்து ஓடியது!.........



அப்படி முயல் திரும்பி நின்று வேட்டை நாயைத் துரத்த ஆரம்பித்த இடத்திலே எட்டயபுரம் ராஜாக்களின் அரண்மனை கட்டப்பெற்றதாகச் சொல்கிறார்கள்.

அந்த அரண்மனையில் இன்று வசிப்பவர் ராஜா ஜகவீர ராம முத்துக்குமார வெங்கடேசுவர எட்டப்ப நாயக்கர் ஐயான் அவர்கள். இளம் வயதினர்; முதிர்ந்த அறிவினர்; விசால நோக்க முடையவர்; செயல் திறமை பெற்றவர்.

எட்டயபுரம் சமஸ்தானம் ஆதிகாலத்திலிருந்து கவிகள், சங்கீத வித்வான்கள், கலைஞர்கள் முதலியவர்களை ஆதரிப்பதில் பெயர் பெற்றது. ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் திருவாரூரிலிருந்து எட்டயபுரம் போய் வசித்து அங்கேயே முக்தியடைந்தார் என்பது பலருக்குத் தெரிந்திருக்கும். இன்னும் எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் எட்டயபுரம் ராஜாக்களால் ஆதரிக்கப்பட்டவர்கள். அந்தப் பரம்பரையில் வந்த தற்போதைய ராஜா, பாரதியாரால் எட்டயபுரத்துக்கு ஏற்பட்டுள்ள சிறப்பை நன்கு உணர்ந்திருக்கிறார். எட்டயபுரத்தில் பாரதி ஞாபகச் சின்னம் அமைக்கும் முயற்சியில் விசேஷ சிரத்தை கொண்டிருக்கிறார். நிதி வசூல் தொடங்கியதும் ரூ. 501 அனுப்பி வைத்தார். இப்போது இரண்டாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை பாரதியார் ஞாபகச் சின்னக் கட்டிடம் அமைப்பதற்காக மனமுவந்து அளித்திருக்கிறார். அவருக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்னும் பல நீடித்த உதவிகளையும் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 40

என்ன சேதி?

பிரிட்டிஷ் நியாயம்

என்னதான் சொல்லுங்கள்! பிரிட்டிஷ் நியாயம் என்னமோ நியாயம் தான்! மற்ற எந்த ஆட்சியிலும் இப்பேர்ப்பட்ட நியாயம் கிடையாது, நியாய விசாரணையும் கிடையாது! பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒரு மனிதன் கொலையுண்டால், அதைப்பற்றி விசாரணை செய்து குற்றவாளியையோ, குற்றவாளிகளையோ கண்டு பிடித்தே தீர்வார்கள். கண்டு பிடித்தபின் சட்டப்படி சாங்கோபாங்கமாய் நியாய விசாரணை செய்வார்கள். நியாய விசாரணைக்குப் பிறகு தீர்ப்புக் கூறுவார்கள். குற்றம் ருசுவானால் மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ அளிப்பார்கள். குற்றம் செய்தவன் பெரிய மனுஷனா, சின்ன மனுஷனா என்று பார்க்க மாட்டார்கள். அந்தஸ்தைக் கவனிக்கமாட்டார்கள். குற்றவாளி யாராயிருந்தாலும், பிரிட்டிஷ் நியாயம் நியாயந்தான்!

குற்றவாளிகள்

அப்படியிருக்க, ஒரு மனிதனுடைய சாவு விஷயத்திலேயே இவ்வளவு நடபுடல் என்றால், பதினைந்து லட்சம் பேரின் மரணத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா? கொலையுண்டு இறந்த பதினைந்து லட்சம் பேரின் ஆவிகள் சுற்றிச் சுழன்று "நியாயம் எங்கே? நீதி எங்கே?" என்று கதறிக்கொண்டிருக்கும் போது, நியாயத்துக்கும் நீதிக்கும் பெயர்போன பிரிட்டிஷ் சர்க்கார் அதைப்பற்றி விசாரணை செய்யாமல் விடுவார்களா? விடவில்லை. வங்காளப் பஞ்சத்தில் செத்துப் போன பதினைந்து லட்சம் பேரின் மரணத்துக்கு ஜவாப்தாரி யார்?—என்று விசாரிப்பதற்கு இந்திய சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டி, பூராவும் உத்தியோகஸ்தர்கள் அடங்கிய கமிட்டிதான். அதனால் என்ன? பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நியாய விசாரணையில் கோளாறு ஏற்படுமா? ஏற்படாது. விசாரணை சரியான முறையில் நடந்து கமிட்டியாரின் தீர்ப்பும் வெளியாகி விட்டது. மேற்படி பதினைந்து லட்சம் பேரின் மரணத்துக்குப் பொறுப்பாளிகள் யார் யார் என்று திட்டமாக வரையறுத்துச் சொல்லிவிட்டார்கள்:—

1 திறமையற்ற வங்காள சர்க்கார்.

2 முன்யோசனையில்லாத இந்திய அரசாங்கத்தார்.

3. பஞ்ச காலத்தில் கொள்ளை லாபம் அடிக்கப் பார்த்த சண்டாளப் பாதக முதலாளிகள்.

மேற் கூறிய மூன்று கூட்டத்தாரின் காரியங்களினால்தான் வங்காளத்தில் பஞ்சம் நேர்ந்து 15,00,000 பேர் சாகவும் நேர்ந்தது என்று இந்திய சர்க்கார் நியமித்த விசாரணைக் கமிட்டியாரே தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.

தண்டனை என்ன?

தீர்ப்புக் கூறினார்களே தவிர, தண்டனை இன்னதென்று குறிப்பிடவில்லை. நீங்கள்தான் சொல்லுங்களேன், தண்டனை என்ன விதிக்கலாமென்று? பதினைந்து லட்சம் பேரின் மரணத்துக்கு உடந்தைக் குற்றவாளியான இந்திய சர்க்காருக்கு என்ன தண்டனை விதிக்கலாம்? சந்தேகம் என்ன? பதினைந்து லட்சம் தடவை தூக்குத் தண்டனை விதிக்க வேண்டியதுதான்! ஆனால் தண்டனையை நிறைவேற்றுவது யார்? விசாரணைக் கமிட்டியை அவர்களே நியமித்ததுபோல், தண்டனையையும் அவர்களே நிறைவேற்றிக் கொண்டால்தான் உண்டு! ஒருவேளை இதை உத்தேசித்துத்தான் வைஸ்ராய் வேவல் துரை இங்கிலாந்துக்குப் போனாரோ, என்னமோ?

யுத்தம் முடிந்தது!

வாழ்க யுத்தம்!!

தேசத்தை ஆளும் ராஜா இறந்து போனால், அதை, "மகாராஜா காலமானார்! வாழ்க மகாராஜா!" என்று கோஷமிட்டு அறிவிப்பது வழக்கமாம்!

ஏனென்றால், ஒரு ராஜா இறந்து போன தட்சணமே, அவருடைய ஸ்தானத்தில் இன்னொரு ராஜா இராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொண்டு விடுகிறார் அல்லவா? பகிரங்கமான பட்டாபிஷேக வைபவம் கொஞ்ச காலம் கழித்து நடக்கலாம்; ஆனால் ஒரு ராஜாவின் மூச்சுப் போகும் அதே க்ஷணத்தில் இன்னொரு ராஜா பட்டத்துக்கு வந்து விடுவதாகச் சம்பிரதாயம்.

அது போலவே, ஐரோப்பாவில் முடிந்து போன யுத்தத்துக்கு நாம் சரம சுலோகம் படித்துவிட்டு, அதே மூச்சில் வரப்போகும் யுத்தத்துக்கு நல்வரவு கூறவேண்டியதாயிருக்கிறது!

நல்வரவு என்றால், ஏதோ யுத்தத்தின் மேலுள்ள ஆசையினால் அதை அன்புடனும் ஆர்வத்துடன் வரவேற்கிறோம் என்று அர்த்தமில்லை. எப்படியும் வந்து தொலைக்கப் போகிற யுத்தத்துக்குச் சம்பிரதாயமாக நல்வரவு கூறுகிறோம். அவ்வளவுதான்.

* * *

ஐரோப்பிய யுத்தமானது, முடியும் போது திடீரென்று முடிந்து விடும் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். அப்படி அவ்வளவு திடீர் என்று, தூக்கிவாரிப் போடும் படியாகவும், திடுக்கிடும்படியாகவும், ஐரோப்பிய யுத்தம் முடிந்து விடவில்லை.

இரண்டு வாரத்துக்கு மேலாக இழுத்துப் பறித்துக்கொண்டு கிடந்தது. ரேழியில் தூக்கிப் போட்ட பிறகும் சிலநாள் உயிரோடு மன்றாடி விட்டு, 'இருக்கட்டுமா, போகட்டுமா' என்று இருநூறு தடவை கேட்டுவிட்டு, கடைசியில் வேண்டா வெறுப்பாகத்தான் ஐரோப்பிய யுத்தமானது பிராணனை விட்டுத் தொலைத்திருக்கிறது.

இந்த யுத்தத்துக்கு ஆதி மூல கர்த்தாவான முஸோலினிதான் யுத்த முடிவுக்கும் அங்குரார்ப்பணம் செய்தார்.

இரண்டு வாரத்துக்கு முன் அவர் பட்டப் பகலில் பகிரங்கமாகக் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்தது.

பிறகு, ஹிம்லர் சமாதானத் தூது பற்றி செய்தி வந்தது.

பிறகு, ஹிட்லரின் மரணச் செய்தி வந்தது.

அப்புறம் இதாலியில் பத்து லட்சம் ஜெர்மானியர் சரணடைந்த செய்தி கிடைத்தது.

பிறகு, ஒவ்வொரு போர் முனையிலிருந்தும் "அங்கே ஜெர்மன் படைகள் பணிந்தன; இங்கே சரணடைந்தன" என்ற செய்திகள் வந்தன.

கடைசி கடைசியாக, மே 7உ ஜெர்மனியின் புதிய தலைவர் அட்மிரல் டோனிட்ஸ் நிபந்தனையற்ற பூரண சரணாகதிக்குத் தயாரானார். நேச தளபதி ஐஸன்ஹவரின் முன்னிலையில் சரணாகதிப் பத்திரம் கையெழுத்திடப் பட்டது. இரு தரப்பிலும் "யுத்த நிறுத்த" உத்திரவு பிறந்தது.

சர்ச்சில் முதலியவர்கள் ரேடியோவில் வெற்றி முழக்கம் செய்துவிட்டார்கள்.

8உ 9உ 10உ செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை வியாழக்கிழமைகளில் வி. தினம் கொண்டாடியாகிவிட்டது.

ஆகவே, ஐரோப்பாவில் யுத்தம் நிச்சயமாக முடிந்துவிட்டது.

* * *

ஏன் இதை இவ்வளவு நிச்சயப்படுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறதென்றால், ஒரு வேளை நம் நாட்டில் இன்னும் சிலர் ஐரோப்பிய யுத்த முடிவைப் பற்றி அவநம்பிக்கைப் படக்கூடும் என்பதற்காகத்தான்.

பாவம்! யுத்தப் பொய்ப் பிரசாரங்களைக் கேட்டுக் கேட்டு இவர்களுக்கு யுத்தத்தைப் பற்றி என்ன செய்தி வந்தாலும் நம்பிக்கை கொள்ள முடியாமல் போய்விட்டது.

தளபதி ரோமல் வட ஆப்பிரிக்காவில் பின் வாங்க ஆரம்பித்தபோது,

இவர்கள், "ரோமல் வெறுமனே பின் வாங்கவில்லை; ஏதோ ஒரு வேலைத்தனம் செய்யப் போகிறான்!" என்றார்கள்.

வட ஆப்பிரிக்காவைக் காலி செய்து விட்டுக் கிளம்பியபோது, "மத்யதரைக் கடலிலே ஏதோ ஒரு வெடி வைக்கப் போகிறான்!" என்று நம்பினார்கள்.

"இதாலியில் கூட்டி வளைத்துக் கொள்ளப் போகிறான்" என்றார்கள்.

ருஷியர்கள் முன்னேறி வந்தபோது, "பார்த்துக் கொண்டே இருக்கான்; திடீரென்று ஒரே அமுக்காய் அமுக்கப் போகிறான்!" என்று சொன்னார்கள்.

பிறகு, "ஜெர்மனிக்குள் காலை வைக்க முடியாது!" என்றார்கள்.

ஜெர்மனிக்குள்ளே இரு பக்கத்திலும் படைகள் புகுந்த பிறகு, "எல்லாரையும் உள்ளே விட்டு ஒரே அபக்காய் ஸ்வாஹா செய்யப் போகிறான்; பூகம்பத்தையும் எரிமலையையும் ஏவப் போகிறான்!" என்றார்கள்.

இனிமேலுங்கூட அந்த அவநம்பிக்கைப் பேர்வழிகள், "ஹிட்லர் பிசாசு ரூபத்தில் வந்து ஹதா ஹதம் செய்யப் போகிறார்" என்று சொன்னாலும் சொல்வார்கள்.

பேய் பிசாசுகளிடத்தில் நம்பிக்கையுள்ள மனிதர்கள் எதைத்தான் நம்ப மாட்டார்கள்?

ஆனால், நம்மைப் பொறுத்த வரையில் ஜெர்மனியின் முடிவான தோல்வியை நாம் நிச்சயமாக எதிர் பார்த்தோம். எனவே, இப்போது ஜெர்மனி தோல்வியடைந்து விட்டது என்பதிலாவது, ஐரோப்பிய யுத்தம் முடிந்து விட்டது என்பதிலாவது நமக்கு என்னவும் அவநம்பிக்கை கிடையாது.

* * *

ஐரோப்பாவின் யுத்தம் முடிந்து விட்டது என்பது உண்மைதான்; சர்வ நிச்சயமான விஷயந்தான்.

ஆனால் சமாதானம் ஏற்பட்டு விட்டதா?— அதுதான் இல்லை.

ஆறு வருஷமாகக் கேட்டுக்கொண்டிருந்த கர்ணகடூரமான வெடிகுண்டுச் சத்தங்களும், பீரங்கி முழக்கங்களும், அபாயச் சங்கு அலறுகைகளும், வி. குண்டுகளின் பயங்கர ஓலங்களும், டாங்கி நடமாட்டத்தின் ஓசைகளும், துப்பாக்கி வெடி தீர்க்கும் ஒலிகளும்— இவை யெல்லாம் இன்று ஐரோப்பாவில் நின்று விட்டன. வானத்திலும் பூமியிலும் நிச்சப்தம் நிலவுகிறது.

ஆனால், ஐரோப்பிய மக்களின் உள்ளத்திலே அமைதி நிலவுகிறதா? சமாதானம் ஏற்பட்டு விட்டதா? துவேஷமும் பகைமையும் மனத்தை விட்டுப் போய் விட்டதா?

அதுதான் இல்லை.

முன்னைவிட அவை பன்மடங்கு அதிகமாக வளர்ந்திருக்கின்றன.

வெளியிலே பீரங்கிகளும் டாங்கிகளும் நெருப்பைக் கக்குவது நின்று விட்டது.

ஆனால் ஜெர்மானிய மக்கள் எட்டுக் கோடிப் பேரின் உள்ளங்களிலே தீமலைகள் நெருப்பைக் கக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் தோல்வியானது, பயங்கரமான — மகத்தான தோல்வியானது, ஜெர்மன் மக்களின் உள்ளங்களின் மனக்கசப்பைப் பன்மடங்கு வளர்த்து வருங்காலத்தில் பழிவாங்க வேண்டுமென்ற குரோதத்தையும் உண்டாக்கியிருக்கிற தென்பதில் ஐயமில்லை.

மேற்படி மனக்கசப்பிலும் குரோதத்திலும்தான் அடுத்த மகா பெரும் யுத்தத்துக்கு விதைகள் இருக்கின்றன.

* * *

சென்னுளிராமனோ, வேறு யாரோ, "இருந்தும் கெடுத்தான்: செத்தும் கெடுத்தான்!" என்பார்களே, அது போல், ஜெர்மனியர் தோல்வியடைந்து சரணாகதி யடையும்போதும், ஐயித்த கட்சியினருக்கு இல்லாத சங்கடங்களை யெல்லாம் உண்டாக்கி விட்டிருக்கிறார்கள்.

முதலில், சரணாகதி அடைந்திருக்கும் ஜெர்மன் சோல்ஜர்களின் தொகையை எண்ணிப் பாருங்கள். அற்ப சொற்பமல்ல; கொஞ்ச நஞ்சமல்ல; ஒரு கோடி சோல்ஜர்கள்!

ஐரோப்பாவில் பிரிட்டிஷ்-அமெரிக்க வீரர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ, அவர்களைவிட அதிகமான ஜெர்மன் சோல்ஜர்களை அவர்கள் கைதிகளாக வைத்துக் காப்பாற்றிக் காவல் புரிந்து சாப்பாடு போட்டு உடை கொடுத்து சம்ரக்ஷித்தாக வேண்டும்!

பிரிட்டிஷ்-அமெரிக்கர்களின் தொல்லையை இது விஷயத்தில் இன்னும் அதிகமாக்கும்படியான காரியத்தையும் ஜெர்மானியர் செய்திருக்கிறார்கள்.

"ருஷியர்களுக்குச் சரணடைய மாட்டோம்; பிரிட்டிஷ் அமெரிக்கர்களுக்குத்தான் சரண் அடைவோம்" என்று

பிடிவாதம் பிடித்த காரணத்தினால், இந்தப் பக்கத்தில் கைதிகளின் தொகை அதிகமாகி விட்டது.

இவ்விதம் செய்ததில் ஜெர்மானியரின் சாதி அகம்பாவம் வெளியாயிற்று; அதோடு "பிரிட்டிஷ்-அமெரிக்காவிடந்தான் சரணடைவோம்" என்று ஜெர்மானியர் சொன்னதில், பிரிட்டிஷ்-அமெரிக்கருக்கும் ருஷியருக்கும் சண்டை மூட்டிவிட வேண்டும் என்னும் நோக்கம் முக்கியமானது என்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த நோக்கத்தில் ஜெர்மானியர் உடனே வெற்றி பெறவில்லை. ஏனெனில், பிரிட்டிஷ்-அமெரிக்கத் தளபதிகள், "கிழக்கு அரங்கத்தில் சண்டை போட்டவர்கள் ருஷியர்களுக்கே சரணாகதி அடையவேண்டும்" என்று திருப்பியடித்திருக்கிறார்கள்.

ஆனால், நாளடைவில் ஜெர்மானியரின் கடைசி மித்திர பேத தந்திரம் ஓரளவு வெற்றியடையாது என்று சொல்வதற்கில்லை.

வேறு பல காரணங்களினால் ருஷியாவுக்கும் பிரிட்டிஷ் - அமெரிக்கருக்கும் ஏற்படும் தகராறுகளுக்கு மேற்படி ஜெர்மன் தந்திரம் தூபம்போட்டு விடுமானால், அதில் வியப்படைவதற்கில்லை.

* * *

ஆகவே, இந்த யுத்தத்தின் முடிவிலேயே அடுத்த யுத்தத்துக்கு வேண்டிய மூலகாரணங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது. அது என்னவென்றால், இந்த யுத்தத்தின் போது இருதரப்பினரும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பயங்கர இரகசிய ஆயுதங்கள் தான்! பொல்லாத ஆயுதங்கள்! கொடூர ஆயுதங்கள்; ஸினிமாவில் அவற்றைப் பார்க்கும் போதே; கதி கலங்க வைக்கும் ஆயுதங்கள்!

இவ்வளவு இரகசிய ஆயுதங்களையும் இந்த யுத்தத்தில் நன்றாக உபயோகப் படுத்த இரு தரப்பாருக்கும் சந்தர்ப்பம் போதவில்லை.

"இரும்பு பிடித்தவன் கை சும்மா இராது" என்பது பழமொழியல்லவா? அந்த இரகசிய ஆயுதங்களை யெல்லாம் பூரணமாக உபயோகப் படுத்திப் பார்க்க இன்னொரு யுத்தம் ஏற்பட்டே தீர வேண்டு மல்லவா?

அப்படி வரும் அடுத்த யுத்தம் யாருக்கும் யாருக்கும் வரும் என்று இப்போது நாம் சொல்வதற்கில்லை யென்றாலும், அது இந்த யுத்தத்தைக் காட்டிலும் பன்மடங்கு கொடுமையாயிருக்கு மென்றும், உலகத்தின் பெரும் பகுதி அழிவதற்குக் காரணமாயிருக்கக் கூடும் என்றும் சொல்லலாம்.

* * *

அப்படிப்பட்ட பெரும் விபத்திலிருந்து உலகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு இரண்டு காரியங்கள் இன்றியமையாதவை.

அதாவது, உலகத்திலிருந்து ஏகாதிபத்தியம் முதலாளித்வம் என்னும் இரு முறைகளும் ஒழியவேண்டும்.

ஒரு தேசம் இன்னொரு தேசத்தை ஆளுவது என்பது போகவேண்டும். ஒருவனுடைய லாபத்துக்காக இன்னொருவனை உபயோகிப்பது என்பதும் போகவேண்டும்.

ஒவ்வொரு நாடும் அந்த நாட்டு மக்களுக்குப் பொது உடைமையாக வேண்டும்.

உலகமானது மனித சமூகத்தின் பொது உடைமையாக வேண்டும்.


அப்போதுதான் இந்த உலகத்திலிருந்து யுத்தத்தையும் யுத்த பீதியையும் நிரந்தரமாக ஒழிக்க முடியும்.



ஒரு சமயம் ஹிட்லரும், கோயரிங்கும் ஊரை விட்டு ஓடப் பார்த்தார்கள். அதற்காக ஹிட்லர் ஒரு கிழவனைப் போலவும், கோயரிங் ஒரு கிழவியைப் போலவும் வேஷம் போட்டுக் கொண்டார்கள். வேஷம் சரியாகப் பொருந்தி யிருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள். ஹோட்டல் வேலைக்காரி இவர்களைக் கண்டதும் சாப்பாடு வகைகள் கொண்டு வந்து வைத்தாள். அவர்கள் சாப்பிட்டு முடித்ததும், வேலைக்காரி அவர்களைப் பார்த்து, "ஹலோ ஹிட்லர்! ஹலோ கோயரிங்! சௌக்கியமா?" என்று விசாரித்தாள்.

இதைக் கேட்டதும் ஹிட்லரும், கோயரிங்கும் திகைத்துப் போய், "எங்களை நீ எப்படி அடையாளம் கண்டு பிடித்தாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஸ்திரீ, "நான்தான் கெப்பல்ஸ். ஊரைவிட்டு ஓடுவதற்காக இந்த வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றான்!

நிகழ்ச்சிச் சித்திரம்



வேவல் ராஜீனாமா???

மர்மம் வெளியாகிவிட்டது! குட்டு உடைந்துவிட்டது! இரகசியம் பகிரங்கமாகி விட்டது! வேவல் டில்லியிலிருந்து கிளம்பிய போது ஏதோ ஒரு மர்மமான பொருளைக் கையினால் மர்மமாக எடுத்துச் சட்டைப் பையில் மர்மமாகப் போட்டுக்கொண்டார் அல்லவா? அந்த மர்மமான பொருள் என்ன என்கிற விஷயம் பூலோகத்திலுள்ள சகல மனிதர்கள் பசு பட்சிகள் எல்லாருடைய புத்தியையும் கலக்கிக் கொண்டிருந்ததல்லவா? வேவல் கொண்டு போன அந்த மர்மமான பொருள் அவருடைய ராஜீனாமாக் கடிதந்தான்!

வைஸராய் பதவிக்கு ஒரு தலைமுழுக்கு! கவர்னர் ஜெனரல் உத்தியோகத்துக்கு ஒரு பெரிய ஸ்நானம்! இருபதினாயிரம் சம்பளத்துக்கும், புது டில்லி மாளிகைக்கும், இனை வீரா சுகபோகங்களுக்கும், எல்லாவற்றுக்கும் தர்ப்பயாமி! ஹரோ ஹரா!

இந்தப் பதவி, உத்தியோகம், சுகபோகம் மண்ணாங்கட்டி, தெருப் புழுதி—எல்லாம் யாருக்கு வேண்டும்?

வேவலுக்கு வேண்டியதில்லை!

இந்தியாவுக்கு இந்த க்ஷணமே சுயராஜ்யம் கொடுத்தால் சரி; இல்லாவிட்டால் வேவலுக்கும் வைஸராய்ப் பதவி வேண்டாம்!

"ஓ சர்ச்சிலே! அமெரியே! பார்லிமெண்டு அங்கத்தினரே! கேளுங்கள்! இந்தியாவுக்கு உடனே, இப்போதே, இந்த நிமிஷமே சுயராஜ்யம் கொடுத்து விடுங்கள்! நான் திரும்பிப் போகும்போது அதை என் கையிலே எடுத்துக் கொண்டு போக வேண்டும்.

இல்லாவிட்டால், இதோ எனது ராஜீனாமாவை ஏற்றுக் கொள்ளுங்கள். சுயராஜ்யம் பெறாத இந்தியாவில் இனி ஒரு நிமிஷங்கூட என்னால் வைஸராய் பதவி வகிக்க முடியாது!"

......இப்படிக் கண்டிப்பாகச் சொல்லி விடுவது என்ற தீர்மானத்துடனே வைஸராய் வேவல் தம் சட்டைப் பையில் ராஜீனாமாவுடனும், தமது திருவாயில் 'அல்ட்டிமேட்ட'த்துடனும் ஆங்கில நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தாரா?

சரி; என்ன உத்தேசத்துடன் போனாரோ, அந்த உத்தேசத்தைப் பிடிவாதமாக அங்கே நிறைவேற்றியும் வருகிறார்.

அதாவது அமெரியையும் சர்ச்சிலையும் அடிக்கடி சந்தித்து, "இதோ ராஜீனாமா! பிடியுங்கள்! எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று அவர்களுடைய பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறார். வேவலுக்குப் பயந்து அவர்கள் ஆனமட்டும் ஓடி ஒளியப் பார்க்கிறார்கள். ஒளிய முடியாமல் அகப்பட்டுக் கொண்டதும் வேவலின் மோவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு "அப்பனே! ஐயனே! என் கண்மணி! என் செல்வமே! வேவல் துரையே! இன்னும் கொஞ்ச நாள் பொறு! உன்னை விட்டால் இங்கிலாந்துக்கு வேறு யார் கதி? இந்தியாவுக்குத்தான் யார் கதி? வைஸராய் பதவிக்குத் தகுந்தவர் இங்கு வேறு யார் உளர்? கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடி. இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமென்றுதானே சொல்கிறாய்? அதற்கென்ன. கொடுத்து விட்டால் போகிறது! சற்று உட்கார்ந்து, எந்தெந்த விதத்தில் எப்படி எப்படி இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கிறதென்பது பற்றி யோசிக்கலாம்!" என்று அமெரியும் சர்ச்சிலும் வேவலுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

ஆனாலும் வேவல் கேட்கிற வழியாயில்லை. "அதெல்லாம் முடியாது;. இதோ என் ராஜீனாமா!" என்று ராஜீனாமாக் கடிதத்தை அவர்களுடைய கையிலே திணித்துக் கொண்டிருக்கிறார்.

* * *

மேற்கண்ட விதமான செய்திகள் சென்ற ஏப்ரல் மாதக் கடைசியில் இந்தியப் பத்திரிகைகளில் எல்லாம் வெளியாகிக் கொண்டிருந்தன. சில பத்திரிகைகள் மேற்படி செய்திகளுக்கு நாலு பத்தித் தலைப்புப் போட்டன. சில பத்திரிகைகள் பக்கம் பூராவும் அடைக்கும்படி தலைப்புப்

போட்டன. வேறு சில பத்திரிகைகள் "வேவலின் ராஜிநாமா?"வுக்கு ஒரு பெரிய கேள்விக் குறியைப் போட்டு, மர்மத்தை இன்னும் மகா மர்மமாக்கி விட்டன!

பத்திரிகை படிக்கும் அப்பாவி ஜனங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோ லிருந்தது. "இதென்ன கூத்து? வேவலாவது ராஜிநாமாவாவது" என்று அவர்களுக்கு வியப்பாயிருந்த போதிலும், தங்களுடைய கண்களை எப்படி அவர்கள் நம்பாமலிருக்க முடியும்? பத்திரிகையில் அச்சடித்த விஷயத்தைத்தான் எப்படி நம்பாம லிருக்க முடியும்?

வேவலின் ராஜிநாமாவைப் பற்றிய செய்திகளை யாரோ இங்கிலாந்திலுள்ள துப்பறியும் நிபுணர்கள், ஜால வித்தையறிந்த பத்திரிகை நிருபர்கள், விஷயமறிந்த வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் — இவர்கள் எப்படியோ கண்டு பிடித்து இந்தியாவுக்கு அனுப்பி வருகிறதாகவே இந்திய ஜனங்கள் நம்பினார்கள்.

எனவே, ஒவ்வொரு நிமிஷமும் மேற்கொண்டு பெரிய செய்தியை இந்திய மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சர்ச்சிலின் சரணாகதி!"

"அமெரி வேவலுக்குப் பணிகிறார்!"

"இந்தியாவுக்கு இந்த க்ஷணமே பூரண சுதந்திரம்!" என்பது போன்ற மகத்தான செய்திகளையோ, அல்லது,

"அமெரி, சர்ச்சிலின் அசட்டுப் பிடிவாதம் — வேவலின் ராஜிநாமா — வைஸ்ராய் பதவி காலி!" என்பது போன்ற திடுக்கிடும் செய்திகளையோ இந்திய மக்கள் எதிர்பார்க்கலானார்கள்.

பெர்லின் வீழ்ச்சி, முஸோலினியின் முடிவு, ஹிட்லரின் மறைவு, ஜெர்மன் படைகளின் சரணாகதி முதலிய பிரமாத பிரம்மாண்டமான நிகழ்ச்சிகளைக் காட்டிலும் அமெரி — சர்ச்சில் — வேவல் சண்டையானது இந்திய மக்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்திருந்தது.

இன்னும் சிலர் மேற்படி செய்திகளை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கட்டத் தொடங்கினார்கள்.

"பார்த்தீர்களா, காங்கிரஸின் பலத்தை! காங்கிரஸுக்குப் பயந்துகொண்டுதானே வேவல் விழுந்தடித்து ஓடியிருக்கிறார்? காங்கிரஸின் பலத்துக்குப் பயந்துதானே அவர் சர்ச்சிலிடமும் அமெரியிடமும் சண்டை போட்டு இந்திய சுயராஜ்யத்தைப் பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொண்டு வரப்போகிறார்!" என்று கூறி, "மகாத்மா வேவலுக்கு ஜே!" என்று கோஷமிட்டார்கள்.

இன்னும் சிலரோ, "வேவல் இந்தியா முழுவதிற்கும் பூரண சுயராஜ்யம் கொண்டு வருவதற்காகப் போயிருக்கும்போது, கேவலம் மாகாண மந்திரிகளைப் பற்றிச் சிலர் பேசுகிறார்களே? இது என்ன வெட்கக்கேடு?" என்று சொல்லிவிட்டு, அவசரமாக மேற்குத் திக்கை நோக்கித் திரும்பி 'ஆ!' என்று வாயைத் திறந்தவண்ணம் தவம் செய்யத் தொடங்கினார்கள். வைஸ்ராய் வேவல் கொண்டுவரப் போகும் பூரண சுதந்திரம் அப்படியே முதலில் தங்கள் வாயில் வந்து விழட்டும் என்பதற்காகத்தான்!

• • •

கடைசியாக, இங்கிலாந்திலிருந்து ஒரு செய்தி வந்தது. அது என்னவென்றால் "இந்தியாவி லிருந்து கிடைத்திருக்கும் வேவல் ராஜிநாமாவைப் பற்றிய செய்திகள் பரம முட்டாள்தனம்! அமெரியோடும் சர்ச்சிலோடும் வேவல் சண்டை போடுகிறார் என்பது சுத்த அபத்தம்" என்பதுதான்.

அதாவது, வேவல் ராஜிநாமாவைப் பற்றிய செய்திகளுக்கெல்லாம் மூல உற்பத்தி ஸ்தானம் இங்கிலாந்து அல்ல! இந்தியாதான்! லண்டனில் வேவலுக்கும் அமெரிக்கும் சர்ச்சிலுக்கும் பரம இரகசியமாக, வெகு அந்தரங்கமாக, மூடு மந்திரமாக நடக்கும் சண்டைகள் இங்கே இந்தியாவிலுள்ள யாருக்கோ ஞான திருஷ்டியினால் தெரிந்துவிட்டது! தெரிந்த மகானுபாவர் அதைத் தமக்குள் வைத்துக் கொள்ளாமல் வெளிப்படுத்தி விட்டார். அது இங்கிலாந்துக்குப் போய் எட்டி, அதை அங்கே மறுதளிக்க வேண்டி நேர்ந்து விட்டது! எப்படி யிருக்கிறது கதை! இதைப் பரம முட்டாள்தனம் என்றாலும், பிரம்மாண்ட மடத்தனம் என்றாலும், மகத்தான அபத்தம் என்றாலும், அபார அசட்டுத்தனம் என்றாலும் போதாது என்று தோன்றுகிறது அல்லவா! இந்த அசட்டுத்தனத்துக்கு நமது பத்திரிகைகள் இவ்வளவு தூரம் முக்கியம் கொடுத்துப் பிரமாதப்படுத்தும் ஆச்சரியத்தை என்னவென்று சொல்வது!

உண்மை என்னவென்றால், மேற்கூறியது போன்ற செய்திகள் அசட்டுத்

தனத்தையோ மூட்டாள் தனத்தையோ சேர்ந்தவை யல்ல.

பெரியதொரு சூழ்ச்சியையும், பொதுஜன வஞ்சகத்தையும், தேசத் துரோகத்தையும் சேர்ந்தவை.

சென்ற மூன்று, நாலு வாரங்களாகவே நேயர்கள் கவனித்திருக்கலாம். திடீர் திடீரென்று சில செய்திகள் வந்துகொண்டிருக்கும். “இதோ, பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸிடம் சரணாகதி அடையப் போகிறார்கள். ராஜிக்கு ஓடி வரப் போகிறார்கள். அரசாங்கத்தை அப்படியே பின்னாமல் விரியாமல் ஒப்புவித்துவிடப் போகிறார்கள்!” என்பது போன்ற செய்திகள்தான்.

இவையெல்லாம், யாரோ விஷயமறிந்த வட்டாரங்களில் பழகுகிறவர்கள் ஆதாரமாகத் தெரிந்து வெளியிட்ட நிச்சயமான செய்திகள் என்ற ரீதியில் பிரசுரிக்கப்படும்.

இப்படிப்பட்ட செய்திகள் என்ன வஞ்சக நோக்கத்துடன், யாரால் வெளியிடப்படுகின்றனவென்றால்:—

இந்தியாவில் அரசாங்க நிர்வாகம் இப்போது உள்ளதுபோலவே இருக்கவேண்டும், அதிகாரவர்க்க ஆட்சியே நடைபெற வேண்டும் என்ற எண்ணமுள்ள ஒரு கூட்டம் இந்தியாவில் இருக்கிறது. இப்போதுள்ள ஆட்சி முறையிலேதான், அதிலும் இந்த யுத்த காலத்திலே, அவர்கள் பலவிதமான நாகரிக பொதுஜனக் கொள்ளைகளை நடத்தலாம்!

மாகாண சர்க்காரிலோ, மத்திய சர்க்காரிலோ பொதுஜன ஆட்சி ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய கொள்ளை லாபங்களுக்கு அபாயம் வந்துவிடும்.

எனவே, அப்படிப் பட்டவர்கள்தான், காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் அநியாயமாக ராஜி ஏற்பட்டுவிடப் போகிறதே என்ற பயத்தினால், “சர்க்காரின் நிபந்தனையற்ற சரணாகதி”ச் செய்திகளை அடிக்கடி பரப்புகிறார்கள். “பிரிட்டிஷ் சர்க்கார் இதோ காங்கிரஸ் தலைவர்களின் காலில் வந்து விழப் போகிறார்கள்” என்று சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட செய்திகளினால் பொது ஜனங்களுக்கும் காங்கிரஸ் வாதிகளுக்கும் என்ன எண்ணம் தோன்றுகிறது?

“பிரிட்டிஷ் சர்க்காரே சரணாகதி அடையப் போகும் சமயத்தில் நாம் எதற்கு அவசரப்பட வேண்டும்? சும்மா இருக்கலாம்!” என்று தோன்றுகிறது.

நிலைமை எப்போதும் போல் இருக்கிறது. அதிகார வர்க்க ஆட்சி நியமமாய் நடந்து கொண்டிருக்கிறது. கொள்ளை யடிக்கிறவர்கள் அடித்துக் கொண்டே இருக்கிறார்கள். பாவம்! ஜனங்கள் இலவு காத்த கிளியைப் போல் காத்துக் கொண்டே இருக்கிறார்கள்!

* * *

இந்திய நாட்டின் சுதந்திரத்துக்காக அமெரியிடமும் சர்ச்சிலிடமும் வேவல் சண்டை போடுகிறார், ராஜிநாமாவே செய்யப் போகிறார் — என்று ஒரு செய்தி வெளியாயது. அதை இந்தியர்கள் படித்துப் பரவசமடைவது என்றால், நம்மவர்கள் அரசியல் அறிவில் எவ்வளவு குழந்தைப் பருவத்தில் இருக்கிறார்கள் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்தபோது, சமரசம் ஏற்படுவதற்குப் பெரிய முட்டுக் கட்டை போட்டவர் வைஸராய் வேவல் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அப்படிப்பட்டவர் எதற்காக இப்போது “இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்காவிட்டால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவேன்; அல்லது ராஜிநாமா செய்வேன்” என்று சொல்லவேண்டும்! இதில் அணுவளவாவது நம்பத்தகுந்த அம்சம் இருக்க முடியுமா? தளபதி வேவல் இதுவரையும் இந்தியாவில் செய்திருக்கும் காரியங்களிலிருந்து, நடந்து கொண்டிருக்கும் பான்மையிலிருந்து, அப்படி நினைப்பதற்குக் கொஞ்சமாவது இடமிருக்கிறதா?

அல்லது வேவல் அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்காகத்தான் போயிருக்கிறார் என்றாவது, காங்கிரஸை எப்படியாவது சமரசப் படுத்திக் கொள்ள ஆசைகொண்டு அதற்காகத் தான் போயிருக்கிறார் என்றாவது சொல்ல அணுவளவேனும் நியாயமான காரணம் ஏதேனும் இருக்கிறதா?

ஒன்றுமில்லை; ஆயினும் இப்படிப் பட்ட வதந்திகள் அடிக்கடி கிளம்புகின்றன; பிரசுரமாகின்றன; இந்தப் பிரசாரத்தி

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஆர். ராமசுப்ரமண்யன். (விலாசம் தெரிவிக்கவும்.)

லுள்ள வஞ்சக நோக்கத்தை அறியாதவர்கள் நம்பவும் நம்புகிறார்கள்.

* * *

நல்லது; நாம் நம்புவது என்னவென்று சொல்கிறோம்.

வேவல் இங்கிலாந்துக்குப் பறந்து போனதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

ஜப்பானுடன் மேலே யுத்தம் நடத்துவது பற்றிக் கலந்தாலோசிக்கப் போயிருக்கலாம்.

பஸிபிக் அரங்கத்தில் பிரிட்டிஷ் எல்லை எது, அமெரிக்க எல்லை எது என்று தெரிந்து கொள்ளப் போயிருக்கலாம்.

ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றும் பர்மா, மலாய் நாடுகளின் ஆட்சி முறையைப் பற்றி ஆலோசிக்கப் போயிருக்கலாம்.

இதையெல்லாம் பற்றி நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கொண்டு வருவதற்காக அவர் நிச்சயமாய்ப் போகவில்லை.

இந்தியாவின் மண்ணை விட்டுக் கிளம்பும் உத்தேசம் வைஸராய் வேவலுக்கும் கிடையாது; பிரிட்டிஷாருக்கும் கிடையாது. அதற்காக இவ்வளவு அவசரப்பட்டு வேவல் இங்கிலாந்துக்குப் பறந்து போனார் என்பது அறிவீனத்தின் எல்லையாகும்.

* * *

இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக, வைஸராய் வேவல் திரும்பி வரும்போது ஒரு திட்டத்தைக் கொண்டு வரக்கூடும்.

ஆனால், அந்தத் திட்டமானது நிச்சயமாகப் பூரண சுதந்திரத்தை இந்தியாவுக்கு அளிக்கக்கூடிய திட்டமாயிராது.

முக்கால் சுதந்திரத்தைக்கூட அது இந்தியாவுக்கு அளிக்காது.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் கொண்டு வந்த திட்டத்தைக் காட்டிலும் வேவலின் திட்டம் குறைவானதாய்த்தான் இருக்கும்.

ருஷியர்களும் அமெரிக்கர்களும் தங்களை ஏசிக் காட்டாமலிருப்பதற்காகவும், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியைப் போன்றவர்கள் தங்கள் மானத்தை வாங்காமலிருப்பதற்காகவும், ஒருகால் இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்க்க பிரிட்டிஷார் விரும்புவார்கள்.

ஆனால் அந்த விருப்பமானது, இந்தியாவுக்கு உடனே பூரண சுதந்திரத்தைக் கொடுத்துவிடும் அளவுக்கு ஒருநாளும் போகாது.

உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு வரையிலேதான் போகும்.

* * *

நட்டியில் நுழைந்தால் கோலத்தில் நுழைவது என்பார்களே, அதுபோல பிரிட்டிஷாரின் அரசியல் சூழ்ச்சிகளைத் தெரிந்துகொண்டு, அந்த சூழ்ச்சிகளுக்கு மறு சூழ்ச்சிகள் செய்யக்கூடிய இராஜதந்திரிகள் இப்போது இந்தியாவின் நிலைமைக்குத் தேவை. இந்தியாவின் சுதந்திரத்தை பிரிட்டிஷாரின் விருப்பமில்லாக் கைகளிலிருந்து அறிவின் திறமையினால் சம்பாதிக்கக் கூடியவர்கள் தேவை.

கையிலே வந்த சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டு விட்டு, "வேவல் சுதந்திரம் கொண்டு வரப்போகிறார்!" என்று வாயைப் பிளந்து கொண்டிருப்பவர்களால் இந்தியாதேசம் ஒருநாளும் சுதந்திரம் அடையப் போகதில்லை.

யுத்த முடிவு



இவரை முதல் முதலில் எதிர்த்து நின்றவர் சர்ச்சில்தான்.
எதிர்த்து நின்ற பிரிட்டனில் பிளவு ஏற்படுத்துவதற்காக ஹெஸ்ஸை ககன மார்க்கமாக அனுப்பினார்.
ஹிட்லரின் பயமுறுத்தல்களைத் துளியும் பொருட்படுத்தாமல் ரூஸ்வெல்ட் பிரிட்டனுக்கு ஆயுதங்கள் கொடுத்து உதவினார்.
ஸ்டாலின்கிராட் போரில்தான் முதல் முதலாக நல்ல அடி கிடைத்தது.
ஸ்டாலின்கிராட்

-உம்மன்



முப்பெருந்தலைவர்களின் ஒற்றுமையைக் கண்டதும் நடுநடுங்கிப் போனார்.
கடைசியில் பேர்வழி சரியாகச் சிக்கிக் கொண்டார்.
நேசதேச பலம்
உலகத்தை அடிமை கொண்டு அடக்கியாளப் பார்த்தார்.
ஆனால் உலகம் அவரைக் குப்புறத் தள்ளி விட்டது.
சமதர்மம்
ஏகாதிபத்தியம்
சமாதானம்
சமாதான மங்கை இந்த இருவர்களில் யாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறாள்?

பாரதி ஞாபகச் சின்னம்

வைகாசி 21ல் அஸ்திவார விழா

"எடுத்த காரியம் நன்றாய் நடக்கட்டும்; வெற்றிகரமாக நடக்கட்டும்; எட்டயபுரம் பாரதி ஞாபகச் சின்னம் நடந்த மாதிரி நடக்கட்டும்!"—என்று இவ்விதமாக வருங்காலத்தில் புது முயற்சிகளுக்கு ஆசீர்வாதம் செய்யப்படலாமென்று தோன்றுகிறது.

தமிழ் நாட்டில் எவ்வளவோ நல்ல காரியங்கள் ஆரம்பமாகி நடந்திருக்கின்றன; துரிதமாகவும் வெற்றிகரமாகவும் நடந்திருக்கின்றன. எனினும், எட்டயபுரத்தில் பாரதியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்தும் முயற்சியைப் போல் ஏகமனதான ஆதரவைப் பெற்று இவ்வளவு துரிதமாகவும் தங்கு தடையில்லாமலும் நடந்த காரியம் உண்டா என்பது சந்தேகந்தான்.

ஏகமனதான ஆதரவு என்று சொல்லும் போது, இலங்கை முதல் இமயம் வரையில் வாழும் தமிழ் மக்களின் ஆதரவைப் பொதுவாகவும், தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் ஆதரவைச் சிறப்பாகவும் குறிப்பிடுகிறேன். தமிழ் நாட்டில் நடைபெறும் தினசரிகள், வாரப் பத்திரிகைகள், மாதமிரு முறைப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் எல்லாம் பல காரியங்களில் பல மாறுபட்ட கொள்கைகளை உடையனவாகும். அவை காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் அவ்வப்போது நடத்துவது உண்டு என்பதையும் நேயர்கள் அறிவார்கள். ஆனால் இந்த எட்டயபுரம் பாரதி ஞாபகச் சின்ன முயற்சி விஷயத்தில் தமிழ் நாட்டுத் தினசரிகள் முதல் மாதப் பத்திரிகைகள் வரையில் ஒருமுகமாக ஆதரித்து எழுதியதுடன் மேலும் மேலும் உதவி செய்து வந்தன.

மொத்தத்தில் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்—எழுத்தாளர்களின் பேராதரவினால்தான் இந்த ஞாபகச் சின்ன முயற்சியானது கொஞ்சம் பெரிய முயற்சியாகவே வளர்ந்து விட்டது!



அரசியலிலும் மற்றத் துறைகளிலும் உள்ள கருத்து வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல் இந்தப் புனித முயற்சியை ஆதரித்த பத்திரிகைக்காரர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்கு ஆரம்பமான காரியத்தை நல்ல முறையில் பூர்த்தி செய்ய அவர்கள் எல்லாருடைய நீடித்த ஒத்துழைப்பையும் உதவியையும் கோருகிறேன்.

• • •

முக்கியமாக நான் சொல்ல வந்த விஷயம் இது: எல்லாருடைய ஆதரவினாலும் நிதி வசூல் துரிதமாய் நடந்தது போலவே மற்றக் காரியங்களும் நடைபெறும் என்று தோன்றுகிறது. எல்லாவற்றுக்கும் அடிப்படையான காரியம், ஞாபகார்த்த நிலையத்துக்கு நிலம் சம்பாதிப்பதுதான் அல்லவா?—நிலம் கிடைத்து விட்டது!

எட்டயபுரம் மகாராஜா அவர்கள் நிதிக்கு ரூ. 501 நன்கொடை யனுப்பிய போது, "இன்னும் எல்லா விதமான உதவிகளும் செய்கிறேன்" என்று வாக்களித்திருந்தார். அதன்படியே, முதல் உதவி—அடிப்படையான உதவி—யைச் செய்து விட்டார். அதாவது, டி. கே. சி. அவர்களும் நானும் இந்தப் புது வருஷ ஆரம்பத்தில் எட்டயபுரம் போய்த் தெரிந்தெடுத்த பிரதேசத்தில், 83 செண்டு நிலம் தமது சொந்தப் பொறுப்பில் விலைக்கு வாங்கி பாரதி ஞாபகார்த்த நிலையத்துக்காக இனாம் சாஸனம் செய்து கொடுத்து விட்டார்.

எட்டயபுரம் ராஜா அவர்களின் தாராள மனப்பான்மையைப் பாராட்ட வேண்டியது ஒருபுறமிருக்க: மேற்படி நில நன்கொடை சம்பந்தமாக இரு வகைப் பத்திரங்களையும் எழுதி ஸப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரிஜிஸ்டர் செய்து இவ்வளவு சீக்கிரத்தில் நமது கைக்கு வரும்படி செய்த காரியத் திறமையையும் நாம் பெரிதும் பாராட்ட வேண்டியிருக்கிறது.

யாரைப் பாராட்டுவது என்றால், இந்த முயற்சி விஷயத்தில் இடைவிடா ஊக்கங் கொண்டு துடியாக நின்று காரியங்களை முடிக்கும் பாரதி இலக்கிய மன்றத்து இளைஞர்களையும், அவர்களுடைய போஷகர் ஸ்ரீ அமிருத

ஸாமியையும், தலைவர் ஸ்ரீ மு. கந்தசாமி செட்டியாரையுந்தான்!

சரி; நிலம் கைக்கு வந்து விட்டது. அடுத்தபடியாக நடக்கவேண்டிய காரியம் ஞாபகச் சின்னக் கட்டிட வேலை தொடங்க வேண்டியதுதான். கட்டிட வேலை தொடங்குவதென்றால் திடுதிப்பென்று ஒருவருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் ஆரம்பித்து விடலாமா? "கூடவே கூடாது; அதற்கு ஒரு விழா நடத்தித்தான் ஆகவேண்டும்!" என்று எட்டயபுரம் நண்பர்கள் அப்போதே பிடிவாதம் பிடித்தார்கள். "அஸ்திவார விழா நடத்துவதற்கு ராஜாஜிதான் வந்தாக வேண்டும்!" என்றும் அவர்கள் வற்புறுத்தினார்கள். இதெல்லாம் நான் எங்கே அசிரத்தையாக இருந்து விடப் போகிறேனோ என்று இலக்கிய மன்றத்தார் தங்கள் தலைவர் ஸ்ரீ மு. கந்தசாமி செட்டியாரைப் பத்திரத்துடன் சென்னைக்கு அனுப்பி விட்டார்கள். கடைசியில், நானது ஜூன் மீ 3உ ஞாயிற்றுக்கிழமை சுப முகூர்த்த தினத்தில் ராஜாஜியின் தலைமையில் அஸ்திவார விழா நடத்துவதென்று நிர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த விழாவுக்குத் தமிழன்பர்கள், இலக்கிய நண்பர்கள், கவிஞர்கள், ரஸிகர்கள், பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

சொந்த சௌகரியம், ரயில் நெருக்கடி முதலிய காரணங்களினால் இந்த ஆரம்ப விழாவுக்கு வர இயலாதவர்கள், அடுத்தபடியாக ஞாபகார்த்தக் கட்டிடம் கட்டி முடித்துத் திறப்பு விழா நடக்கும்போதாவது வருவதற்குச் சௌகரியப்படும் என்று நம்புகிறேன்.

• • •

பாரதியாருடைய வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதி அவர்களிடமிருந்து கிடைத்துள்ள பின்வரும் அருமையான கடிதத்தை அளவற்ற மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறேன்:

கைலாசபுரம்
30—4—45

எனது அருமைத் தமிழ் நாட்டுச் சகோதரர்களுக்கு.

29-ம் தேதி 'கல்கி'யில் வெளியான விஷயத்தைப் பார்த்தேன். கவிகளையும், அவர்கள் குடும்பத்தாரையும் ஆதரிப்பது தமிழ் நாட்டாருக்குப் புதிய வழக்கம் இல்லை. தொன்றுதொட்டே யுள்ள வழக்கம்தான். இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்க வேண்டும் என்ற கவியின் உபதேசப்படி நான் வாழ் நாளைக் கழித்து வந்திருப்பதால் வறுமை என்னை வென்று விடாது. ஆயினும் தமிழ் நாட்டு மக்களாகிய உங்கள் அன்பளிப்பைச் சந்தோஷத்தோடு பெற்றுக் கொண்டு எனது மனமார்ந்த நன்றியையும் ஆசீர்வாதத்தையும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். என் விஷயத்தில் இத்தனை சிரத்தை கொண்ட திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் வாதிகளுக்கும், எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்றத்தாருக்கும் எனது நன்றி.

"கல்கிக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். அவருக்கும் ஒரு அன்பளிப்பு வைத்திருக்கிறேன். எனது கணவர் அவர்கள் 'பாஞ்சாலி சபதம்' என்னும் இலக்கிய ரத்னத்தைப் பதிப்பிக்கும் போது, 'இந்தப் புஸ்தகத்தின் ஸமர்ப்பணம் யாருக்கு?' என்று கேட்டேன். 'இனி தமிழ் நாட்டில் வரப்போகும் கவிகளுக்கும், அவர்களை ஆதரிக்கப் போகும் பிரபுக்களுக்கும் சமர்ப்பிக்கப் போகிறேன்' என்றார்.

கவியின் ஹிருதய தாபம் வீண்போகாமல் இப்போது கவிகளும், அவர்களை ஆதரிக்கும் பிரபுக்களும் தோன்றியுள்ளார்கள். பாரதியாரின் அன்புக் காணிக்கை அன்பர் கல்கிக்கும் கிடைக்கும் என்று என் மனம் சொல்லுகிறது! வாழ்க தமிழ் நாடு!

செல்லம்மா பாரதி

கும்பாபிஷேக வைபவம்

புதுக்கோட்டையில் ஸ்ரீ மான்பூண்டியாப் பிள்ளை என்று பிரசித்திபெற்ற ஸ்ரீ முருகானந்த சுவாமிகள் சமாதி ஆலயத்தின் கும்பாபிஷேகம் ஆகம விதிகளின்படி நானது மே மீ 4உ மிக விமரிசையாக நடைபெற்றது. திருவிழிமிழலை சகோதரர்களின் புதல்வர்கள் நாதஸ்வரக் கச்சேரியுடன், மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலப் பிள்ளை, அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் ஆகியோர்களின் சங்கீதக் கச்சேரிகளும் அன்றைய வைபவத்தைச் சிறப்பித்தன. சுவாமிகளின் சிஷ்யர்களில் ஒருவரான சேத்தூர் ஜமீன்தார் அவர்கள் கும்பாபிஷேகச் செலவுகளை யெல்லாம் தாமே ஏற்று நடத்தியதுடன் அரியக்குடியின் கச்சேரியில் கஞ்சிரா வாசித்துக் குரு கைங்கரியம் செய்தார். அன்று சுமார் ஆயிரம் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

மேற்படி சுவாமிகளின் சமாதி ஆலயத்தை நிர்மாணிப்பதற்கும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கும் பெரும் பிரயத்தனங்கள் செய்து சிறப்பாக நிறைவேற்றி வைத்த மிருதங்க வித்வான் ஸ்ரீ பழனி சுப்பிரமண்யப் பிள்ளையைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

பெரும் ஞானமும் பழுத்த அனுபவமும் வாய்ந்த வித்வான்கள் வாத்தியம் ஒன்றைக் கையாண்டால் அந்தச் சங்கீதத்தின் விமரிசை பிரத்யேகந்தான். சென்ற மாதம் 30வ திருச்சியில் ஒன்றேகால் மணி நேரம் வாசித்த புதூரார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் கோட்டுவாத்யமே அதற்கு அத்தாட்சி. அநேகமாய் ஒவ்வொரு கிருதிக்கு முன்னும் அதன் ராகத்தை வாசித்தார். போற்றத்தக்க சுருதி சுத்தம்; அபஸ்வரமோ தேசலோ கிடையாது. அழுத்தமும் தெளிவும் கொண்ட சஞ்சாரங்கள்; கமகப் பொழிவு; மொத்தத்தில் மனத்தை உருக்கும் வழி; பைரவி, ஹிந்தோளம், கரஹரப்ரியா, முகாரி, தேவகாந்தாரி என்று ராகங்களையும் அவைகளின் உருப்படிகளையும் பொழிந்தார். வாசித்தது வாத்யமே யாயினும் உருப்படிகளில் கண்ட தெளிவும் பாவமும் வாய்ப்பாட்டுக்குரியது போல் பல தடவை பிரமை தட்ட வைத்தன. பைரவியும் முகாரியும் உருக்க உணர்ச்சி பெருகுவதில் உச்சத்தை யடைந்தன. 'அந்தருணம்', 'பக்கலநிலபடி' உருப்படிகளில் ஸ்வரம் ஜிலுஜிலுப்பாயிருந்தது.

ராகம் தானம் பல்லவி போன்ற தனி நிகழ்ச்சிக்காக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் மதிப்புக்குரிய வித்வானாய் இருக்க வேண்டாமா? 27வ சென்னையில் போட்டிருந்த அந் நிகழ்ச்சிக்கு வித்வான் பெயர் ஒன்றும் புரோகிராமில் அச்சிடப்படவில்லை. பாடிக் கேட்ட பிறகு பாடியவர் அம்மதிப்புக் குரியவரா என ரஸிகர்கள் தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டார்கள் போலும். எஸ். வி. பார்த்தசாரதிதான் பாடினார். சங்கராபரணத்தை ஆலாபனைக்கு எடுத்துக்கொண்டு அலசிவிட்டு, தானமும் பாடி, ''ஸ்ரீராம கோவிந்த முராரே முகுந்த சௌரே'' என்ற பல்லவியையும் ஒரு கை பார்த்தார். நல்ல ஞானம், சரளமான உதவுபடி, சிறந்த ராகபாவம், விறுவிறுப்பு, வேறென்ன வேண்டும்?

சென்ற மாதம் 22வ திருச்சியில் நடந்த கேசவ பாகவதருடைய கச்சேரி சிறந்து விளங்கியது. கனிப்பான குரல், நல்ல ஞான பாவம். தேவகாந்தாரி, வலஜி, ஷண்முகப்ரியா, நாட்டக்குறிஞ்சி ராகங்கள் சிறப்பாயிருந்தன. இறுதியில் கேட்ட ராகமாலிகையும் ஆனந்தார உருப்படியில் நிரவல் ஸ்வரங்களும் கவனத்தை ஈர்த்தன.

25வ கச்சேரிகளில் திருச்சியில் கே. ராமஸ்வாமி, சென்னையில் லால்குடி ஜயராமய்யம், எம். எஸ். சிவராஜன் இவர்களின் வாய்ப்பாட்டையும் சென்னையில் வெங்கடராமாநுஜத்தின் வயலின் வாத்யத்தையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. அதுபோலவே முன் 22வ திருச்சியில் கேட்ட கே. சபேசன் வீணை வாத்யமும். இவரது ஞானபாவத்திற்கேற்றபடி நாதமும் சேர்ந்தால் இவர் திறமை நன்கு சோபிக்கும். 26வ சென்னையில் கேட்ட ஆர். பிச்சுமணியின் வீணை வாத்யமும் குறிப்பிடத்தக்கது.

26வ சிருஷ்ணி ராமகிருஷ்ணன் பிற்பகலிலும் மாலையிலும் செய்த கச்சேரியில் தம்முடைய திறமையை விளக்கினார். குளிர்ந்த சாரீரம். அடக்கமும் நாளாகும் கொண்ட பாணி. எதையும் கச்சிதமாயும் ரஞ்சகமாயும் கையாளும் திறமை. கரஹரப்ரியா, சங்கராபரணம், கல்யாணி, தோடி ராகங்கள் நேர்த்தியாய் அமைந்தன. கல்யாணி கிருதியில் கண்ட ஸ்வரமும் தோடி உருப்படியில் நிரவலும் குறிப்பிடத் தக்கவை.

அன்று வைதேஹி விஜயராகவனின் கானமும் நன்றாயிருந்தது. மணிரங்கு, ரீதிகௌளை, ஜோன்புரி ராகங்களையும் கடைசியில் ஒரு ராக மாலிகையையும் வன்மையாய் வழங்கினார்.

27வ சென்னையில் இரண்டு இனிய குரல்கள் சேர்ந்து பாடின. பாடியவர்கள் ராஜம், சுந்தரி. தன்யாசி பைரவி ராகங்கள் சுகமாயிருந்தன. அன்று திருச்சியில் பாடிய டி. ஆர். துரைவேலுவும் நயமான சாரீரத்தில் பிர்க்கா நிறைந்த பேகடா, பிலஹரி, தன்யாசி, கரஹரப்ரியா, ராகங்களை தைரியமாய் விளாசினார். அப்படியே அன்று சென்னையில் வி. வி. எஸ். கிருஷ்ணனும் திருச்சியில் நாகம்மா, கமலாவும் பாடியது ரஸமாயிருந்தது.

28வ திருச்சியில் கே. சாரதாமணியின் கானம் கேட்கத் தகுந்ததாயிருந்தது. ஆரபி, ஆனந்த பைரவி, வாசஸ்பதி, ஷண்முகப்ரியா என்று ராகங்களை நல்ல உதவுபடியுள்ள குரலில் சரமாரியாய்ப் பொழிந்தார்.

29வ சென்னையில் மெலகவாடி வரதராஜய்யங்காருக்குப் பதிலாக எஸ். வி. எஸ். நாராயணன் கனிப்பான குரலில் சக்கைப் போடு போட்டார்.

* * *

சென்ற வார ரேடியோக் கச்சேரி வித்வான்களில், பாலக்காடு ராமபாகவதர் சாரீர சம்பத்திலுல்லாது ஆழ்ந்த ஞானச் சிறப்பினாலேயே ரஸிக்க வைக்கும் சக்தியுடையவர் என்பது அவர் திருச்சியில் 7வ பாடியதிலிருந்து தெரிய வந்திருக்கும். ஞானத்திற்கேற்ற அழுத்தமும் கொண்ட சங்கீதம். அன்று அவர் எடுத்துக்கொண்ட ராகங்களில் தோடி, பைரவி, பேகடா, மூன்றும் சிறந்து விளங்கின. கல்யாணியில் கொஞ்சம் தொண்டை 'மக்கர்' பண்ணியதுபோதும், ராகங்களும் உருப்படிகளும் சம்பிரதாய முறையில் ஒழுங்காய் வெளி வந்தன. மணிரங்கில் 'நீது சொல்லி வாராய்' என்ற குறவஞ்சிப் பாட்டு ரஸமாயிருந்தது.

மணி நாதம்போல் எடுத்ததும் கனிப்பான குரலால் காதை நிரப்பும் மிகச் சில வித்வான்களில் 8வ சென்னையில் பாடிய துறையூர் ராஜகோபால சர்மா ஒருவர். சுத்த சாவேரியுடன் ஆரம்பித்ததும் கச்சேரி களை கட்டிவிட்டது. பாடியதெல்லாம் ரஞ்சகத்துக்குப் போதிய பொருத்தங்களோடு தெளிவாயிருந்தன. பிலஹரியில் மூன்று ஸ்தாயிகளிலும் அநாயாசமான சஞ்சாரங்கள்; கரஹரப்ரியாவில் நளினமான பாணியுடன் பாவப் பொழிவு. 'மோனமேந்தி பாக்யமு' உருப்படியில் ஜிலுஜிலுப்பான நிரவல்.

5வ. சென்னையில் கேட்ட கனகாடு ராம நாராயணய்யரின் கச்சேரி சாரீரச் சிறப்புடன் ஞானபாவமும் நிறைந்து மனங் கவருவதா யிருந்தது. நாட்டைக் கிருதியுடன் சம்பிர தாயமாய் ஆரம்பித்து வராளி, பைரவி, சாரங்கா முதலிய ராகங்களைக் கர்ணுமிருத மாய்ப் பொழிந்தார். கேதார கௌளையில் விசேஷ நாஸாக்குக் கண்டது.

உயர்ந்த ரகமான ஞானபாவக் கச்சேரி களின் 3வ. திருச்சியில் நடந்த கல்லிடைக் குறிச்சி எஸ். ஹரிஹரனையும் குறிப்பிடாம லிருக்க முடியாது. கற்பனைக் களஞ்சியமாம் பிரபலமானதோர் தமிழ் நாட்டு வித்வானின் சிஷ்யரல்லவா? சாரீரத்தில் இயற்கை வசீகர மில்லாவிடினும் விஸ்ரமான சாதக பலத்தினு லான உருப்படியுடன் காம்போதி, சுத்த சாவேரி, பந்துவராளி, முகாரி என்று ராகங் களையும் இறுதியில் ஒரு ராக மாலிகையையும் வெகு தேர்ந்தியாய் விளம்பினர்.

மே மாதம் 1வ. இரவு சென்னையில் முழுக் கச்சேரி செய்த விஞ்சமூரி வரதராஜய்யங்கா ரும், ஞான பாவத்தைக் கவனிக்கும்போது, உயர்ந்த ரக வித்வான்களின் கோஷ்டியில் சேர்க்கப்பட வேண்டியவர்தான். ஆனால் தற் காலம் பிரபலமாயிருக்கும் பாடகர்களின் பாணிகள் பலவற்றையும் பின்பற்ற முயற்சிப் பதில் எதை ஸ்திரமாய் வைத்துக்கொள்வது என்ற நிர்மானம் இன்னும் வரவில்லைபோலும். சாதாரணமாய் நாஸாக்குடன் பாடுபவர். ஆனால் அன்றைய தினம் கச்சேரியில் பாடியவைகளில் போதிய அளவும் பொருத்த மில்லாது. சில உருப்படிகளை நாலைந்து நிமிஷங்களில் ஓட்டித் தள்ளிவிட்டு பைரவி ராகம். கொலுவையுன்னாடே உருப்படி. அதில் மிதமிஞ்சிய ஸ்வரப்ரஸ்தாரம் இவைகளை மாத்திரம் சுமார் முப்பத்தைந்து நிமிஷங்கள் வரையில் வழங்கினர்.

4வ. கச்சேரிகளில் சென்னையில் இளம் பாடகர்களான எஸ். அனந்த கிருஷ்ண னும், திருவையாறு வி. வி. ராமச்சந்திர னும் குறிப்பிடத் தக்கவை. இருவருக்கும் நய சாரீரம். நல்ல உருப்படி. முன்னவர் ஆபோகி, ஹிந்தோளம், நாட்டைக்குறிஞ்சி ராகங்களை நன்கு கையாண்டார். இவர் கானத்தில் கற்பனை விருத்திக்கு இடமுண்டு. இராமச்சந்திரன் கைதேர்ந்த வித்வான் என்பது எளிதில் தெரிந்தது. கிடைத்த நேரம் குறுகியதேயாயினும் ஆறு ராகங்களை விளாசினர். கரஹரப்ரியாவும், பந்துவராளி யும் உருக்கமாயிருந்தன. கமாஸம், சுத்த சாவேரியும் தெளிவா யிலங்கின. தர்பார் சுருக்கமாயினும் பாணியா யிருந்தது.


அன்று திருச்சியில் மாலையிலும் இரவி லும் கேட்டதோர் குரல் ஸ்திரீயுடையதோ என்று முதலில் பிரமை தட்டியது. வெகு இனிமையா யிருந்தது. பாடியவர் டி. எஸ். பாலசுப்ரமணியன் என்று அறிந்தேன். இளம் வாலிபன் போலும். வெகு வைதீகமாயும் சரளமாயும் ராகங்களையும் உருப்படிகளையும் வாரி வழங்கினர். படபடப்பும் அதி சாமர்த் தியமும் கொஞ்சம் அடங்கினல் பாட்டு இன்னும் சோபிக்கும்.

சென்னையில் வீணை வாசித்த கே. கே. சிவராமன் திறமைசாலிதான். வராளி, பைரவி ஆலாபனைகள் கேட்கத் தகுந்தவை. ஆனால் மீட்டில் நாஸாக்கும் சஞ்சாரங்களில் இன்னும் அதிக கமகப் பிடிகளும் தேவை.

6வ. திருச்சியில் ஆர். கிருஷ்ணவேணி வீணை யுடன் இழைந்து பாடினர். ஆனந்த பைரவி, கல்யாணி, தோடி ராகங்களும் கல்யாணியில் வாசித்த தானமும் நன்றாயிருந்தன. கல்கி யின் சிவகாமியின் சபதத்தில் வந்திருந்த "மறவேன் மறவேன்" என்ற பாட்டை ஆனந்த பைரவியிலும், கானடாவிலும் மெட்டு அமைத்து அழகாகப் பாடினர்.

சென்னையில் 7வ. கேட்ட பெரிய நாயகி, டி. ஆர். சோமசுந்தர முதலியார் 8வ. ஏ. பட்டம்மாள் இவர்களின் கச்சேரிகளும் குறிப்பிடத் தக்கவை. முதலவரது ஷண்முக ப்ரியா கவனத்தை யீர்த்தது. இரண்டாமவர் உருப்படிகளில் ஸ்வரப்ரஸ்தாரங்களை விரு விருப்புடன் வெளுத்து வாங்கினர். ஏ. பட்டம் மாள் இத்தடவை கொஞ்சம் ஜாக்கிரதை யாகவே ராகங்களையும் கிருதிகளையும் கையாண்டார். ஆங்காங்கே நிதானமும், தெளிவான பிடிகளும் கார்வைகளும் கலந்து கச்சேரி நன்றாயமைந்தது.

AJAXITE ROLLS — AJAXITE ROLLS



பட்டசிலை வாங்கும் பொழுது அஜாக்ஸை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்

Ajax

AJAXITE ROLLS

- பிளின்ட் (ஸான்ட்)
- கார்னெட்
- எமரி
- அஜாக்ஸைட் பேப்பர்
- க்ளாத்
- டிஸ்க்ஸ்
- ரோல்ஸ்
- பெல்ட்ஸ்
- டேப்ஸ்

மற்றுமுள்ளவைகள்.

மரத் தொழிலில் பட்டசிலைகள் மிக முக்கியஸ்தானம் வகிக்கிறது. கடைசி மெருகு வேலைக்கு மிகவும் அவசியமான பொருளானபடியால் விஷயமறிந்தவர்கள் அஜாக்ஸ் பட்ட சிலையையே வாங்குகிறார்கள். நேர்த்தியான ஜோடிப்புகளுக்கும் மரசாமான்களுக்கும் அஜாக்ஸ் பட்டசிலைகளையே உபயோகப்படுத்துங்கள்.

அஜாக்ஸ்

பிராடக்ட்ஸ் லிமிடெட்,
106, அரமனைக்கார தெரு,
சென்னை

மானேஜிங் ஏஜண்டுகள் :—முருகப்பா அண்ட் ஸன்ஸ்,
தென் இந்தியாவுக்கு விற்பனை ஏஜண்டுகள் :—
மார்ஷல் ஸன்ஸ் அண்ட் கோ., (இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி 141, சென்னை.

A.S.K. 9.



மாபெரும் வெற்றி கொண்ட முப்பெரும் தலைவர்கள்

• • •


உலகத்தில் இதுவரை நடந்திருக்கும் எந்த யுத்தத்தையும்விட, இராம இராவண யுத்தத்தையும் சுப்பிரமணியர் சூரபத்மன் யுத்தத்தையும் காட்டிலும், மகத்தான யுத்தம் சென்ற ஆறு வருஷ காலமாக ஐரோப்பாவில நடந்த யுத்தந்தான். அந்த மகா யுத்தத்தில் நேசக் கட்சி மாபெரும் வெற்றி யடைவதற்குக் காரணபூதர்களான முப்பெரும் தலைவர்கள் மேலேயுள்ள படத்தில் காட்சி தருகிறார்கள்.

பாவம்! மூன்று தலைவர்களிலும் நடுநாயகமாக விளங்கிய அக்கிராசனர் ரூஸ்வெல்ட் வெற்றிச் சிகரத்தைக் கண்டவுடனே காலமாகி விட்டார்.

பிப்ரவரி மீ 15வ. கிரிமியாத் தீவில் உள்ள யால்ட்டாவில் கூடி யுத்தத்தில் முடிவான வெற்றி யடைவதற்குத் திட்டம் தயாரித்தபோது எடுத்த படம்.

பின்னால் நிற்பவர்கள், மேற்படி திட்டம் தயாரிப்பதில் மேற்படி தலைவர்களுக்கு உதவி செய்த மூன்று தேசத்து இராணுவ தந்திரிகளும் தளபதிகளும்.

இந்த மகா யுத்தத்தில் வெற்றி யடைவதற்கு மேற்படி தலைவர்களுக்கு முக்கிய உதவியாக இருந்த இராட்சதர்களை—அதாவது இராட்சத ஆகாச விமானங்களை—பக்கத்துப் படத்திலே காணலாம்.





ஐஸன்ஹாவர்



மாண்ட்கோமரி



பேட்டன்



கன்னிங்ஹாம்



அலெக்ஸாந்தர்



டெட்டர்

வெற்றி பெற்ற நேச தளபதிகள்



ஹிட்லர்



கோயரிங்



ஹிம்லர்



கெப்பல்ஸ்




ரோமல்




டோனிட்ஸ்


தோல்வியுற்ற ஜெர்மன் தலைவர்கள்



இந்த யுத்தத்தில் தேசப்படைகள் சாதித்த மகா அதிசயங்களில் ரைன் நதியை அமெரிக்கப் படைகள் கடந்து சென்றதும் ஒன்றாகும். ஆறரை மணி நேரத்திற்குள் அமெரிக்கர்கள் ரைன் நதியின்மேல் பாலம் அமைத்து தளவாடங்களை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

'நீர் எருமை' என்ற திவ்ய நாமம் பூண்ட அமெரிக்க டாங்கிகள் ஜலத்தைச் சுலபமாகக் கடந்து எதிரிகளைத் தாக்குவதில் இணையற்று விளங்குகின்றனவாம். டாங்கிக்கு டாங்கியாகவும் படகுக்குப் படகாகவும் உபயோகமாகி வருகிறது இந்த 'நீர் எருமை!'





லட்சக்கணக்கிலேகச் சரணடைந்த ஜெர்மன் படைகளை தேசப் படைகளின் லாரிகளில் ஏற்றுவதில் அசாத்திய இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.



"என்னைச் சுடாதே!" என்று கையைத் தூக்கிக் கெஞ்சுவது ஒரு ஜெர்மன் ஸோல்ஜர். தேசப் படைகள் பிரான்ஸில் இறங்கியபோது, ஆரம்பமான இந்த சரணாகதிப்படலம் மே 8-ம் தேதி யன்று பெர்லின் நகரத்தில் முடிவடைந்தது.



'வினை விதைத்தவன் வினை யறுப்பான்' என்பதுபோல், எந்த இடத்தில் நாஜிகள் தேசப்படை வீரர்களைச் சிறையிட்டிருந்தார்களோ, அதே இடத்தில் தேச சைன்யங்களால் நாஜிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் காட்சி.

பம்பாயில் எம். எஸ். கச்சேரி

தென்னிந்தியர் கல்வி நிதிக்கு அரை லட்சம் ரூபாய்

பம்பாய் — மதுங்காவில் உள்ள தென்னிந்தியர்களுக்கு மே 5-உ சனிக்கிழமை ஒரு பெரிய உற்சவ தினமா யிருந்தது.

மதுங்காவில் தென்னிந்தியர்களின் குழந்தைகள் படிக்கும் உயர்தரப் பள்ளிக்கூடத்தின் உதவிக்காக அன்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீதக் கச்சேரி.

ஒரே ஒரு கச்சேரியா யிருந்தபோதிலும், ஏற்பாடுகள் ஒரு பெரிய சங்கீதத் திருவிழாவுக்கு நடப்பதுபோல் நடைபெற்றன.

கச்சேரிக்கு அவ்வளவு கூட்டம் வருமென்று எதிர்பார்த்துத் தென்னிந்தியக் கல்விக் கழகத்தார் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். பல வகையிலும் அவர்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சிறப்பாகக் கச்சேரி நடைபெற்றது.

ஒரு சங்கீதக் கச்சேரிக்கு டிக்கட் வசூல் மூலம் ரூ. 42,000 கிடைத்தது என்பது இந்திய தேசத்திலேயே இதுவரையில் கேள்விப்படாத அதிசயம். சென்னையில் நடந்த ஸ்ரீமதி எம். எஸ். ஸின் கஸ்தூரிபாய் நிதிக் கச்சேரிகளையும், அநாதை விடுதிக்காக நடந்த கச்சேரியையும் கூட இது தூக்கி அடித்து விட்டது.

மேற்படி ரூ. 42,000த்துக்கு மேலே, இந்தக் கச்சேரியின் சந்தர்ப்பத்தில் ஏறக்குறைய ரூ. 8000 நன்கொடை அளிக்கப்பட்டது. இதில், தென்னாட்டில் பல அரிய கல்வி தர்மங்களைச் செய்து வரும் டாக்டர் அளகப்பச் செட்டியாரின் ரூ. 2500 நன்கொடையும் சேர்ந்தது.

மேற்படி கச்சேரிக்கென்று தென்னிந்தியக் கல்விக் கழகத்தார் தங்கள் பள்ளிக்கூடத்திற்கு எதிரிலுள்ள மைதானத்தில் பத்தாயிரம் பேர் உட்காரக்கூடிய பிரம்மாண்டமான பந்தல் அமைத்திருந்தனர். பந்தலும் மேடையும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

கச்சேரி இரவு 8-30 மணிக்கு ஆரம்பம். ஆனால், சாயங்காலம் 6-மணி முதலே ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கிவிட்டனர். எட்டரை மணிக்கெல்லாம் கொட்டகைக்கு உள்ளும் புறமுமாக சுமார் 15,000 ஜனங்கள் கூடிவிட்டனர். பந்தல் அமைந்திருந்த காம்பவுண்டைச் சுற்றிலும் ஒரே ஜனத்திரள் மயமாயும், மோட்டார் கார் மயமாயும் இருந்தது. பந்தலுக்குள்ளே அமர்ந்திருந்த ரசிகர்களின் மகாசபை கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது.



இவ்வளவு பெரிய கூட்டம் ஆரம்பம் முதற் கொண்டு கடைசி வரை நிச்சப்தமாக இருந்து சங்கீதத்தை அனுபவித்தது மகத்தான அதிசயம். ஒலி பரப்பியும் ஒழுங்காக அமைந்திருந்தது. கச்சேரிக்குத் திரளாக வந்திருந்த குஜராத்தியர், மராட்டியர், பார்சிகள் முதலிய வடநாட்டினரும் கடைசி வரையில் கச்சேரியில் இருந்து கோகில கானத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

இவ்விதம் வடக்கத்தியாரும் பலர் வந்திருந்ததை முன்னிட்டு, தென்னிந்தியக் கச்சேரி பத்ததியை அப்படியே பின்பற்றாமல், கர்நாடக ராகம், கீர்த்தனம், இடையிடையே ஹிந்துஸ்தானி கீதம்—இப்படியாகப் புரோகிராம் அமைத்துப் பாடினார். பந்துவராளியில் "தாயே இது தருணம்" என்ற உருப்படியில் "இரவும் பகலும் தாமரை இலை நீரென எனது மனது சஞ்சலமுறுமே" என்ற இடத்தில் உணர்ச்சி ததும்ப நிரவல் செய்தது இன்னமும் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அடுத்தாற்போல் 'பிருந்தாவன குஞ்ச பவன' என்ற ஹிந்தி கீதம்.

ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் சங்கராபரணம் எப்பொழுதுமே தனிச் சிறப்பு வாய்ந்தது என்பது ரசிகர்களின் அபிப்பிராயம். அதையும் உயர்ந்த முறையில் கேட்போர் பரவசமடையுமாறு ஆலாபனம் செய்து, "யாரோ என்று எண்ணாமலே" கீர்த்தனம் தொடங்கியதும் சபையோர் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்து விட்டனர்.

நிசப்தமான நள்ளிரவு வேளையிலே தோடி ராகத்தை விஸ்தாரமாகப் பாடியது அருமையிலும் அருமையாக அமைந்தது!

தமிழ்க் கடவுளைப் பற்றிய "மாலைப் பொழுதினிலே" என்ற இன்பக் கவிதையும், "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" பாட்டும் சபையோரின் செவிகளையும் உள்ளங்களையும் கொள்ளை கொண்டன. பின்னர் "யாமறிந்த மொழிகளிலே" என்னும் பாரதியார் பாடலை இராகமாலிகையாகப் பாடியது ரசிகர்களுக்கும் பரம திருப்தியை அளித்தது.

"ஒரு சொற் கேளீர்! சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்ற அடியை ஸ்ரீமதி எம். எஸ். பாடும்பொழுது ஜனங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி ஆயிரம்மேடைகளில் நின்று பிரசங்கித்தாலும் ஏற்படாது.

அன்றையக் கச்சேரி அவ்வளவு வெற்றிகரமாக அமைய அநுசரணையாக இருந்த பிடில் சங்கரய்யர், மிருதங்கம் கல்பாத்தி ராமநாதன், கஞ்சிரா வேணு நாயக்கர், கடம் ராமசந்திரன் இவர்களின் ஒத்துழைப்பை ரொம்பவும் பாராட்ட வேண்டும்.

தென்னிந்தியக் கல்விச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ ஏ.வி. ராமலிங்கம் அவர்கள் வந்தனோபசாரம் கூறுகையில், ராஜாஜி, டி. கே. சி. ஆகியவர்களிடமிருந்து வந்த ஆசிமொழிகளை அறிவித்தபோது, சபையோர்கள் பலத்த கரகோஷத்துடன் அவற்றை வரவேற்றனர். ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் கூறியது போல், தென்னிந்திய சமூகம் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

மதுங்கா 7-5-45 } —ரா. பத்மநாபன்.

சிவகாமியின் சபதம்



பதினாறாம் அத்தியாயம்

புலிகேசியின் புறப்பாடு

மறு நாள் காஞ்சி நகரில் மீண்டும் ஒரு பெரிய கொண்டாட்டம் நடந்தது.

அன்று வாதாபி சக்கரவர்த்தி புலிகேசி காஞ்சியிலிருந்து புறப்படுவதாக ஏற்பாடாகியிருந்தது.

புறப்படுவதற்கு முன்னால் இன்னொரு தடவை காஞ்சி மா நகரை நன்றாய்ப் பார்க்க வேண்டுமென்று புலிகேசி விரும்பினார்.

எனவே, இரு சக்கரவர்த்திகளும் பட்டத்து யானை மீது அமர்ந்து நகர் வலம் கிளம்பினார்கள். இந்த வைபவத்தை முன்னிட்டுக் காஞ்சி நகரம் அன்று மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகர மாந்தர்கள் — ஸ்திரீகளும் புருஷர்களும் — அழகிய ஆடை ஆபரணங்கள் பூண்டு தெரு ஓரங்களில் கும்பல் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே பலவகை வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. உப்பரிகை மேல் மாடங்களிலிருந்து இரு சக்கரவர்த்திகளும் அமர்ந்து சென்ற பட்டத்து யானையின் மீது மலர் மாரி பொழிந்து கொண்டிருந்தது.

காஞ்சிமா நகரின் அழகிய விசாலமான வீதிகளையும், மாட மாளிகைகளையும், கோயில்களையும், கோபுரங்களையும், சிற்ப சித்திர மண்டபங்களையும், நடன அரங்கங்களையும், புத்த விஹாரங்களையும், சமணர் ஆலயங்களையும் எவ்வளவுதான் பார்த்தாலும் புலிகேசிக்கு அலுப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

கல்கி

"பாரவியை ஏதோ மகா பெரிய கவி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் எவ்வளவு மட்டமான கவி என்பது இப்போதுதான் தெரிகிறது........" என்றார் வாதாபி சக்கரவர்த்தி திடீரென்று.

"அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? பாரவியின் 'கிராதார்ஜுனீயம்' எவ்வளவு அழகான காவியம்?...... தாங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா?" என்றார் மகேந்திர பல்லவர்.

"ஆ! இந்தக் கவிகள் மலையையும் காட்டையும் மழையையும் மேகத்தையும் வர்ணிக்கச் சொன்னால் வர்ணிப்பார்கள். அல்லது யாராவது ஒரு அவலட்சணம் பிடித்த பெண்ணை ஓயாமல் வர்ணித்துக் கொண்டே இருப்பார்கள். இந்தமாதிரி ஒரு நகரத்தை வர்ணிக்கச் சொன்னால், அப்போது அவர்களுடைய சாமர்த்தியமெல்லாம் எங்கேயோ போய் விடுகிறது! பாரவி இந்த நகரத்தைப் பற்றி எனக்கு எழுதிய வர்ணனையெல்லாம் இதன் உண்மைச் சிறப்பில் கால் பங்குக்குக்கூட வராது... பல்லவேந்திரா! நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறீர்களா? நாம் இருவரும் ஒரு பரிவர்த்தனை

செய்து கொள்வோம். நர்மதையி லிருந்து துங்கபத்திரை வரை பரந்து கிடக்கும் என்னுடைய சாம்ராஜ்யம் முழுவதையும் எடுத்துக் கொண்டு மாற்றாக' இந்தக் காஞ்சி நகரை மட்டும் எனக்குக் கொடுங்கள்!'' என்றார் வாதாபி அரசர்.

''மன்னர் மன்னா! திவ்யமாக இந்தக் காஞ்சி நகரை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு மாற்றாக, உங்கள் இராஜ்யம் முழுவதையும் எனக்குக் கொடுக்க வேண்டாம். அஜந்தா மலையையும் அதன் குகைகளையும் மட்டும் கொடுத்தால் போதும்! சத்யாச்ரயா! அஜந்தாவை நான் பார்க்கவில்லை என்றாலும் அதைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கிறேன். பாரவி கவியே சொல்லியிருக்கிறார். அஜந்தா சித்திரங்களுக்கு இணையான கலைச் செல்வம் இந்தப் பரந்த பூமண்டலத்தில் எங்குமே இல்லையென்று அறிந்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட அஜந்தாவை வைத்துக்கொண்டு, தாங்கள் கேவலம் இந்தக் காஞ்சிப் பட்டணத்துக்கு ஆசைப்படுகிறீர்களே? இதைப் போல் எவ்வளவோ பட்டணங்கள் உலகில் இல்லையா?'' என்றார் மகேந்திர பல்லவர்.

''ஆ! அஜந்தாவைப் பற்றி நீங்கள் தான் பிரமாதப்படுத்த வேண்டும். பார்க்கப் போனால், அஜந்தாவில் அப்படி என்ன இருக்கிறது? சுவரில் எழுதப்பட்ட சித்திரங்கள்! என்ன தான் அழகிய சித்திரங்களாயிருந்தாலும், உயிருள்ள ஸ்திரீ புருஷர்கள் வாழும் நகரத்துக்குச் சமம் ஆகுமா? வானத்தை அளாவிய மாட மாளிகைகளையும் கலகலவென்று ஜனத்திரள் மொய்க்கும் வீதிகளையும் உடைய இந்த நகரம் எங்கே? எங்கேயோ காட்டுக்குள்ளே மலைக் குகைகளில் எழுதியிருக்கும் சித்திரங்கள் எங்கே?.........'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் புலிகேசி.

வாதாபி மன்னரின் ரஸிகத்தன்மையில் ஏற்கெனவே மகேந்திரருக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. அது இப்போது உறுதிப்பட்டது. எனினும், தம் மனோ நிலையை வெளிப்படுத்தாமல், புலிகேசிக்கு ஆறுதலாகப் பின் வருமாறு கூறினார் :—

''சத்யாச்ரயா! இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? கல்லினாலும் சுண்ணாம்பினாலும் மண்ணினாலும் மரத்தினாலும் கட்டிய இந்த மாநகரின் கட்டிடங்கள் எல்லாம் ஒரு காலத்தில் இடிந்து தகர்ந்து போனாலும் போகலாம்; அஜந்தா மலைக் குகைகளில் எழுதிய அழியா வர்ண சித்திரங்கள் நீடூழி காலம் இருக்கலாம். யார் கண்டது? சளுக்க குல சிரேஷ்டரே! தங்களுக்கு ஒரு சமாசாரம் தெரியுமா? நேற்று நடனமாடினாளே, சிவகாமி! 'வாதாபிக்குப் போகிறாயா?' என்று கேட்டதும், அவள் அவ்வளவு மனத்தாங்கலுடன் பேசினாள் அல்லவா? நீங்கள் மட்டும் அவள் தந்தை ஆயனரிடம் அஜந்தாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான்; உங்களுடன் வந்தால் அஜந்தா வர்ண இரகசியத்தைத் தெரியப்படுத்துவதாகச் சொல்ல வேண்டியதுதான். உடனே, உங்களுடன் கிளம்பி வர ஆயத்தமாகி விடுவார்!......''

''அப்படியா? ஆயனச் சிற்பிக்கு அஜந்தா வர்ண விஷயத்தில் அவ்வளவு அக்கறையா?'' என்று புலிகேசி கேட்டபோது, ஏதோ பழைய நினைவு வந்தவரைப்போல் அவருடைய கண்களில் ஒருவிதமான பிரகாசம் தோன்றியது.

''ஆமாம்; ஆமாம். அஜந்தா வர்ண இரகசியத்தைத் தெரிந்துகொண்டு வருவதற்காக ஆயனர் தூதுகூட அனுப்பினாரே. அது உங்களுக்கு ஞாபகம் இல்லையா?'' என்றார் பல்லவ சக்கரவர்த்தி.

பின்னர் தொடர்ந்து, ''ஆ! அந்த ஓலையைப் படிக்கக் கேட்டபோது நீங்கள் எப்படித் திகைத்து விழித்தீர்கள்?'' என்று கூறிவிட்டு, மகேந்திர பல்லவர் கலகலவென்று நகைத்தார். விதி, விதி என்று சொல்கிறார்களே, அந்த விதியானது அப்போது மகேந்திர வர்மரின் நாவிலே வந்து உட்கார்ந்து கொண்டது. அதுகாரணமாக, மகா மேதாவியும் தீர்க்கதிருஷ்டியுள்ளவரும் முன்யோசனைக்காரரும் சாணக்ய சாகஸத்தில் இணையற்றவருமான அந்தப் பல்லவ சிரேஷ்டர், நாவின் அடக்கத்தை இழந்தார்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்னும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கை நன்கறிந்தவராயினும் அச்சமயம் அதை மறந்தார். அவருடைய இதய அந்தரங்கத்துக்குள்ளே கிடந்த இரகசியங்கள் எல்லாம் அப்போது ஒவ்வொன்றாய் வெளிவரலாயின.

மகேந்திர பல்லவரின் கடைசி வார்த்தைகள் புலிகேசியின் உடம்பில் ஏக காலத்தில் பல தேள்கள் கொட்டியது போன்ற உணர்ச்சியை உண்டாக்கியதாகத் தோன்றியது. முகத்தில் அத்தகைய வேதனையுடன், "சத்துருமல்லா! எதைப் பற்றிச் சொல்கிறீர்கள்? உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டுவிட்டு, பாம்பு சீறுவதைப் போல் மூச்சு விட்டார் புலிகேசி.

மகேந்திர பல்லவர் மறுபடியும் நகைத்து. "ஆமாம்; அந்தக் காட்சியை நினைத்தால் எனக்கு இன்னமும் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. வட பெண்ணை நதியை நீங்கள் நெருங்கி விட்டீர்கள். முதலில் ஒரு தூதன் ஒரு ஓலையைக் கொண்டு வந்து கொடுக்கிறான். அதிலே நீங்கள் எதிர்பாராத விதமாய் ஏதோ எழுதியிருக்கிறது. உங்களுக்குக் கோபம் கோபமாய் வருகிறது. ஒரு மாதிரி கஷ்டப்பட்டுப் பொறுமையைக் கையாண்டு ஒரு முடிவுக்கு வருகிறீர்கள். அந்தச் சமயத்தில் ஒரு இளம் பிள்ளையைச் சிறைப் படுத்திக் கொண்டு வருகிறார்கள். அவனிடமும் ஒரு ஓலை இருக்கிறது. அதைப் படித்தால், பூனை வேலியில் கரடியை விடுவதுபோல், அஜந்தா வர்ண இரகசியத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறது. அப்போது உங்களுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே?—அதிர்ஷ்ட வசத்தினால், அந்தப் பிள்ளையாண்டானை உடனே சிரச்சேதம் பண்ணச் சொல்லாமல் காகார்ஜுன மலைக்கு அனுப்பச் செய்தீர்கள்!..."

"விசித்திர சித்தரே! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? கிட்ட இருந்து பார்த்தது போல் சொல்கிறீர்களே?" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டார் புலிகேசி.

"கிட்ட இருந்து பார்த்ததினால் தான் தெரிந்தது!" என்றார் மகேந்திர சக்கரவர்த்தி.

புலிகேசி மகேந்திரரின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "ஆ! அப்படியானால், முதலில் ஓலை கொண்டு வந்த தூதன்......?" என்று தயங்கினார்.

"ஆமாம்! அடியேன்தான். இருக்கட்டும்; கொள்ளிடக் கரையில் பாண்டிய மன்னனுடன் உறவு கொண்டாடினீர்களே! அப்போது களப்பாளத் தலைவன் வஜ்ரபாஹுவைப் பற்றித் தாங்கள் பாண்டியனிடம் விசாரிக்கவே இல்லையா, ஐயா!" என்று மகேந்திர பல்லவர் புன்னகையுடன் வினவினார்.

மேலும் மேலும் புலிகேசியைத் திகைப்படையச் செய்வதில் மகேந்திரருக்கு அப்போது ஒரு பிரத்யேகமான களிப்பு உண்டாயிற்று. அந்தக் களிப்பில், புலிகேசியின் உள்ளத்தில் அமுங்கிக் கிடந்த குரோத நெருப்பை விசிறி மூட்டி விடுகிறோம் என்பதைக் கூட அவர் கவனிக்கவில்லை.

"விசாரித்தேன்! பாண்டியனுடன் இருந்த ஒரு களப்பாளனையும் பார்த்தேன். அவன் கொள்ளிடத்துக்கு இப்பால் வந்ததே இல்லையென்று சொன்னான். அப்போதே எனக்கு ஆச்சரியமாய்த்தானிருந்தது. அப்படியானால், அந்த வஜ்ரபாஹு என்கிற தூதன் நீங்கள் தானாக்கும்!"

"அடியேன் தான்!"

"என் மனதைக் குழப்பிக்கொண்டிருந்த பல மர்மங்களில் ஒன்று வெளியாகி விட்டது. மீதமுள்ள மர்மங்களைக் கண்டு பிடிப்பது இனிமேல் கஷ்டமாயிராது" என்று புலிகேசி மெல்லிய குரலில் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

பிறகு உரத்த குரலில் "அப்படியானால் வஜ்ரபாஹு கொண்டுவந்த அந்த ஓலை?........." என்று கேட்டார்.

"தூதனையே சிருஷ்டி செய்தவனுக்கு ஓலையைச் சிருஷ்டி செய்வது தானா பெரிய காரியம்?"

"இல்லை, இல்லை! காஞ்சி மகேந்திர பல்லவருக்கு எதுவுமே பெரிய காரியம்

இல்லை!.........ஐயா! இப்போதாவது எனக்குச் சொல்லலாமல்லவா? எது நிஜ ஓலை? எது பொய் ஓலை?—அந்தப் பிள்ளையாண்டான் கொண்டு வந்தது நிஜ ஓலையா?"

"இல்லை, சத்யாச்ரயா! இல்லை. அந்தப் பிள்ளையாண்டான் முதலில் கொண்டு வந்த நிஜமான ஓலை மட்டும் உங்களிடம் அப்போது வந்திருந்தால் — இன்றைக்கு நீங்களும் நானும் இந்தக் காஞ்சி நகரின் வீதிகளில் பட்டத்து யானையின் மீது அமர்ந்து ஊர்வலம் வந்து கொண்டிருக்க மாட்டோம். ஊர்வலம் வருவதற்கு வீதியே இராது; காஞ்சி நகரமும் இராது. வைஜயந்தி அடைந்த கதியைக் காஞ்சியும் அடைந்திருக்கும். நண்பரே! இப்போது நீங்களும் உண்மையைச் சொல்லுங்கள். இந்த அழகான நகரை, அதிசயமான நகரை, அடியோடு அழித்து விடும் எண்ணம் அப்போது உங்கள் உள்ளத்தில் இருக்கவில்லையா?" என்று மகேந்திரர் கேட்டார்.



எனக்கும் மத்தியில் எவ்விதக் கள்ளங் கபடும் இல்லை; நமது நேசத்துக்கு எவ்விதத் தடங்கலும் இல்லை. நம் மிருவருடைய வாழ்நாளும் உள்ளவரையில், நாம் இனிமேல் சிநேகிதர்கள். என் ஆயுட்காலத்தில் தங்களுக்கு விரோதமாக இனி நான் ஒன்றும் செய்ய மாட்டேன். சத்யாச்ரயா! தாங்களும் அப்படித்தானே?" என்று மகேந்திர பல்லவர் உண்மையான உள்ள நெகிழ்ச்சியுடனே கேட்டார்.

"சத்துருமல்லா! அதைப் பற்றிக் கேட்கவேண்டுமா?" என்றார் வாதாபி சக்கரவர்த்தி.

*　　　*　　　*

நகர் வலம் எல்லாம் முடிந்து பட்டத்து யானையானது காஞ்சியின் வடக்குக் கோட்டை வாசல் அண்டை வந்து நின்றது.

இரு சக்கரவர்த்திகளும் பிரிய வேண்டிய சமயம் வந்தது.

யானையின் மீதிருந்து அவர்கள் பூமியில் இறங்கினார்கள்.

ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள்.

"பல்லவேந்திரா! உங்கள் நகருக்கு விருந்தாளியாக வந்ததில் எனக்கு எவ்வளவோ சந்தோஷம். அபூர்வமான காட்சிகளைக் கண்டேன். அபூர்வமான விஷயங்களைக் கேட்டேன். ஆனால், உங்கள் வீரப் புதல்வன் மாமல்லனைப் பார்க்காமல் போவதிலேதான் கொஞ்சம் வருத்தம்!" என்றார்.

"ஆம்; மாமல்லனையும் பார்க்கவில்லை. உங்களுக்கு முதலில் ஓலை கொண்டு வந்த பையனையும் நீங்கள் பார்க்கவில்லை; நாகநந்தி பல்லவ ராஜ்யத்துக்குப் பெரியதொரு உபகாரம் செய்தார்; சிறந்த வீரத் தளபதி ஒருவனை அளித்தார்!......"

புலிகேசி குறுக்கிட்டு, "ஆம்; தளபதி பரஞ்சோதியைப் பாராததிலும் எனக்கு ஏமாற்றந்தான். அவர்களிருவரும் எங்கே என்று இன்னும் தாங்கள் சொல்லவில்லையே?"

"சத்யாச்ரயா! தங்களை நான் வழி அனுப்புவதுபோல், பாண்டியனை வழி அனுப்ப அவர்கள் போயிருக்கிறார்கள்! இன்றைக்குக் காலையில் தான் செய்தி வந்தது. பாண்டியனைச் சோழ நாட்டின் எல்லை வரையில் கொண்டு போய் விட்டு விட்டார்களாம்!"

"ஆஹா! நினைத்தேன். ஏதோ பாண்டியனுக்கு நீங்கள் சம்பந்தியாகப் போவதாக ஒரு வதந்தி இருந்ததே!"

"சம்பந்தி உபசாரம் செய்வதற்குத்தான் மாமல்லனும் பரஞ்சோதியும் போனார்கள்!" என்று கூறி மகேந்திர பல்லவர் நகைத்தார்.

"விசித்திர சித்தரே! போய் வருகிறேன். போவதற்கு முன்னால் கடைசியாக ஒரு வார்த்தை கேட்கிறேன். நாகநந்தி பிக்ஷுவை உங்களுக்குத் தெரியுமா? அவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று புலிகேசி கேட்க, மகேந்திர பல்லவர், "உத்தேசமாகத் தெரியும்!" என்று கூறி, வாதாபி சக்கரவர்த்தியின் காதோடு ஏதோ கூறினார்.

"ஆ! உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமே யில்லை. அப்படித் தெரிந்திருக்கும்போது, அவரை நீங்கள் விடுதலை செய்து என்னுடன் அனுப்பப் போவதில்லையா?" என்று புலிகேசி ஆங்காரமான குரலில் கேட்டார்.

"சக்கரவர்த்தி கோரினால் அவ்விதமே செய்யத் தடை யில்லை!" என்றார் மகேந்திரர்.

"வாதாபி சளுக்க குலத்தார் யாரிடமும் எந்தக் கோரிக்கையும் செய்து கொள்வதில்லை!" என்று புலிகேசி கம்பீரமாய்க் கூறினார்.

அதைவிடக் கம்பீரமாக, "காஞ்சி பல்லவ குலத்தினர் யாருக்கும் கோராத வரத்தைக் கொடுப்பதில்லை" என்றார் மகேந்திர வர்மர்.

"பல்லவேந்திரா! போய் வருகிறேன்" என்றார் புலிகேசி.

"சத்யாச்ரயா! ஞாபகம் இருக்கட்டும்" என்றார் மகேந்திரர்.

"ஒரு நாளும் மறக்க மாட்டேன்" என்றார் புலிகேசி.

புலிகேசி மறக்கவே இல்லை என்பதைப் பின் வரும் அத்தியாயங்களில் காணப் போகிறோம்.

புலிகேசி தம் மனதிற்குள், "அப்போது அந்த எண்ணம் அவ்வளவாக இல்லை; இப்போதுதான் இந்த நகரை எரித்துப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட வேண்டுமென்று தோன்றுகிறது" என்பதாக எண்ணிக் கொண்டார்.

வெளிப்படையாக, "பல்லவேந்திரா! முதல் ஓலையில் — நிஜ ஓலையில் — என்ன எழுதியிருந்தது?" என்று கேட்டார்.

"வேறொன்றுமில்லை. பாகப் பிரிவினைதான் செய்திருந்தது! 'பல்லவ சாம்ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் நீ எடுத்துக் கொள்; நடன



கலா ராணி சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்து விடு' என்று அந்த ஓலை எழுதிய புண்ணியவான் உங்களைக் கேட்டிருந்தார்!"

இதைக் கேட்ட வாதாபி சக்கரவர்த்தி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "ஆ! என்ன அசட்டுத்தனம்! காஞ்சி சுந்தரியைக் கைப்பற்றுவது அவ்வளவு சுலபமான காரியமா?" என்றார்.

"நண்பரே! அந்த ஓலையில் எழுதியிருந்தபடி நீங்கள் நேரே காஞ்சிக்கு வந்திருந்தால் அது சுலபமாகத்தான் இருந்திருக்கும். அப்போது இந்தக் காஞ்சிக் கோட்டை வாசல்களின் கதவுகள் உங்கள் யானைப் படையில் ஒரு யானையின் மோதலுக்குக்கூட நின்றிராது!" என்றார் மகேந்திர பல்லவர்.

புலிகேசியின் உள்ளத்தில பல நினைவுகள் ஏககாலத்தில் நெருப்பைக் கக்க ஆரம்பித்தன. மகேந்திரரை ஏறிட்டு நோக்கி, "பல்லவேந்திரா! அர்த்த சாஸ்திரத்தை எழுதிய கௌடில்யர் உங்களிடம் பிச்சை வாங்க வேண்டும்!" என்றார்.

"எங்கள் தென்னாட்டிலும் ஒரு பிரபல இராஜ தந்திரி உண்டு. அவர் பெயர் திருவள்ளுவர். சத்யாச்ரயா! அந்தப் பெரியார் எழுதிய பொருளதிகார நூலை உங்களுக்குப் பரிசளிக்க வேண்டுமென்று எனக்கு விருப்பம். ஆனால், எங்கள் செந்தமிழ் மொழியை இன்னும் நீங்கள் நன்றாய்ப் பயிலவில்லையே?" என்றார் சத்துருமல்லர்.

பிறகு, "நண்பரே! அந்தப் பழைய கதை இருக்கட்டும். போனதெல்லாம் போயிற்று. அதையெல்லாம் பூர்வ ஜன்ம அநுபவமாக நினைத்து மறந்து விடுங்கள். இந்தப் பத்து தினங்களில் நீங்களும் நானும் அத்தியந்த சிநேகிதர்களாகி விட்டோம். உங்களை நான் அறிந்து கொண்டேன்; என்னையும் நீங்கள் அறிந்து கொண்டீர்கள். உங்களுடைய படையெடுப்பைத் தடுப்பதற்கு நான் கையாண்ட தந்திரங்களையெல்லாம் என் மனதிற்குள் வைத்திருப்பது சிநேகத் துரோகம் என்றுதான் அவற்றை உங்களுக்குச் சொன்னேன். இனிமேல், தங்களுக்கும்

★

ஐரோப்பிய யுத்தத்தில் நேசக் கட்சியின் வெற்றிக்கு நமது இந்திய வீரர்கள் செய்துள்ள உதவி அபாரமானது.

இத்தாலியப் போர் முனையில் இந்திய எஞ்சினியர்களும் 'ஸாப்பர்'களும் டாங்கிகள் ஒரு நதியைக் கடந்து செல்லும் பொருட்டும் 'பிளான்' போட்டு வேலை செய்யும் காட்சி.

★







★

இத்தாலிப் போர் முனையில் இந்தியப் படைகளை பாடியாலா மகாராஜா பார்வையிடுகிறார்.

வட்டத்திலுள்ளவர் ஒரு இந்தியப் போர் வீரர்; எதிரியைக் குறிபார்த்துச் சுடுகிறார்.

இத்தாலியப் போர் முனையில் ஜயக்கொடி நாட்டித் திரும்பும் கூர்க்கப் போர் வீரர்கள்.

★



பிரத்யட்ச தெய்வம்



கூடாலை

"அண்ணா! அந்த மோதிரத்தைப் பார்த்தாயா?" என்றாள் கமலா.

"எந்த மோதிரத்தை?" என்றான் ஜகதீசன்.

"அதுதான் லக்ஷ்மியினுடையது. ஸ்வாமியின் பக்கத்தில் வைத்திருந்தாளாம்."

"அப்படியானால் ஸ்வாமியே எடுத்துக்கொண்டு அந்தர்த்தானம் ஆகி விருப்பார்!" —கமலாவுக்கு இந்தப் பரிகாசம் பிடிக்கவில்லை. "சமயாசமய மில்லாமல் எப்பொழுதும் என்ன கேலி?" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே போய்விட்டாள். ஜகதீசன் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

ஜகதீசன் கமலாவின் மாமா பிள்ளை. கணவனை இழந்துவிட்ட ஜகதீசனின் அத்தை, கமலாவுடன் தன் தமையன் வீட்டிலேயே வசித்து வந்தாள். தாயற்ற ஜகதீசன் சிறு வயது முதல் அத்தையை அம்மாவென்றுதான் அழைப்பான்.

மாமா இருந்தமட்டும் கமலாவை ஜகதீசனுக்கே மணமுடித்து விடுவது என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் எதிர்பாராத விதமாய் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்து போய்விட்டார். அதுமுதல் ஜகதீசன்தான் எல்லாவற்றிற்கும் எஜமானன்.

சென்ற வருஷம், ஜகதீசன் கமலாவுக்கு ஒரு வரன் வந்திருப்பதாயும் அதை அவளுக்கு முடித்து விட உத்தேசிப்பதாயும் தன் அத்தையிடம் சொன்னான். அதற்கு அவள், "நீயே கமலாவை மணந்து கொள்ளக் கூடாதா?" என்று தன் மனத்திலுள்ளதைக் கேட்டுப் பார்த்தாள்.

"கமலாவை இவ்வளவு நாளும் என் தங்கையாகவே பாவித்து வந்திருக்கிறேனாகையால் அந்தப் பேச்சே எடுக்காதே, அம்மா!" என்று பளிச்சென்று பதில் சொல்லி விட்டான் ஜகதீசன்.

இதை யறிந்த கமலா தனக்குக் கலியாணத்திற்கு இப்பொழுது அவசரம் இல்லை என்றும் தான் காலேஜில் சேர்ந்து படிக்கப் போவதாகவும் சொல்லிவிட்டாள். அவள் எண்ணம் என்னவென்றால் இன்னும் சிறிது நாட்களில் தன் மனத்தை யறிந்து ஜகதீசனே தன்னை மணந்து கொண்டு விடுவான் என்பதுதான். ஆனால் அவனோ திடுதிப்பென்று ஒருவருடனும் சொல்லாமல் லக்ஷ்மி என்றொரு பெண்ணைப் போய் தனக்கென்று நிச்சயம் செய்து கொண்டு வந்து விட்டான்.

விவாகமாகி லக்ஷ்மி வீட்டிற்கு வந்தபின் கமலாவுக்கு அவளிடம் முதலிலிருந்த பொறாமை அகன்றுவிட்டது. லக்ஷ்மியின் கள்ளம் கபடமற்ற குணமும், அன்பும் கமலாவின் இளகிய மனத்தை வெகு சீக்கிரம் கவர்ந்து விட்டது.

லக்ஷ்மி எப்பொழுதும் போல் அந்த மோதிரத்தைக் கழற்றி ஸ்வாமி அலமாரியிலிருந்த வெள்ளி விக்ரகத்தின் அடியில்தான் வைத்திருந்தாள். அது இன்று காணமற் போனது அதிசயமாயிருந்தது. கமலாவும் லக்ஷ்மியுமாக அதை மூன்று மணி நேரம் தேடிப் பார்த்து விட்டார்கள். அது அகப்படவில்லை. லக்ஷ்மி ஓரேயடியாக ஓய்ந்து உட்கார்ந்து விட்டாள். இதைப் பார்த்த கமலாவுக்குக் கஷ்டமாயிருந்தது.

"போனால் போகிறது லக்ஷ்மி, இன்னைக் கெல்லாமிருந்தால் கால் பவுனுக்கு மேலிராது. வேறொன்று செய்து கொள்ளலாம்" என்று தேறுதல் சொன்னாள்.

"கமலா! நீ அதைப்பற்றி அறிந்தால் இப்படிச் சொல்லமாட்டாய். அதை நான் பகவானுடைய ஞாபகச் சின்னமாக பாவித்து வந்தேன். அந்த மோதிரம் தொலைந்து விட்டது என்றால் என் மனம் ரொம்ப வேதனைப் படுகிறது."



இதைச் சொல்லும் பொழுது லக்ஷ்மியால் துக்கத்தை அடக்க முடியவில்லை.

கமலாவுக்கு அதைப் பற்றி அறிய ஆவலாகி விட்டது. "அதென்ன லக்ஷ்மி? என்னிடம் தான் சொல்லேன்" என்றாள். லக்ஷ்மிக்கும் மனத்திலுள்ளதை யாரிடமேனும் சொல்ல வேண்டும்போலிருந்தது. அவளுக்குக் கமலாவைவிட ஆப்தமானவர்கள் யார் இருக்கிறார்கள்?

2

சீரூர் கிராமத்தில் கொஞ்சம் நிலவே லுள்ள குடித்தனக்காரர் மகாதேவன். அவருடைய பெண்ணாகத்தான் அவதரித்தாள் மீனா. உலகத்தில் கஷ்டப்படுவதற்கென்றே பிறந்த அவளுடைய மூன்றாவது வயதிலேயே அவளையும் அவள் அண்ணா ராமுவையும் திக்கற்றவர்களாக்கிவிட்டு அவள் தாய் இறந்து விட்டாள். அவள் தந்தை இரண்டாந்தாரமாக அசுர குணம் படைத்த தங்கம்மாளை மணந்து கொண்டார். தங்கம்மாள் வரும்பொழுதே தன் பிறந்த வீட்டுக் குடும்பத்துடன் வந்து விட்டாள்.

மீனாவும் ராமுவும் தங்கம்மாளிடமும் தங்கள் தந்தையிடமும் பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்லை. மீனாவைவிட எட்டு வயது மூத்தவன் ராமு. அவனுக்கு இந்தக் கஷ்டத்தை விட்டு எங்கேனும் போய் விட வேணும் என்று தோன்றி விட்டது. இருமி மீனாவுக்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து வந்தான். அவளுக்குப் பதினோராவது வயதில் விவாகம் நடந்தது. அதற்கு மறு மாதமே ஒருவருடனும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டான் ராமு.

புருஷனுடன் இரண்டு வருஷங்கள் கஷ்டமின்றி வாழ்க்கை நடத்தினாள் மீனா. லக்ஷ்மியும் பிறந்தாள். திடீரென்று மீனாவின் கணவன் நோயில் படுத்து விட்டான். மூன்று வருஷங்கள் அவன் நோயோடு அவஸ்தைப் பட்டுக் கடையில் இருந்த சொத்தையும் வைத்தியர்களுக்குப் பங்கிட்டு விட்டு மீனாவையும் லக்ஷ்மியையும் தங்கம்மாளின் கொடுமைக்கு ஆளாக்கி விட்டு அவன் உயிர் நீத்தான். புகுந்த வீட்டில் ஒரு கதியுமில்லாத மீனா மறுபடியும் தங்கம்மாளிடம் வந்து அகப்பட்டுக் கொண்டாள்.

ராமு போன சிறிது நாட்களுக்கெல்லாமே மனமுடைந்து போன மகாதேவன் இருந்த ஆஸ்தியையும் தங்கம்மாள் பேரில் எழுதி வைத்து விட்டு இறந்து விட்டார். எல்லாம் தங்கம்மாளின் அட்டகாசமாகி விட்டது.

லக்ஷ்மிக்கு ஐந்து வயது முதல் பொறுமையும் விவேகமும் வந்து விட்டன. தங்கம்மாள் முதலியோர் தங்களைக் கேவலமாய் நடத்துவதை அவள் உணர்ந்திருந்தாள். அவர்களுடைய திட்டுக்களையெல்லாம் கேட்டுக்கொண்டு மீனா எல்லா வேலைகளையும் செய்வதைப் பார்க்கும்பொழுது அவளுக்குப் பரிதாபமாயிருக்கும். அங்கே இருக்கப் பிடிக்காமல் அழுகை வந்து விடும். அந்தச் சமயங்களில் அவளுக்கு எதிர் வீட்டுத் தாத்தாதான் அடைக்கலமாயிருந்தார்.

3

மீனா வீட்டிற்கு எதிர் வீட்டிலிருந்த பெரியவருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் நல்ல விவேகி. அவரும் அவர் மனைவி தர்மாம்பாளும் மனத்தை நல்ல விஷயங்களில் செலவிட்டுக் காலம் போக்கி வந்தார்கள். அவர் சனிக்கிழமைகளில் பஜனை செய்வார். எல்லோருக்கும் அவரிடம் மதிப்பு அதிகம்.

மீனு எதிர் வீட்டுக்குக் கதை கேட்கப் போவதைத் தங்கம்மாள் தடை செய்யவில்லை. பகல் முழுவதும் செக்கு மாடு போல் உழைத்து அலுத்திருந்த மீனுவுக்கு அங்கு போய் உட்கார்ந்ததும் தூக்கம்தான் வரும். அவளோடு கூடச் சென்றிருக்கும் லக்ஷ்மிதான் அதில் ஒரு விஷயமும் விடாமல் கவனமாய்க் கேட்பாள். இப்படியே அவளுக்குப் பக்த விஜயத்தில் பாதிக்கு மேல் மனப்பாடமா யிருந்தது.

ஒரு நாள் தாத்தா தன்னிடமிருந்த ஒரு சிறு பாலகிருஷ்ண விக்ரகத்தை அவளுக்குக் கொடுத்து அதைப் பூஜித்து வரும்படி சொன்னார். தங்கம்மாளுக்குப் பயந்த லக்ஷ்மி அதைத் தாத்தா வீட்டிலேயே வைத்துப் பூஜித்து வந்தாள். தனக்கு எந்தத் தின்பண்டங்கள் கிடைத்தாலும் அதை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்வாள். அவளுக்குத் தன்னை யாரேனும் கோபித்தாலும் அடித்தாலும் உடனே பகவான் பிரசன்னமாகித் தன்னைக் காப்பாற்ற மாட்டாரா என்று தோன்றும். அப்பொழுது தாத்தாவிடம் போய் "தாத்தா! நாம தேவருக்கு நேரே வந்தமாதிரி எனக்கும் சாமி நேரே வந்து காப்பாத்துவாரா?" என்று கேட்டாள். அதற்குஅவர் "யாரேனும் மனிதரைப்போல் வந்து காப்பாற்றுவார்" என்று சொல்லி அவளுடைய நம்பிக்கையை அதிகமாக்கி வந்தார்.

எதிர் வீட்டுத் தாத்தாவின் மனைவி தர்மாம்பாளுக்கு ஒரு தங்கை யிருந்தாள். அவளுக்கு நிறையச் செல்வமிருந்தும் வெகு காலம் குழந்தை யில்லாதிருந்து தவியாய்த் தவித்துத் தவமிருந்து பிறந்தான் அம்பி. அவன் பிறந்த சில வருஷங்களுக்குள் அவனைச் சீராட்டிப் பாராட்டக் கொடுத்து வைக்காமல் அவன் தாய் சென்றுவிட்டாள்.

அவனை வெகு செல்வமாக வளர்த்து வந்தார் அவனுடைய தந்தை. அவரை உத்தியோக நிமித்தம் பல ஊர்களுக்கு மாற்றி வந்ததால் அவனை ஹைஸ்கூல படிப்பிற்காகப் பெரியம்மாவிடம் அனுப்பி யிருந்தார். அவனுக்கு வயது பதினொன்று. அந்த ஊருக்கு ஒன்றரை மைலில் இருந்த நகரத்து ஸ்கூலில் அவன் படித்துவந்தான்.

அம்பி அங்கு வந்த இரண்டு நாட்களுக்குள், அவனுக்கு லக்ஷ்மி, மீனு இவர்களின் வரலாறு தெரிந்து விட்டது. இயற்கையிலேயே அன்பும் தயவும் கொண்டிருந்த அவனுக்கு எதிர் வீட்டுக் குழந்தை லக்ஷ்மியிடம் ஒரு தனி அபிமானம் விழுந்து விட்டது.

மீனுவுக்குத் தன் வேலைத் தொந்தரவில் லக்ஷ்மி சாதாரணமாய் ஏதேனும் கேட்டால் கூடச் சிலசமயம் கோபம் வந்து விடும். குழந்தையை அடித்து விடுவாள். அப்பொழுதெல்லாம் அவளுக்கு ஆறுதலளித்தவன் அம்பி மாமாதான்.

உடம்பும் மனமும் உழைத் துழைத்து சோர்ந்து போன மீனு, அம்பி வந்த சில மாதங்களுக்கெல்லாம் படுக்கையாய்ப் படுத்து விட்டாள். அதற்குப் பிறகு அவள் எழுந்திருக்கவே யில்லை.

மீனு இறந்தபின் தங்கம்மாள் லக்ஷ்மிக்கு வெட்டிச் சோறுபோட இசைவாளா? ஏழு வயதான அந்தச் சிறுமிதான் தினம் இரண்டு வேளையும் பக்கத்திலிருந்த நதியிலிருந்து ஜலம் கொண்டு வரவேண்டும். இன்னும் எவ்வளவோ சில்லறை வேலைகளுண்டு.

4

அன்று தினத்தைவிடச் சற்று முன்னாகவே ஜலத்திற்கு வந்துவிட்டாள் லக்ஷ்மி. நுங்கும் நுரையுமாகப் பிரவாகம் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்குப் பயமாக இருந்தது. மேலே நின்றபடியே மெல்லக் குடத்தை எட்ட விட்டாள். கால் சற்றுச் சறுக்குப்போல் தோன்றியது. அவ்வளவுதான்; குடத்தை விட்டு விட்டு மேலே ஏறி விட்டாள். இப்பொழுதுதான் அவளுக்குத் தான் செய்த தவறு புரிந்தது. குடம் ஆற்றோடு போகிறது. அவளால் அதை எடுக்க முடியாது. குடமின்றி வீட்டுக்குப் போனால் தங்கம்மாளின் மூர்க்கம் பயங்கரமா யிருக்கும். ஒரு வழியும் இல்லாதிருப்பதைக் கண்டதும் அவளுக்கு அழுகைதான் வந்தது.

கண்களை இறுக மூடிக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் "லக்ஷ்மி" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். என்ன அதிசயம்! அவள் எதிரே அம்பி மாமா அவள் ஆற்றில் உருள விட்ட குடத்துடன் நின்றுகொண்டிருந்தான். லக்ஷ்மி இமை கொட்டாமல் சற்று நேரம் அவனையும் குடத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். இதைக்கண்டு அம்பி, "பக்கத்துத் துறையில் நான் விளையாடிக்கொண்டிருந்த பொழுது இது அங்கு மிதந்து வந்தது. எடுத்த பின் இது உன்னுடைய தென்று அறிந்து கொடுக்க வந்தேன்" என்றான். இதை லக்ஷ்மி காதில் வாங்கிக் கொண்டாளோ என்னவோ,



"ஏனம்மா! ஏன் இப்படி வரிசையாக மௌனதானத்தோடு நின்றுகொண்டிருக்கிறீர்கள்?"

"பையன் மிலிட்டரியிலிருந்து நாலு நாள் லீவில் வந்திருக்கிறான். அவனுக்கும் பெண்ணைப் பிடித்துவிட்டால் சட்புட் டென்று தாலியைக் கட்டிவிடலாமென்றுதான்!"

அவன் கையைப் பிடித்துக்கொண்டு "அம்பி மாமா! நான் ஒன்று கேக்கறேன். நிஜத்தைச் சொல்லுவாயா?" என்றாள்.

"ஊம்......கேளு."

"நீ லாயிதானே, சொல்லு?"

இதைக் கேட்டதும் அம்பிக்குச் சிரிப்பு வந்து விட்டது

"இல்லே, லக்ஷ்மி!" என்றான் மெல்ல.

"பின்னே தினம் மேற்குத் துறைக்குப் போவையே, இன்னிக்கிக் கிழக்குத் துறைக்கு ஏன் போயிருந்தே? உனக்குக் குடம் அங்கே வருமென்று தெரிஞ்சு தானே?"

அம்பியால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

அன்று முதல் அவளுக்கு அம்பி மாமா தெய்வமாகத்தான் தோன்றினான். இப்படியே மீனு இறந்தபின் இரண்டரை வருஷங்களை அம்பியின் அன்பிலேயே கடத்தி விட்டாள் லக்ஷ்மி.

5

அன்று ஊர் முழுவதும் ராமுவின் பேச்சாகவே இருந்தது. பதினைந்து வருஷங்களுக்குப் பின் மறுபடியும் ராமுவைக் கண்ட அவர்கள் தங்கள் உணர்ச்சிகளை வாயினால் வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். அதுவும் அரைத் துணியோடு சென்றவன் ஐச்வர்யவானாய் ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்ட சிலர் அவனை விசாரிப்பதற்காக ஓட்டமாய் ஓடி வந்தார்கள்.

அவனுக்கு முன்பு தங்கம்மாளிடமிருந்த வெறுப்பால் தன்னைப்பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. தாய்நாடு திரும்பியதும் மீனுவைப் பார்க்கும் ஆவலுடன் ஊருக்கு ஓடிவந்தான். அங்கு வந்த பின்புதான் அவனுக்கு மீனுவின் கதியும் லக்ஷ்மியின் பரிதாபமும் தெரியவந்தது. லக்ஷ்மியை அணைத்துக் கொண்டு தன் துக்கம் தீரக் கண்ணீர் விட்டான். இனி லக்ஷ்மியைத் தங்கம்மாளின் கொடுமைக்கு ஆளாக்க மனமின்றித் தன்னுடன் அழைத்துப் போகத் தீர்மானித்து விட்டான்.

மாமாவின் அன்பில் உலகத்தையே மறந்திருந்தாள் லக்ஷ்மி. அவளுக்குத் தான் தங்கம்மாளை விட்டுப் போய்விடப் போவதைப்பற்றிச் சந்தோஷந்தான். ஆனால் அம்பி மாமாவைவிட்டுப் போகவேண்டுமே என்று கொஞ்சம் சங்கடமாயிருந்தது.

விடியற்காலை கிளம்பவேண்டும். மாலையிலேயே தன் தோழிகளிடமெல்லாம் சொல்லிக்கொண்டு வந்துவிட்டாள் லக்ஷ்மி. அம்பியும் தாத்தாவும் நிலவு காய்ந்துகொண்டிருந்த முற்றத்தில் உட்கார்ந்திருந்தார்கள். லக்ஷ்மியும் போய் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தாள். அம்பி யோசித்துக்கொண்டிருந்தான்.

"அம்பி மாமா! காலைக்கு நான் ஊருக்குப் போகப் போறேன்னு உனக்குக் கோபமா?"

"இல்லே லக்ஷ்மி, அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமோ?"

"சாமியை யாராவது மறப்பாளா? தாத்தாவைக் கேளு. நீதான் என்னை மறந்துடுவே!"

இதைக் கேட்டதும் தாத்தா சிரித்து விட்டார். தன் ஞாபகார்த்தமாக அம்பி மாமாவுக்கு ஏதேனும் நல்லதாய் ஒன்று கொடுக்கவேணு மென்று லக்ஷ்மிக்குத் தோன்றியது. அவளிடம் இருந்த தெல்லாம் அவள் கையிலிருந்த ஒரு ஜோடிப் பித்தளை வளையல்கள் தான்.

"இந்தா, அம்பி மாமா!" என்று வளை களைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள்.

"எனக்கு எதற்கு இது?"

"என்னை மறக்காமல் இருக்க!"

அதை வாங்கிக்கொண்ட அம்பி தன் விரலிலிருந்த தங்க மோதிரத்தை எடுத்து லக்ஷ்மியின் கைவிரல் ஒவ்வொன்றிலும் போட்டுக் கடைசியில் அது அவள் கட்டை விரலில் பொருந்தியதும், "என்னை மறக்கா மலிருக்க இது உனக்கு" என்றான்.

"அம்பி மாமா, நீ என்னைப் பார்க்க எப்ப வருவே?" என்றாள். இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தாத்தா, "உன் கலியாணத்தின் போது!" என்றார். லக்ஷ்மி யின் கண்கள் ஆச்சரியத்தைக் காட்டின. "நிஜமாவா அம்பி மாமா?" என்றாள்.

குழந்தை யுள்ளத்துடன், "கட்டாயம் வருகிறேன்" என்றான் அம்பி.

6

லக்ஷ்மி தன் மாமாவுடன் வந்து ஆறு வருஷங்களாகிவிட்டன. இப்பொழுது அவள் உருவத்திலும் நடையுடைகளிலும் எவ்வளவோ மாறி இருந்தாள். மாமி அவளைத் தன் பெண் போல் பாவித்து வந்தாள். ஆட்டமும் பாட்டமும் படிப்புமாக மாமாவின் பேரன்பில் அவளுக்கு ஒன்றும் குறைவின்றி இருந்தது. எவ்வளவிருந்தும் லக்ஷ்மியால் பழைய சம்பவங்களையும் அம்பி மாமாவையும் மறக்க முடியவில்லை.

லக்ஷ்மியின் விவாகத்தைப் பற்றி மாமாவும் மாமியும் சிந்தித்தார்கள். பல வரன்களைப் பார்த்த பிறகு, கடைசியில் மாமா ஜகதீசனை நிச்சயம் செய்துகொண்டு வந்து விட்டார்.

இப்பொழுதுதான் லக்ஷ்மிக்குக் கூறத் திறமற்ற மனக்கிளர்ச்சி ஏற்பட்டது. தான் சொல்லியபடி விவாகத்தன்று அம்பி மாமா வருவானா? அவனுக்குத் தன் விவாகம் எப்படித் தெரியும்? இது என்ன அசட்டுத் தனம்? அன்று அவன் வேடிக்கையாய்ச் சொன்னதை இன்னும் நம்பி வருகிறோமே என்று இப்படியாக அவள் மனம் அலைந்தது.

பேதையுள்ளம் இன்னும் சிறிது நம் பிக்கை வைத்திருந்தது. விவாகத்தன்று வந்திருந்த கூட்டத்தில் லக்ஷ்மியின் கண்கள் அம்பி மாமாவை வட்டமிட்டுத் தேடின. கடைசியில் ஏமாற்றந்தான். "சீ! இதென்ன மூடத்தனம்? வந்திருந்தால் நம்மைக் கண்டு பேசாமலா போவான்?" என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

• • •

ஒருவிதமாக விஷயங்களைச் சொல்லி முடித்தாள் லக்ஷ்மி. லக்ஷ்மியின் கபடமற்ற ப்ரேமையையும் நம்பிக்கையையும் அறிந்த கமலாவின் இளகிய மனம் குழைந்து விட்டது. இப்பொழுது அவளுக்கு ஜகதீச னிடம் இருந்த ஒருவித வெறுப்பு அம்பியிட மும் தாவியது. "லக்ஷ்மி! போயும் போயும் நீ அந்த அம்பியைத் தெய்வத்திற்குச் சம மாக மதிக்கிறாயே! அவன் உன்னை நினைக் கக்கூட இல்லை. இந்த ஆண்பிள்ளைகளையே நம்பக் கூடாது, வெறும் அழுத்தக் காரர்கள்!" என்றாள்.

"ஸ்திரீகளெல்லாம் புத்திசாலிகளானாலும் சில விஷயங்களில் தவறி விடுகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே ஜகதீசன் அங்கு தோன்றினான். அவனைக் கண்ட இரு வரும் ஸ்தம்பித்து விட்டார்கள்.

இவ்வளவு நேரம் தான் சொல்லியவை களைக் கேட்டு வந்திருக்கிறான் என்று தெரிந்த லக்ஷ்மியின் மனம் என்ன நினைப் பானோ என்று பதைத்தது.

கமலா தைரியமாக "எதில் தவறி விட் டார்கள்?" என்றாள்.

ஜகதீசன் தன் கையிலிருந்த ஒரு புகைப் பட அட்டையைக் கமலாவிடம் கொடுத்து, "இது யார்?" என்றான்.

"ஏன்? தாங்கள் ஹைஸ்கூலில் படித்த பொழுது எடுத்து வந்த திருக்கோலம்தான் இது!" என்று சிரித்தாள் கமலா. இதற்குள் லக்ஷ்மியும் அதைத் திரும்பிப் பார்த்தாள். அவளையும் அறியாமல் அவள் வாய் "அம்பி மாமா!" என்று கூவியது.

"லக்ஷ்மி! உன் தெய்வம் சரியான தெய்வம்தான்" என்றாள் கமலா. வெட்கத் துடன் தன் அறைக்குச் சென்றுவிட்டாள் லக்ஷ்மி. அங்கிருந்து அவள் மெல்லிய குரலில் பாடியது காதில் கேட்டது :—

சின்னக்குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான்—நல்ல
வண்ணமகளிர் வசப்படவே பல
மாயங்கள் சூழ்ந்திடுவான்!



உணவு...
துணிகள்...
குழந்தைகளின் படிப்பு...
யுத்தம்.
வியாகூலத்தால் சூழ்ந்துகொள்தல்
இந்தியன்
டீ
சோர்வடையும் சமயம்
டீ அருந்துங்கள்

வட்டமேஜை

எஸ். இ. ஏ. ஸி.
16—4—45

"கல்கி" ஆசிரியரவர்கட்கு,

ஏப்ரல் 1ந் தேதி கல்கியில் தாங்கள் எழுதியிருந்த "வீரருக்கு வரவேற்பு" என்னும் தலையங்கத்தைப் பார்த்து மகிழ்வடைந்தேன்.

1942-ல் தாங்கள் துணைக் கல்கி ஆரம்பித்து — இராஜாஜியின் கொள்கையை ஆதரித்து எழுதிய அந்தக் காலத்திலே, இராஜ தந்திரத்தை முக்காலணாவுக்கு மூர் மார்க்கெட்டிலே வாங்க நினைக்கும் பேர்வழிகள் உங்களை எதிர்த்தார்கள் அல்லவா? அவர்கள்,

அதிகார வர்க்கத்திடம்
ஆட்சியைக் கொடுத்துட்டு
அவதிப்படலாச்சுதே — கடவுளே

என்று பாட்டுப் பாடும் நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வீணாக உங்களைச் "சோற்றுப் பட்டாளம்" என்று விளாசித் தள்ளுகின்றார்கள்.

நீங்கள் எழுதிய "இந்தியாவின் விடுதலையில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் இங்கே உள்ளவர்களுக்குக் கூட இராது என்று சொல்லலாம்" என்னும் வாசகம் — 100 சதவிகிதம் அரிச்சந்திரன் வாசகத்திற்குச் சமம் எனச் சொல்லலாம். அது கண்டிப்பாக நடக்கப்போகிறது.

தீர்க்க திருஷ்டியுடன் விஷயங்களை அருவி எழுதும் தங்கள் பேனா ஓய்வின்றி எழுதி நீடூழி வாழ்ந்துவர வேணுமெனப் பார்வதி விருந்தபடியே, பரமாத்மாவை வேண்டிக் கொள்கிறேன்.

அ. மு. ராமசாமி
144. ஜி. பி. டி. கம்பெனி
எஸ். இ. ஏ. ஸி.

(காம்ப்) வாணுஜிராஜன் பட்டணம்,
22—4—45.

கல்கி ஆசிரியர் அவர்கட்கு,

தங்கள் 1-4-45 கல்கி தலையங்கத்தைப் (வீரர்களுக்கு வரவேற்பு) படித்து மகிழ்ந்தவர்களில் நான் ஒருவன். யுத்தத்திலிருந்து வரும் வீரர்களை ஏகாதிபத்யத்தின் கைக்கூலிகளாகாமல் காப்பாற்றத் தங்கள் தலையங்கம் மிகுதியும் பயனளிக்கும்.

நான் இராணுவத்தில் உள்ளவன். எங்களில் பெரும்பாலோர் தேசபக்தியில் மற்றையவரினும் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களல்ல. இதை நான் உறுதியாகக் கூறுகிறேன். தாங்கள் சோற்றுப் பட்டாளம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் உலகில் சோர் நீங்கலாக எவர்தான் வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் பாடு படுபவர் அல்லர்? கிராமத் தலையாரி முதல் வைஸ்ராய் கவுன்ஸில் மெம்பர்களாக உள்ள ஒவ்வொரு உத்யோகஸ்தரும் பொது ஜனங்களில் ஒவ்வொரு வர்க்கத்தினரும் அந்நிய ஆட்சிக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒத்துழைப்பதால் தான் அந்நிய ஆதிக்கம் நீடிக்கிறது.

காங்கிரஸ் மந்திரிகளும் கூடத்தான் 'யூனியன் ஜாக்' முன்னர் ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். ஆதலால் அவர்கள் அதன் நீடிப்புக்காகப் பாடுபடுகிறவர்களா?

1918-க்கும் 1945-க்கும் இடையில் பொது ஜனங்களின் அரசியல் அறிவில் ஏற்பட்ட மாறுதல் மகத்தானது. 1918-ல் அரசியல் உயர்தர மத்திய வகுப்பாரின் தனிப்பட்ட 'கலை' 1945-ல் அது பொது ஜனத்தின் உயிர்நாடி. 1918-ல் பொதுஜன வாடையே எட்டாமல் பழக்கப்பட்ட பட்டாளம் இப்போது பொது ஜனங்களின் பசி உள்ள பட்டாளம். யுத்தத்துக்குப் பின்னால் நாங்கள் அரசியல் தலைவர்களையோ இந்தியர்களையோ கடுவோமென்பது மடமை. நான்கு ஆண்டுகள் காக்கியுடை அணிந்ததால் எங்கள் தேசபக்தி தேசத்துரோகமாக மாறாது.

எம். சீதாராம்,
விமானப்படை.

['சோற்றுப் பட்டாளம்' என்று தூற்றப்படும் இந்திய சைன்யத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து வந்த மேற்கண்ட இரு கடிதங்களையும் மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். நமது வீரர்களின் தேசிய மனப்பான்மைக்கு மேற்படி கடிதங்களே அத்தாட்சியாகும். —ஆசிரியர்.]

மயிலாப்பூர்,
22—4—45.

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் ஆபீஸில் ஒரு துக்ககரமான நிகழ்ச்சி நடந்ததைக் குறித்து வருந்துகிறேன். தங்கள் வெள்ளைப் பூனையின் ஆயுள் பத்து நாட்களுக்கு முன் முடிந்துவிட்டதாமே! (நம் ஜுன்வெல்லடத்தான் குறிக்கிறேன்.) மெத்த வருத்தம்.

இந்த வாரக் 'கல்கி'யைப் படித்தேன். தாங்கள் கூறியுள்ள ஓர் விஷயத்தை ஆதரிக்கிறேன். உண்மையாகவே நம் தமிழர்கள் தம்மிடம் சரக்கிருந்தும் அதை அறியவில்லை. ஆம். நம் சத்தியமூர்த்தியின் ரூபகார்த்த நிலையை ஆதரிப்பதிலே இது தெரிகிறது.

ஒரு விசேஷம். தங்கள் "தேசிய வாரம்" என்ற தலையங்கத்தை நான் படித்தேன். உடனே போய் ஓர் இராட்டினம் வாங்கினேன். நூற்க ஆரம்பித்தேன்.


நூற்பதற்கு வேண்டிய பொறுமை கொஞ்ச நஞ்சமல்ல. அப்பா !—

நான் முதலில் நூற்ற நூலை (90 சுற்றுகள்) மகாத்மாவின் படத்திற்கு அணிவித்தேன்.

உங்களுக்கும் என் நூற்கும் 'மாடலை' அனுப்ப எண்ணம் கொண்டிருக்கிறேன்.

உங்கள்
ம. சு. ஸ்ரீநிவாஸன்.

[நமது தலையங்கத்தின் பயனாக ஒருவராவது நூல் நூற்கத் தொடங்கினார் என்பது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. நூல் பரிசை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.—ஆசிரியர்.]




ஒரு கோழிக்குப் பன்னிரண்டு குஞ்சுகள் இருந்தன. அந்தக் குஞ்சுகள் அடிக்கடி தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொண்டன. தன்னால் ஆனமட்டும் தாய்க்கோழி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவை கேட்கவில்லை.

அந்தப் பன்னிரண்டு குஞ்சுகளில் ஒரே ஒரு குஞ்சுக்கு மட்டும் ரொம்ப ரொம்பக் கோபம். அது ஒரு நாளும் தன் சகோதரக் குஞ்சுகளுடன் சேர்ந்து வாழ்வதில்லை. எல்லோருமாகச் சேர்ந்து கிடைக்கும் இரையைப் பங்கிட்டுத் தின்னும் வழக்கம் அதற்குக் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை. தான் மட்டும் தனியாகச் சென்று கிடைக்கும் இரையைத் தானே தின்னும். அந்தச் சமயத்தில் சகோதரக் குஞ்சுகள் அங்கே வந்தால் அது விரட்டி விரட்டி யடிக்கும். அந்தக் குஞ்சின் கோபத்தைக்கண்டு, "நாம் இருக்கும் போதே இந்தக் குஞ்சு தன் சகோதரக் குஞ்சுகளுடன் இப்படிச் சண்டை யிடுகிறதே. இன்னும் நாம் இல்லாவிட்டால் எப்படிச் சண்டை யிடும்?' என்று எண்ணி, தாய்க் கோழி ரொம்ப ரொம்ப வருந்தும்.

ஒரு நாள் 'கொக், கொக்' என்று கொக்கரித்துக் கொண்டே தாய்க் கோழி முன்னே சென்றது. 'கொக், கொக்' என்றால் கோழி பாஷையில் 'வா, வா' என்று அர்த்தமோ, என்னமோ! — குஞ்சுகளும் 'கியாங், கியாங்' என்று கூவிக்கொண்டே தாய்க் கோழிக்குப் பின்னால் சென்றன. ஒரு வீட்டு முற்றத்தில் கேழ்வரகு உலர வைத்திருந்தது. வெளியே ஒருவரையும் காணோம்.

இதுதான் சமயமென்று தன் குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு தாய்க் கோழி அவசரம் அவசரமாக விரைந்து சென்றது. ஆனால் அந்தக் கோபக் காரக் கோழிக் குஞ்சுக்கு மட்டும் தன் தாய் எல்லாக் குஞ்சுகளையும் கூட்டிபோவது பிடிக்கவில்லை. ஆகவே அது எல்லாவற்றையும் சண்டை யிட்டுத் துரத்தி விட்டு, தன்னால் ஆனமட்டும் கேழ்வரகை ஒரு கை பார்த்தது. தாய்க்கோழியும் 'தானே புத்தி வரும்' என்று எல்லாவற்றையும் அந்தக் குஞ்சுக்கே விட்டு விட்டு, மற்றக் குஞ்சுகளைச் சமாதானம் செய்து வேறு இடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று விட்டது.



கணவன் :— நான் எழுதிய கட்டுரையைக் குழந்தை கிழித்து விட்டான்.

மனைவி :— அட கண்ணு! உனக்கு எப்படடா படிக்கத் தெரிந்தது?



அளவில்லாமல் கேழ்வரகைத் தின்று வயிற்றைப் பெரிதாக்கிக் கொண்ட கோழிக் குஞ்சு, அப்படி யிப்படி அசைய முடியாமல் ஒரு மரத் தடியில் நின்று இளைப்பாறிக் கொண்டிருந்தது. அப்பொழுது ரொம்ப ரொம்பப் பசியுடன் வானத்தில் வட்ட மிட்டுக் கொண்டிருந்த ஒரு பருந்து அதைப் பார்த்து விட்டது. உடனே அது விரைந்து வந்து அந்தக் குஞ்சைத் தன் கால்களால் பற்றிக் கொண்டு வானத்தில் பறந்தது. பாவம்! அப்பொழுது அந்தக் கோழிக் குஞ்சு 'கியாங், கியாங்' என்று அலறியது கேட்பதற்குப் பரிதாபமா யிருந்தது!

“சகோதரர்களுடன் சேர்ந்து இருந்திருந்தால நமக்கு இந்தக் கதி வந்திருக்குமா? நாம் தனியே இருக்கப் போகத்தானே பருந்து அவ்வளவு தைரியமாய் வந்து நம்மைத் தூக்கிக் கொண்டு செல்கிறது? அம்மாவுடன் நாம் இருந்திருந்தால அவள் 'கொக் கொக்கோ' என்று இரைந்து கூவி, பருந்தை விரட்டி யடித்திருப்பா ளல்லவா? இப்பொழுது எப்படி இந்தப் பருந்தினிடமிருந்து நாம் தப்புவது?” என்றெல்லாம் அந்தக் குஞ்சு எண்ணமிட்டது.

இந்தச் சமயத்தில், கோழிக் குஞ்சைத் தின்பதற்காகப் பருந்து ரொம்ப உயரமான ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்து கொண்டது. பயத்தால் கோழிக் குஞ்சின் உடம்பு 'பட பட' வென்று நடுங்கிற்று; கால்கள் மரக் கிளையில் படியாமல் 'தட தட' வென்று உதறின. இன்னும், பருந்து அருகிலிருந்த ஒரு கிளையில் தன் மூக்கைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்ட போது, கோழிக் குஞ்சின் கண்களி லிருந்து கண்ணீரே வந்துவிட்டது.



நல்ல வேளையாக, அப்பொழுது கோழிக் குஞ்சுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அது பருந்தைப் பார்த்து, “நீ என்னைத் தின்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை யில்லை. ஆனால், கெட்டவர்களா யிருந்தாலும் அவர்களுக்குக் கேடு நினைக்கக் கூடாது என்பது என் எண்ணம். அதனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் உன்னிடம் சொல்லிவிட வேண்டுமென்று நினைக்கிறேன். இப்பொழுதுதான் என்னை ஒரு பாம்பு கடித்து விட்டது. அதனால்தான் அப்படி யிப்படி அசையாமல் சோர்ந்துபோய் அந்த மரத் தடியில் நின்று கொண்டிருந்தேன். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் நான் விஷம் ஏறி இறந்துவிடப் போவது நிச்சயம். என்னமோ என் கதிதான் அப்படி ஆகிவிட்டது; என்னைச் சாப்பிட்டு நீயும் விஷம் ஏறி இறந்துவிடக் கூடாதே என்பது தான் என் கவலை. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்; இனிமேல் உன் இஷ்டம்” என்று ஒரு போடு போட்டது கோழிக் குஞ்சு.

பருந்தும் அதை உண்மையென்று நம்பி, கோழிக் குஞ்சை உடனே கீழே கொண்டு வந்து விட்டு விட்டது. தன் யுக்தி பலித்ததைக் கண்டு சந்தோஷமடைந்த கோழிக் குஞ்சு, தன் சகோதரக் குஞ்சுகளிடம் விஷயத்தைச் சொல்லிற்று. அதைக் கேட்ட சகோதரக் குஞ்சுகள், “வேண்டும், உனக்கு! இப்பொழுதாவது புத்தி வந்ததா?” என்றன.

“கண்ணே! இனிமேலாவது உன் சகோதரர்களுடனே சேர்ந்து இரு!” என்று சொல்லி, தாய்க் கோழி தன் சிறகால் குஞ்சை அன்புடன் அணைத்துக் கொண்டது.

அன்று முதல் அந்தக் கோழிக் குஞ்சு தன் சகோதரர்களை விட்டுப் பிரிவதே இல்லை.

சந்தேகமில்லை!

ஸோமாஸ்

கோமதிக்கு வரன் சம்பாதிப்பது சபேசய்யருக்குச் சிரமமாகவே தோன்றவில்லை. அதற்குக் காரணம் கோமதியின் அழகு மட்டும் அல்ல; சபேசய்யரின் அபரிமிதமான செல்வமுங்கூட. அழகுக்கு அழகு செய்வது போல் கோமதியை அப்படியே வைரத்தால் இழைத்து விட்டார் சபேசய்யர்.

கோமதி அணிந்து கொண்டிருந்த வைர நகைகள் பிள்ளையைப் பெற்றவர்களின் கண்ணில் படாமல் போய்விடவில்லை. மிஸ்டர் தியாகராஜய்யரின் கண்ணில் அந்த நகைகளின் பிரகாசம் படவே அவருக்கு இராத் தூக்கம் இல்லாமற் போய்விட்டது. காரணம் அவர் பிள்ளை சுந்தரேசனுக்கு எப்படியாவது கோமதியை விவாகம் செய்து வைத்துவிட வேண்டும் என்னும் ஆசையால்தான். ஆனால் தாமே சபேசய்யரிடம் சென்று அவர் மகளைத் தம் குமாரனுக்குக் கேட்பதா என்ற எண்ணம் தோன்றி அவரை இந்த விஷயத்தில் ஒன்றும் செய்ய வொட்டாமல் செய்தது.



ஆனால் தியாகராஜய்யரின் ஆசை நிராசையாய்ப் போய் விடவில்லை. சபேசய்யரின் மாப்பிள்ளை வேட்டையில், தியாகராஜய்யரின் பிள்ளை சுந்தரேசன் அகப்பட்டான்.

இந்த வரன் எல்லா விஷயங்களிலும் சபேசய்யருக்குத் திருப்தியாயிருந்தது. பையன் பி. ஏ. பாஸ் செய்திருந்தான்; கண்ணுக்கும் நன்றாயிருந்தான்; ஒரு கம்பெனியில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்திலும் இருந்தான். கோமதியின் வைர நகைகளை மாப்பிள்ளை, கடன் கிடன் பட்டு, 'அபக்காயஸ்வாஹா' செய்துவிடுவானோ என்ற பயமும் சபேசய்யருக்கு உண்டாக இடமில்லை. காரணம் மாப்பிள்ளை வீட்டார் சொத்துக்காரர்கள் என்பதுதான்.

பாக்கி விஷயங்களெல்லாம் பேசி முடிந்தது. முகூர்த்தம் வைக்க வேண்டியதுதான் பாக்கி.

அன்று சபேசய்யருடன் வெகு நாழிகை கல்யாண விஷயமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் தியாகராஜய்யர் தம் வீட்டுக்குப் புறப்பட்டார். அவர் வாசற்படியண்டை வந்ததுதான் தாமதம். அப்படியே மின்சாரத்தால் தாக்குண்ட மாதிரி திகைத்து நின்றுவிட்டார். அதற்குக் காரணம் அப்படியொன்றும் பிரமாதமான விஷயமல்ல. அச்சமயம் சபேசய்யர் வீட்டுக்குள் நுழைந்த மனிதரை அவருக்குத் தெரிந்திருந்ததுதான் காரணம்.

வெகு நேரம் தியாகராஜய்யர் அப்படி பிரமித்து நின்றுவிடவில்லை. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவர்போல் தியாகராஜய்யர் தம் வீட்டை நோக்கி நடந்தார். ஆனால் அவர் முகம் பேயடித்த மாதிரி விகாரமாக மாறியிருந்தது.

சபேசய்யர் வீட்டில் கல்யாண விஷயங்களெல்லாம் பேசிக்கொண்டிருந்தனர். கோமதிக்கு அவன் விவாகப் பேச்சை ஆரம்பித்ததிலிருந்து இராப் பகலாக ஒரே கல்யாணக் கனவுதான். அதுவும் அன்றைக்கு அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. இரவு ஒரு மணியிருக்கும். கூடத்துப் பக்கம் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பல சாவிகள் கல கல வென்று குலுங்கும் சத்தமும் பெட்டியைத் திறக்க முயலும் சத்தமும் தெளிவாய்க் கேட்டன.

கோமதியின் மார்பு 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. பயம் பேச முடியாமல் தொண்டையை அடைத்தது. ஆனால் அவள் அப்படியே வாய் அடைத்துப் போய் இருந்துவிடவில்லை. சமாளித்துக் கொண்டு "திருடன்! திருடன்!" என்று பலமாகக் கூக்குரலிட்டு விட்டாள். உடனே சபேசய்யர் விழித்துக் கொண்டு விட்டார். தடியும் கையுமாகத் திருடனை எதிர்க்கத் தயாரானார். வேலைக்காரர்களெல்லாம் கூடத்துப் பக்கத்து அறையை ஆயுத பாணிகளாக வளைத்துக் கொண்டனர்.

டார்ச் லைட் போடப்பட்டது. பளிச் சென்று கூடத்திலிருந்த இருள் மறைந்தது. விளக்கு வெளிச்சத்தில் திருடன் கையிலிருந்த வைர நகைகள் பளீர் என்று பிரகாசித்

தனை. திருடனைப் பார்த்த சபேசய்யர் முகத்தில் ஈயாடவில்லை. பாதி ராத்திரியில் ஈ பறக்காது என்ற காரணத்தால் அல்ல; அந்தத் திருடன் சம்பந்தி தியாகராஜய்யரா யிருந்ததுதான் சபேசய்யரின் திகைப்புக்குக் காரணம்.

இதற்குள் வேலைக்காரர்கள் தடியும் கையுமாகச் சம்பந்திப் பிராமணரை உதைத்துக் கொண்டனர். உடனே தியாகராஜய்யர் எல்லோரையும் கையமர்த்தி "சபேசய்யர்வாள்! என்னை மன்னித்து விடுங்கள்! நான் நகைகளைத் திருடுவதற்காக வரவில்லை. வேறொரு காரியமாக வந்தேன்" என்று கூறிச் சற்றுப் பேச்சை நிறுத்தினார். எல்லோருடைய முகத்திலும் ஆச்சரியக் குறி தோன்றியது. சபேசய்யருக்குப் பேச நா எழவில்லை.

மீண்டும் தியாகராஜய்யர் ஆரம்பித்தார்:—"நேற்று இரவு உங்களிடம் நான் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போனேனல்லவா? வாசற்படிக்கு நான் போனதும் இரத்தினச் செட்டியார் உள்ளே நுழைந்தார். அவர் ரங்கூன் வைர வியாபாரம் செய்பவரல்லவா? ஆகையால் அவர் உங்கள் வீட்டுக்கு வைர வியாபார விஷயமாகத்தான் வந்திருக்கிறார் என்று நினைத்துவிட்டேன். என் மனம் ரொம்ப சங்கடப்பட்டு விட்டது. முக்கியமாக உங்கள் பெண்ணின் வைர நகைகளை முன்விட்டே என் சம்சாரம் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாள். நான் நினைத்தபடி போலி வைர நகைகளாயிருந்துவிட்டால், அவ்வளவுதான்! வந்துவிட்டது அனர்த்தம்! என் மனைவியிடம் நான் தப்ப முடியாது. இதைப் பற்றி உங்களிடம் நேரில் பேச எனக்குத் தைரியம் வரவில்லை. நானே உளவறிய நினைத்து நேற்று இரவு ஒன்பது மணிக்கே சாமான் அறையில் வந்து ஒளிந்துகொண்டுவிட்டேன். அசல் வைர நகைகள்தான். சந்தேகமில்லை!" என்று ஆவேசம் வந்தவர்போல் கத்தினார்.

"இதனால் கல்யாணம் சந்தேகத்தில் இல்லையே? எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாமல்லவா?" என்று கேட்டார் சபேசய்யர்.

"இவ்வமயார்ச் செய்யலாம்! பேஷாய்ச் செய்யலாம்! சந்தேகமில்லை!" என்றார் தியாகராஜய்யர்.



பரத்பூர் திவான் ராஜமந்திரப்பிரவீண ஸ்ரீ ஏ. வி. ராமநாதன் அவர்கள் குமாரி சௌபாக்யவதி சாந்தா பி. ஏ.-க்கும், டெல்லி உதவி பர்சேஸ் ஆபீஸர் ஸ்ரீ என். ஜி. ராமச்சந்திரன் பி. ஏ. அவர்களுக்கும், சென்ற ஏப்ரல் மாதம் 18-ம் தேதியன்று பங்களூரில் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.

ஒரு நாள் ஓய்வு

சாலி

ஆபீஸில் வேலை செய்து செய்து அலுத்துப் போனதால் ஓய்வு எடுத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு நாள் லீவு வாங்கிக் கொண்டேன். வழக்கமாகக் கிடைக்கும் ஞாயிற்றுக்கிழமை முதலிய லீவு நாட்களில் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா என்று கேட்கலாம்! வழக்கமான லீவு நாட்களில்தான் வீட்டு வேலைகளைக் கவனிக்க முடிகிறது என்பதை உத்தியோகத்திலிருக்கும் எந்த கிரகஸ்தனுக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ரேஷன் கார்டுகளைப் புதுப்பிக்க, நண்பர்களைப் பார்த்து விட்டு வர, வண்ணான் வீட்டைத் தேடிப் பிடிக்க, காய்கறிகள் வாங்க, இத்தியாதி காரியங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளைத்தான் நம்பிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எனவே, 'நிஜமாகவே' ஓய்வெடுத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு நாள் லீவு வாங்கிக் கொண்டேன்.

[ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக ஆபீஸ் போகிற ஆசாமிகளும் உண்டு! இந்த இட நெருக்கடி காலத்தில் கூட்டுக் குடித்தனத் தொல்லைகளும் குழந்தை குட்டிகளின் இம்சையுமின்றி எப்பொழுது ஆபீஸுக்குப் போய் நிம்மதியாய்ப் 'பங்கா' காற்று வாங்கி விட்டு வரலாம் என்று எண்ணுகிற உத்தியோகஸ்தர்களும் இருக்கின்றனர்.

நேரம் கழித்து ஆபீஸுக்கு வந்த குமாஸ்தாவைப் பார்த்து ஆபீஸ் மானேஜர், "ஓய்! என் ஆபீஸுக்கு வர இத்தனை நேரம்?" என்று கேட்டார்.

குமாஸ்தா, "வீட்டில் தூங்கிவிட்டேன். அதனால் நேரமாகி விட்டது" என்று பதிலளித்தார்.

மானேஜர் அதற்கு, "அடடா! நீர் வீட்டில் வேறு தூங்குகிறீரா?" என்று கேட்டாராம். இது நிற்க.]

முதல் நாள் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரும்போதே மறு நாள் பூராவும் ஒரு வேலையும் செய்யக் கூடாது, புஸ்தகத்தைக்கூடக் கையால் தொடக் கூடாது, ஈஸிசேரில் சாய்ந்தபடியே சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டே பொழுதைக் கழித்துவிட வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டேன். காலையில் வழக்கத்திற்கு விரோதமாக ஒரு மணி நேரம் கழித்தே படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டேன்.

இவ்விதம் மறு நாள் கிடைக்கப் போகும் ஓய்வின் சுகத்தை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டே வீடு சென்றதும் மனைவி என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினாள்.

அதில் மறு நாள் காலையில் பம்பாயிலுள்ள என் மைத்துனர் சென்னைக்கு வருவதாக எழுதியிருந்தது. காலையில் என்றால் பம்பாய் மெயில் ஏழரை மணிக்கோ என்னவோ வருகிறது. ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போய் அவரை அழைத்து வரவேண்டும். இல்லாவிட்டால் அவராக மாம்பலத்திலுள்ள என் வீட்டைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து சேருவதென்பது முடியாத காரியம். ஏனெனில் எனக்கே ஒவ்வொரு சமயம் என் வீட்டுக்கு வழி தெரியாமல் போய்விடுகிறது. அத்துடன் நான் என் வீட்டுக்கு வருகிறேன் என்று அடம் பிடிப்பவர்களுக்கு வழி சொல்லிக் கொடுப்பது வழக்கம். என்ன தான் தெளிவாகச் சொன்னாலும் யாரும் அலையாமல் சுலபமாக என் வீட்டுக்கு வந்துவிட முடியாது. ஆகையால் என் மைத்துனரை அலைய விட எனக்கு மனமில்லை. ஸென்ட்ரலுக்கே போய்க் காத்திருந்து அழைத்து வந்துவிட விரும்பினேன். ஆனால் இப்படி ஓய்வெடுத்துக் கொண்டு காலையில் ஒரு மணி நேரம் அதிகமாய்த் தூங்கவேண்டும் என்று நினைக்கும் போதுதானா இந்த மைத்துனர் வரவேண்டும்? ஹூம்; என்ன செய்வது? போய் வந்து விட்டால் அப்புறம் ஒரு வேலையும் கிடையாதல்லவா என்று பொழுது விடிவதற்குள் எழுந்திருந்து ஸென்ட்ரலுக்கு ஓடினேன்.

மைத்துனர் என் வீட்டைத் தேடி அலையப் போகிறாரே என்று நான் ஸென்ட்ரலுக்கு ஓடிவந்ததுதான் மிச்சம். அதற்குப் பதிலாக மைத்துனர் என்னையே அலைய விட்டு விட்டார். அன்று அவர் வருவதாக எழுதியிருந்தபடி வரவில்லை.


ஒருவேளை பிளாட்பாரம் தப்பி வேறு பிளாட்பாரத்துக்கு வந்து விட்டோமோ என்று நினைத்து, தெரிந்தவர்களை விசாரித்தேன். சரியான பிளாட்பாரத்தில்தான் இருந்தேன் என்று தெரிந்தது.

பம்பாய் மெயில் என்று ரயிலிலும் எழுதியிருந்தது. ஆனால் மைத்துனரைத்தான் காணவில்லை. மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினேன். இதற்குள் மணி ஒன்பதரை ஆகிவிட்டது. வீட்டுக்குள் நுழைந்ததும் என் மனைவி கொதிக்கும் எண்ணெயைக் காலில் கொட்டிக்கொண்டு குதித்துக் கொண்டிருந்தாள். என்னவென்று விசாரித்ததில் பம்பாயிலிருந்து வரும் தன் அண்ணா எண்ணெய் தேய்த்துக் கொள்ளட்டும் என்பதற்காக எண்ணெய் காய்ச்சிக் கொண்டிருந்தாளாம். அது தவறிக் காலில் கொட்டி விட்டதாம். நன்றாய் வேண்டும் இவளுக்கு என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். பின் என்ன! அண்ணாவே வீட்டுக்கு வந்து சேரவில்லை. அதற்குள் எண்ணெய் ஸ்நானத்துக்குத் தயார் செய்து வைத்து விட்டாள்!

அப்புறம் அண்ணா வரவில்லை என்ற சுபசெய்தியை அவளுக்குத் தெரிவித்தேன். காலில் எண்ணெய் கொட்டி விட்டதென்று படுத்து விட்டாள்.

"அட கஷ்டமே! நீ இப்படிப் படுத்து விட்டாயே? யார் சமைப்பது?" என்று கேட்டேன்.

"ஏன்? இன்றைக்குத் தங்களுக்கு ஓய்வு நாள்தானே? ஒரு குழம்புஞ் சாதம் சமைத்து நீங்களும் சாப்பிட்டு விட்டு எனக்கும் போடுங்களேன்" என்றாள். என்ன செய்வது? கையிலிருந்த அரைப் புட்டி 'ரேஷன்' மண்ணெண்ணெயைக் கொட்டி விறகைப் பற்ற வைத்துப் புகை மண்டலத்திடையே இரண்டு ஆழாக்கு அரிசியைக் கொதிக்க வைப்பதற்குள் மணி ஒன்றாகிவிட்டது. பின்னர் மிளகு ரஸம் வைத்து நானும் சாப்பிட்டு அவளுக்கும் போட்டேன். இதற்குள் 'சங்கன்' (என் வீட்டு வேலைக்காரனல்ல. நான் வளர்க்கும் அருமை நாயின் நாமதேயம்!) சமையல் கட்டுக்குள் சொட்டச் சொட்ட வந்து நின்றான்.



"அடேய், மாரிமுத்து! மாமி யார் இன்றைக்கு ஊரிலிருந்து வருகிறார்கள். ரயிலுக்கு வண்டியைக் கொண்டுபோய் அவர்களை அழைத்துக்கொண்டு வா. இந்தா. இரண்டணா!"

"அவங்க வராவிட்டால் என்னுங்க செய்கிறது?"

"வந்து என்னிடம் எட்டணாவாக வாங்கிக்கொண்டு போ!"

உடம்பு பூராவும் சாக்கடை ஜலத்தால் நனைந்திருந்தது. "அட சனியனே! இது என்ன வேஷம்? எங்கே போய் இந்த வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்தாய்?" என்று கேட்டேன். பதில் சொல்லத் தெரியாததாலோ என்னவோ தன் குட்டை வாலை ஆட்டிக் கொண்டே என் மேல் உராய ஆரம்பித்தது. "தூ, தூ, தூ!" "சீசீ, போ போ போ!" என்று விரட்டினேன். சமையல் கட்டு பூராவும் சாக்கடை ஜலத்தைத் தெளித்துக் கொண்டே கிணற்றடியில் போய் நின்றது. வாழை மரத்தின் அடியில் தேங்கியிருந்த ஜலத்தில் ஜில்லென்று வெய்யிலுக்காகப் படுத்துக் கொண்டிருந்ததென்று அதன் காலடிச் சுவடுகளிலிருந்து தெரிந்து கொண்டேன். "இன்றைக்கு ஓய்வு நாள் தானே? அதைக் கொஞ்சம் தேய்த்துக் குளிப்பாட்டுங்களேன்" என்றாள் என் மனைவி. பிறகு அதைச் சோப்புப் போட்டுத் தேய்த்துக் குளிப்பாட்டுவதற்குள் மணி மூன்று அடித்தது. இதற்குள் என் மனைவியின் கால் கொப்புளித்துப் போய் விட்டது. அவள் காலுக்குப் பச்சிலை மருந்து ஒன்றை அம்மியில் வைத்து அரைத்துப் போட்டேன். மணி நாலு. பிறகு இரண்டாம் வேளை காப்பி தயார் செய்தேன். மணி ஐந்து. இதற்குள் இராத்திரி சமையல் செய்ய நேரமாகி விட்டதால் மறுபடியும் சமையலுக்கு ஆயத்தமானேன். விறகை எடுக்கப் போனால் விறகைக் காணோம். உருட்டுக் கட்டைகள்தான் இருந்தன. "இன்றைக்கு ஓய்வு நாள் தானே, கொஞ்சம் அந்த உருட்டுக் கட்டைகளை உடைத்து விடுங்களேன்" என்றாள் என் மனைவி படுத்துக்கொண்டே. அதை எடுத்து வந்து தோட்டத்தில் போட்டுக் கொண்டு உடைத்து விறகாக்குவதற்குள் இருட்டி விட்டது. இராச் சமையலாகிச் சாப்பிடுவதற்குள் சரியாக மணி ஒன்பது அடித்து விட்டது. இப்படியாக அன்று ஆபீஸிலிருந்து நான் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போக, எதிர்பாராத காரியங்களெல்லாம் வந்து சேர்ந்தன. இதை நினைக்கும் போது.... மேலே நான் எழுதியது தவறு. வாஸ்தவமாகவே அன்று ஓய்வு இலம்தான் காலில் எண்ணெயைக் கொட்டிக் கொண்டு படுத்த படியே என்னை வேலை ஏவிக் கொண்டிருந்த என் மனைவிக்கு அன்று ஓய்வு நாள்தான்!



குழந்தை காரணமில்லாமல் அழும்பொழுது

அவனுக்கு அதிக உணவினாலோ அல்லது ஜீரணக் கோளாறினாலோ வயிற்றில் ஏற்பட்டிருக்கும் சங்கடத்தைத் தெரிவிக்கிறான். அவனுக்கு வயிறு ஒப்புசம் அல்லது வலியிலிருந்து சாந்தமேற்படுவதற்கும் அவஸ்தை ஜாஸ்தியாகாமல் தடுப்பதற்கும் ஐ. டி. எல். கிரைப் சிரப் தேவையாய் இருக்கிறது. அது ஒருவிதமான கெடுதலும் செய்யாது. நீங்கள் பத்திரமாய்

அவனுக்கு கிரைப் சிரப் கொடுங்கள்

I·T·L·

இது ஒரு மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

GM-E. 2. T. M.

பாலுவிற்கும் அவன் மாமாவிற்கும் எதிலும் அபிப்பிராய பேதந்தான். அற்ப விஷயங்களில்கூட ஒருவர்க்கொருவர் கைகலக்கத் தயாராகி விடுவார்கள்.

பாலுவின் கல்யாணத்தின் போது தனது சகோதரிகளுக்கு என்ன பரிசளிப்பது என்ற யோசனை வந்தது. இவ்விஷயத்தில் மௌனம் சாதித்தார் மாமா. தங்களுக்கு எங்கே பரிசு கிடைக்காமல் போய்விடுமோ என்று அஞ்சிய சகோதரிகள் இதைப் பற்றி மெதுவாகப் பேச்சு வாக்கில் பாலுவிடம் கேட்டு வைத்தனர்.

"ஆளுக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுத்தால் ஆச்சு" என்றார் மாமா. "நான் சொல்லும் கடையில்தான் புடவையை வாங்கியாக வேண்டும்" என்று தர்க்கம் செய்தான் பாலு. "முடியாது" என்றார் மாமா. தர்க்கம் பலமாயிற்று. இதற்கு பாலுவின் தாயார் மத்தியஸ்தம். சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்ப்பது என்று முடிவாயிற்று. அதை ஏக மனதாக ஒப்புக் கொண்டு இருவரும் சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள்.

என்ன ஆச்சரியம்! நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்ற மயிலை கபாலீஸ்வரர் சன்னதியிலுள்ள "ஆரணி ஸில்க் ஹவுஸ்" என்ற பெயரைத்தான் இருவரும் தங்கள் சீட்டில் எழுதியிருந்தனர். கேட்பானேன் சந்தோஷத்திற்கு!

நீங்களும் இன்றே ஒருமுறை விஜயம் செய்து உங்களுக்கு வேண்டியதைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள். ஏராளமான ஸ்டாக்குகள் நவீன மோஸ்தரில் வந்து குவிக்துள்ளன.

●

ஆரணி ஸில்க் ஹவுஸ்

சன்னதித் தெரு, மயிலாப்பூர், மதராஸ்.



பிரிஸ்கோ வைபோகம்!

[நமது விசேஷ நிருபரின் விசேஷ வி. குண்டுகள்]

பூகோளப் படத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அப்படி எடுத்து வைத்துக் கொண்டால் பூமி உருண்டையாக இருப்பது உங்கள் கண்களுக்குப் புலப்படும்; இன்னும் விசேஷமாக உற்றுக் கவனித்தால், இரண்டு உருண்டைகள் கூட உங்கள் கண்முன் வந்து நிற்கும். வலது கண்ணை இடது கையால் மூடிக்கொண்டு, இடது கண்ணால் வலது கோளத்தைக் கவனியுங்கள்; அதுபோலவே, இடது கண்ணை வலது கையால் மூடிக்கொண்டு இடது கோளத்தை நோக்குங்கள். பிறகு இடது கையால் இடது கண்ணையும், வலது கையால் வலது கண்ணையும் துடைத்துக்கொண்டு (—ஏனென்றால் இதுவரை நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்தில் கண்ணில் தண்ணீர் ததும்பியிருக்கும்—) பிறகு இரு கரதலங்களாலும் இரு கண் கமலங்களையும் இறுக மூடிக்கொண்டு சற்று ஸான்பிரான்ஸிஸ்கோ நகரம் இருக்கும் திக்கு நோக்கி உங்கள் மனதைச் செலுத்துங்கள்.

பார்த்தீர்களா! இது தான் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரம்.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் முன்னே ஒரு பூகம்பம் வந்ததே ஞாபகமிருக்கிறதா? இல்லாவிட்டால் பரவாயில்லை.

அந்த பூகம்பத்துக்குப் பிறகு, இப்போது ஒரு விசேஷம் அங்கே நடக்கிறது. பூகம்பம், நிகம்பம் எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும் அத்தகைய மகாமகா அதிசயம்! (காகிதக் கட்டுப்பாட்டு விதிகளால், இட நெருக்கடியை உத்தேசித்து இந்த மாதிரி அதியாச்சரியமான விஷயங்களுக்குக்கூட ஒரே ஒரு ஆச்சரியக் குறிதான் போடுகிறோம்; அதனால் அதன் விசேஷம் இம்மியளவும் குறைவுபடவில்லை என்பதை இங்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்!)

இதுவரை, கண்ணுக்கும் அறிவுக்கும் எட்டாமல், அரசியல் ஞானிகளுக்கும், ராஜீய நிபுணர்களுக்கும், மன்னர் பிரான்களுக்கும், அவர்கள் மதி மந்திரிகளுக்கும் டிமிக்கி கொடுத்து விட்டு ஓடி ஒளிந்து கொண்டிருந்த சமாதான தேவதை இந்த பிரிஸ்கோ க்ஷேத்திரத்தில்தான் பிரதிஷ்டையாகி, பிரத்யக்ஷமாகி, வரம் அருளப் போகிறார்! இதே க்ஷேத்திரத்தில் மற்றொரு அரும்பெரும் அதிசயமும் நடக்கப் போகிறது. நீசர்களிடத்திலிருந்தும், அரக்கர்களிடமிருந்தும், அநீதி, அக்கிரமம், கொடுமை, வறுமை, பசி, பிணி இவற்றிலிருந்தும் உலகைப் பாதுகாத்து, தர்மத்தை ஸ்தாபித்து,

அமைதியை நிலைநாட்டி, சுபிட்சத்தை நிலைச் செய்ய ஒரு திவ்ய குமாரன் அங்கே சம்பவிக்கப் போகிறான். பிறக்கும் போதே தோழர் ஸ்டாலினுடைய மீசையுடையவனாகவும், பிரதம மந்திரி சர்ச்சிலுடைய சுருட்டை ஆயுதமாகக் கையில் ஏந்தியவனாகவும், தலைவர் ரூஸ்வெல்ட்டின் ஆவியைக் கொண்டவனாகவும், இந்தத் தேஜோமயமான குழந்தை உதிக்கப் போகிறான் என்று அரசியல் ஞானிகள் வர்ணிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு திவ்ய சம்பவத்தை முன்னிட்டு ஆகாய மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும், அரசியல் டாக்டர்கள் என்ன, ராஜீய மருத்துவர்கள் என்ன, ராஜதந்திர நிபுணர்கள் என்ன, பத்திரிகை நிருபர்கள் என்ன, புகைப்பட வல்லவர்கள் என்ன, திரைப்பட வில்லவர்கள் என்ன, அசரீரி வசனிகள் (ரேடியோ விமர்சகர்கள் என்றும் சொல்லலாம்) என்ன — இப்படியாக நாலா பக்கங்களிலிருந்தும், உலகமே பிரிஸ்கோவில் குழுமி நிற்கிறது.

நாமும் மனோப்ளேன் மூலம் இதோ ஸான் பிரான்ஸிஸ்கோவை அடைந்து விட்டோம். முதல் முதலில் ஸான்பிரான்ஸிஸ்கோவைப் பார்த்தவுடன், சமாதான தேவதைக்குக் கோயில் எழுப்பப்போகும் மேதாவிகள், பிரிஸ்கோவைத் தேர்ந்தெடுத்ததின் தூரதிருஷ்டியையும் திரிகால ஞானத்தையும் நினைந்து நாம் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நிற்கவேண்டி வருகிறது. மோட்டார் ஹார்ன் கேட்டதும்தான் நமக்குச் சுய நினைவு வருகிறது. காரைவிட்டுக் கீழே இறங்கியதும், தோரணங்களாலும் சிவப்புக் கொடிகளாலும் நக்ஷத்திரக் கொடிகளாலும் யூனியன் ஜாக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட கொலு மண்டபம் நம்முன் வந்து நிற்கிறது. ஆகா! அந்த மண்டபத்தின் தோற்றத்தை என்னென்று சொல்வது! சொல்வதற்குக் கூட நா எழவில்லை; வார்த்தைகள் கிடைக்கவில்லை. அதனால் சொல்லாமலே விட்டு விடுவோம்!

• • •

ஏப்ரல் 25-ந் தேதி சுபயோக சுப நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டபடியே, பிரிஸ்கோ நாடகத்தின் முதற் காட்சி ஆரம்பமாயிற்று. காலஞ்சென்ற தலைவர் ரூஸ்வெல்ட், உயிருடன் இருக்கும் பிரதம மந்திரி சர்ச்சில், மார்ஷல் ஸ்டாலின், இவர்களுடைய உருவப் படங்களை ஊர்வலமாகத் தூக்கிக்கொண்டு ஸ்டெட்டினியஸ், மாலடாவ், ஈடன் முதலிய பிரமுகர்கள் நாடகக் கொட்டகையில் நுழைந்து மேடைமேல் ஏறிக் காட்சி யளித்தார்கள். நுழையும்போது பாண்டு முதலிய வாத்தியங்கள் முழங்கின. பற்பல நாடுகளிலிருந்தும் வந்திருந்தவர்கள் அந்தந்த நாட்டின் வாத்திய கோஷத்துடன் நுழைந்தனர். இந்தியாவும் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றிருப்பதை உலகம் மறக்கா வண்ணம், நமது பிரதிநிதிகள் அங்கே காட்சி யளித்தனர். ஸர் பி.கா.நூ. ஷெனாய் வாத்தியம் ஊத, ஸர் ரா.மு. தவில் வாசிக்க, ஸர் வி.டி.கி. வேதபாராயணம் செய்ய, அந்த பிரிஸ்கோ மகாநாட்டில் நமது இந்திய நாட்டின் அந்தஸ்து டொமினியனுக்குமேல் ஒரு ஜாண் மட்டுமில்லை, ஒரு முழம் கூட உயர்ந்து விட்டதென்றே சொல்லலாம். மேற்படி நாடகத்தின் முதல் அங்கத்தில் கண்ணைக் கவர்ந்த காட்சிகளை என்னால் இயன்ற மட்டும் இனி வர்ணிக்கத் தொடங்குகிறேன் :—

1. தலைப்பாகைகள்

இதைப்பற்றி பிரிஸ்கோவில் மட்டுமல்ல, அமெரிக்கா முழுவதிலுமே ஒரே பேச்சாக இருக்கிறது. முதல் நாளே இந்தத் தலைப்பாகைகள் தெரிந்ததும், அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களின் சுறுசுறுப்பால் பஸிபிக் கரையிலிருந்து அட்லாண்டிக் கரை வரையில் தந்திகள் பறந்தன; நியூயார்க்கிலிருந்தும் வாஷிங்டனிலிருந்தும் ஹாலிவுட்டிலிருந்தும், விமானங்கள் பிரிஸ்கோவை நோக்கிப் பறந்தன; மானிட சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களும், அழகு சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களும், காமிராக்காரர்களும், பிலிம் கம்பெனி முதலாளிகளும் வந்து குதித்தனர்; சில ஸினிமா டைரக்டர்கள் நமது பிரதிநிதிகளை உடனே ஹாலிவுட்டுக்கு அழைத்துப் போய்விடுவதாக முன் வந்தார்கள். அவர்களைத் தடுப்பது பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. கடைசியில் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று!

2. விளிம்பில்லாக் கண்ணாடி

இது ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. ஸர் பி.கா.நூனைப் பார்த்து விட்டு பிரிஸ்கோக்காரர்கள் தங்கள் மூக்குக் கண்ணாடிகளிலிருந்து விளிம்பைப் பிய்த்து எறிந்து விட்டார்கள். (சிலர் மூக்கைக்கூடப் பிய்த்துக் கொள்ள யத்தனித்ததாகவும் கேள்வி.) அமெரிக்கத் தலைவர் ட்ரூமன்கூட

விளிம்பில்லாக் கண்ணாடி போட்டுக் கொண்டிருப்பது, அமெரிக்காவுக்கு இந்தியாவிடத்தில் உள்ள அந்தரங்க விசுவாசத்தைக் காட்டுகிறது என்று விஷய மறிந்த வட்டாரங்களில் சொல்லிக் கொள்கிறார்கள்.

3. நாமம் ஸ்ரீசூர்ணம்

அமெரிக்காவுக்கு முதல் முதல் நாமம் குழைத்துப் போடக் கற்றுக் கொடுத்த பெருமை நமது இந்தியப் பிரதிநிதிகளில் இருவருக்கே உரியது என்று சொல்லலாம். அகத்தினழகு முகத்தில் என்பதைப் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுவது நாமம் தான் என்கிறார் ஸர்* விடிகி. ஜெர்மனியில் ஹிட்லர் தோன்றிய பிறகு, இந்தியாவில் ஸ்ரீ சூர்ணத்திற்கு கிராக்கி வந்து, அது எப்படி இந்தியப் பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும் கிருகசாரத்தையும் பாதித்தது என்று பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி யளிக்கையில் ஸர் ஏ.ஆர்.மு விளக்கிக்காட்டினார். ஹாலிவுட்டில் இனிமேல் முகத்தை அழகு படுத்தும் வித்தையில் நாமத்தையும், ஸ்ரீசூர்ணத்தையும் உபயோகிப்பதைப் பற்றி மாக்ஸ் பாக்டர் என்ற முகச்சாய நிபுணர் தீவிரமாக ஆலோசித்துவருகிறார். அமெரிக்காவில் இந்த அத்தியாவசியமான சரக்குகளைப் பெருவாரியாகத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நமது பிரதிநிதிகள் தாய் நாடு திரும்புமுன், இந்தியாவில் உள்ள நாற்பது கோடி மக்களில் ஒவ்வொருவருக்கும் பட்டை நாமம் போடும் அளவுக்கு அமெரிக்கா உதவி செய்யும் என்பதில் ஐயமில்லை. அப்படி நாமம் போடத் தேவையான சரக்குத் தடையின்றி சப்ளை ஆவதற்கு நமது பிரதிநிதிகளில் ஒருவராகிய சப்ளை மெம்பர் தகுந்த ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகவும் வதந்தி. ஆனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவுகளைப் பாதிக்காமல் இருக்கும் பொருட்டு, போடுவது அமெரிக்க நாமமா யிருந்தாலும், அதற்கு லண்டனில் சேர்ந்திருக்கும் ஸ்டர்லிங் பாக்கிகளைக் கரைத்துக் கொள்ள வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள்.

* * *

இனி நமது காதைக் கவர்ந்த "கேள்வி"களுக்குத் திரும்புவோம்: பிரிஸ்கோ வைபவக் காட்சியின் ஆரம்பத்தில் விருந்தாளிகளுக்குச் செவி விருந்தளிக்கப்பட்டது. அதிலும் நமது இந்தியப் பிரதிநிதிகள் பின் வாங்காமல் முன்னேறிப் பங்கெடுத்துக் கொண்டனர்.

பிரிஸ்கோ வைபவத்தை முதலில் சாஸ்திரோக்தமாக, ஸர் விடிகே ஒரு சுலோகத்துடன் ஆரம்பித்தார்:—

யதாராஜா ததாப்பிரஜா:
யத்ர யத்ர போஜனோ பவதி
தத்ர தத்ர பிராம்மணோ பவதி!

இத்யாதி சுலோகங்களை அர்த்த புஷ்டியுடன் ஸ்பஷ்டமாகச் சமர்ப்பித்தார். பிறகு ஸர் பீகாநா ஒரு கஜல் பாடினார்:

டொமினியன் ஸ்தான் ஹமாரா
கூப் டொமினியன் ஸ்தான்...

ஹம் போன்தே ஹை ஜனா
கென்போல் தே நஹீ, ஹைஜை

டொமினியன் ஸ்தான் ஹமாரா
பாபர் டொமினியன் ஸ்தான்
ஹமாரா!...

இதைக் கேட்டு, "வாஹ் வாஹ்" "அச்சா பஹுத் அச்சா" என்ற சப்தங்கள் நாடகக் கொட்டகையின் கூரையைப் பிய்த்துக் கொண்டு கிளப்பின. (இந்தச் சப்தங்களைக் கிளப்பியவர் லேடி பீகாநா.)

கடைசியாக ஸர் ஏ.ஆர்.மு ஒரு தமிழ்ப் பதத்தைத் தெலுங்கில் பாடி அபிநயம் பிடித்து முடித்தார்:—

எந்தனை சொன்னாலும்
என்னை மதியாதவனாக
ஏமிசேஜனிதி லக்ஷ்மணா!

இத்தனை தூரம் வந்தும்
எந்தன் துயர் தீருமோ
ஏமிமாயமோ ஜெனிபோதினி
ராமையா ராமா!

சின்னநாடானாலும் என்ன
பெத்தநாடன்டே ஏமி
அந்துக்கு ஒகரே

சின்னமனிதனானாலும் என்ன
பெத்தவாண்ணு அண்டே ஏமி
தானிக்கிதினி லைசேபோயிந்தி
ஓ! தேவுடா!
ஓ ஜான்புல் தேவுடா!

மேற்படி பதத்துக்கு அவர் பிடித்த அடவுகளும், பின்னர் ஜோஹானாகும் தில்லானாவில் அவருடைய நிர்மாணங்களும் தகிடு தத்தங்களும், அப்படியே சபையோரைத் தட்டி எழுப்பி, தாளம் போடச் சொல்லி, ஹா ஹா காரங்களையும், ஹீ ஹீ காரங்களையும் தங்களை யறியாமல் அவர்கள் வாயிலிருந்து புறப்பட வைத்துக் கடைசியில் ஒரே வழியாகச் சபையினர் அனைவரையும் பசிபிக் மகா சமுத்திரத்தில் தூக்கிப் 'போட்டு விட்டது. (அவர்கள் எப்படியோ நீந்தியடித்துக் கரை யேறி விட்டார்கள், போங்கள்!)

---

* ஸான் பிரான்ஸிஸ்கோவை பிரிஸ்கோ என்று சுருக்கியிருக்கும் சம்பிரதாயத்தை அனுசரித்து நாமும் நமது பிரதிநிதிகளின் பெயரை இவ்விதம் சுருக்கியிருக்கிறோம்.

T.K.S. சகோதரர்களின்
நாடகம்.

★

திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்

19-5-45 சனிக்கிழமை முதல்

பிரதி தினமும் நடைபெறும்

ஔவையார்

19-5-45 நாடகம் எட்டயபுரம் பாரதி மன்றத்தின் உதவிக்காக
ஆசிரியர் 'கல்கி' தலைமையில்
நடைபெறுகிறது

★

நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.........

...மன்னவர் செல்வமும் மதியாளாகி
ஏழை எளியவர் உறவே இன்பமாய்
குடிசையில் வசித்துக் கூழையே ருசித்து
பண்டிதர் வியந்து பணிந்திடும் படித்தாய்
பாமர மக்கள் பயன்பெறவென்றே
எவர்க்கும் புரிவதாம் எளிய நடையில்
நீதிகள் பாடிய நிகரிலாச் சிறப்புள
தீர்க்கமொழியின் திவ்விய சரிதையை
அழகிய சிற்சில கற்பனை அமைத்து
உருவிலாக் கதையை உருப்படியாக்கி
நூதன நாடக நூலாய்ச் செய்தது
தமிழன்னைக்கொரு தனித்திருப் பணியாம்...

ஞாயிறு, புதன் மாலை 7-மணிக்கும்
மற்ற நாட்கள் இரவு 10-30 மணிக்கும்

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

99. நடந்தனர் சீதையோடும்

தண்டகாரண்யத்து முனிவர்கள் தங்கள் பூர்வமான உயரிய நிலையை உணர்ந்திருந்தார்கள். அதோடு ஒழுக்கம் பண்பாடு எல்லாவற்றையுமிழந்த அப்போதைய நிலையையும் உணர்ந்தார்கள். ஏதோ இருளில் மூழ்கிக் கிடந்த மாதிரி எண்ணினார்கள். ராமன்தான் தங்களை மீண்டும் பழைய உயர் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் எண்ணினார்கள். ஆத்திரத்தோடு ராமனிடமும் அதைச் சொன்னார்கள். ராமன் ரிஷிகளிடம் மிக்க பரிதாபங் கொண்டான். அவர்களுக்கு விரோதிகளான அரக்கர்களை எண்ணிய மாத்திரத்தில் ஒரு கோபாவேசமே உண்டாகி விட்டது.

"அரக்கர்கள் வெகு சீக்கிரத்தில் என்னிடம் சரணாகதி அடையப் போகிறார்கள்; இல்லையானால் அவர்களுடைய கதி அதோகதிதான்!" என்று உறுதி கூறுகிறான்.

'புகல்புகுந்திலர் —
ரேல், புறத்(து) அண்டத்தின்
அகல்வரேனும்என்
அம்பொடும் வீழ்வரால்
தகவில் துன்பம்
தவிருதிர் நீர்' எனாப்
பகலவன் குல
மைந்தன் பணிக்கின்றான்.

[புகல் புகுந்திலரேல்: அரக்கர்கள் வந்து காலில் விழாமற் போனால்: புறத்து அண்டத்தின் அகல்வரேனும்: மேலே வெட்டவெளியாயுள்ள வானத்துக்கே போனாலும்: என் அம்பொடும் வீழ்வரால்: நான் எய்த அம்பு அவர்கள் மேனியில் தைத்து நிற்க அப்படியே இறந்து விழுவார்கள்: தகவில் துன்பம் தவிருதிர் நீர் எனா: உங்களுடைய லட்சியங்களுக்கு ஒவ்வாத துன்பத்தை ஒழியுங்கள் என்று: பகலவன் குலமைந்தன் பணிக்கின்றான்: சூரிய குலத்தவனான ராமன் அதிகாரத்தோடு சொல்லுகிறான்.]

ஏதோ கேடென்று முதலில் காணப்படுகிற காரியங்கள், கொஞ்சம் கூர்ந்து பார்த்தால், நன்மைக்கான காரியங்கள் என்றே சொல்லத் தோன்றும். ராமனுக்கு எப்படித் தோன்றுகிறது பாருங்கள்:

'வேந்தன் வீயவும்,
ஆய்வரம் ஏவவும்,
ஏந்தல் எம்பி
வருந்தவும், என்நகர்
மாந்தர் வன்துயர்
கூரவும், யான்வனம்
போந்த(து) — என்னுடைப்
புண்ணியத் தால்' என்றான்.

[வேந்தன் வீயவும்: தசரத சக்கரவர்த்தியாகிய தந்தை உயிர் துறக்கவும்: ஆய் வரம் ஏவவும்: அன்னை கைகேயி தந்தையிடம் வரம் பெற்று என்னைக் காட்டுக்கு அனுப்பவும்: ஏந்தல் எம்பி வருந்தவும்: அரசனாகிய என் தம்பி பரதன் பெருந்துயர் அடையவும்: யான் வனம் போந்தது: இவ்வளவும் நேரும்படியாக நான் வனவாசம் செய்ய வந்தது.]

முனிவர்களிடம் இதய பூர்வமாகப் பேசினான் ராமன். அதை உணர்ந்து கொண்டார்கள் முனிவர்கள். அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்வானேன்! பதினாலு வருஷங்களையும் தண்டகாரண்யத்திலேயே கழிக்க வேண்டுமென்று ராமனைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

'அன்ன தாதலின்,
ஏயின ஆண்டெலாம்
இன்னல் காத்திங்(கு)
இனிதுறை வாய்!' எனச்
சொன்ன மாதவர்
பாதம்தொ ழு(து), உயர்
மன்னர் மன்னவர்
மைந்தனும் வைகினன்.

[அன்னது ஆதலின்: உன் லட்சியம் இந்த விதமாக இருக்கிற காரணத்தால்: ஏயின

ஆண்டெலாம்: வனவாசத்துக்கு ஏற்பட்ட பதினாலு வருஷங்களும்; இன்னல் காத்து: எங்கள் துன்பங்களை யெல்லாம் நிவர்த்தி செய்து: இனிது உறைவாய்: எங்களோடு சந்தோஷமாக இருப்பாயாக; உயர் மன்னர் மன்னவன் மைந்தனும்: ராஜாதி ராஜனான சக்கரவர்த்தித் திருமகனும் இருந்தும் ராமன்: வைகினன்: அந்தக் காட்டில்தானே முனிவர்களோடு தங்கினான்.]

பத்து வருஷங்கள் அந்த தண்டகாரண்யத்திலேயே ராமன் சீதை லக்ஷ்மணர்களுடன் தங்கினான்; சௌகரியமாகவே வாழ்க்கை நடந்தது; பிறகு முனிவர்கள் யோசனை செய்து, “பத்து வருஷம் ஆகிவிட்டது; நம்முடைய காரியம் பூரணசித்தி பெற வேண்டுமானால் அகஸ்திய முனிவரை நீங்கள் காண வேண்டும்” என்று ராமனிடம் சொன்னார்கள்.

ஐந்தும் ஐந்தும்
அமைந்துள ஆண்(டு), அவண்
மைந்தர் நீடினர்
வைகினர்; மாதவர்
சிந்தை எண்ணி
அகத்தியற் சேர்கென,—
இந்து நல்நுதல்
தன்னொடும் ஏகினர்

[ஐந்தும் ஐந்தும் அமைந்துள ஆண்டு: பத்து வருஷங்கள்: அவண்: அந்த வனத்திலேயே; மைந்தர் நீடினர் வைகினர்: மைந்தர்களான ராமலக்ஷ்மணர்கள் அரக்கர்களால் ஏற்படும் தொந்தரவு யாதுமின்றித் தங்கினார்கள்; மாதவர் சிந்தை எண்ணி: முனிவர்கள் மிக்க ஆலோசனை செய்து: அகத்தியற் சேர்கென: அகத்தியரை அணுக வேண்டும் என்று சொல்ல; இந்து நல்நுதல் தன்னொடும்: பிறைச் சந்திரனையொத்த நெற்றியையுடைய சீதையோடும்; ஏகினர்: புறப்பட்டார்கள்.]

வீரர்கள் காட்டு வழியாகப் போகிறார்கள். ஆனால் வீரர் மாத்திரமா போகிறார்கள்? மெல்லியலாள் சீதையும் காட்டின் ஊடே நடந்து போகிறாள் என்பதை நமக்கு நினைவூட்ட வேண்டாமா? அதைத்தான்,

“இந்து நல்நுதல்
தன்னொடும் ஏகினர்.”

என்ற நாலாவது அடி நினைவூட்டுகிறது!

காலக்ஷேபம்

எதிர்பாராதது!

நீதிபதி:—நீர் இவரை நாற்காலியால் அடித்ததில், கால் ஒடிந்தது உண்மையா?

கைதி:—அது எதிர்பாராமல் நடந்து விட்டதுங்க!

நீதிபதி:—எது?

கைதி:—நாற்காலியின் கால் ஒடிந்தது தான்! —பின்னவாசல் கிட்டு.

★

முன் யோசனை

வந்தவர் (ஜவுளிக் கடைக்காரரிடம்):—ஸார்! எனக்கு இரண்டு புடவை கடனாகக் கொடுக்க முடியுமா?

கடைக்காரர்:—தங்களை எனக்கு முன் பின் தெரியாதே?

வந்தவர்:—அதனால்தான் இரண்டு புடவை கேட்கிறேன். ஒரு புடவையை நான் எடுத்துக் கொண்டு அதற்கு அடமானமாக இன்னொரு புடவையை வைத்து விட்டுப் போகிறேன். —என். நடேசன்.

★

ஏற வேண்டியதுதான்!

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் ஒருவர் ஏற முயன்றார். அப்பொழுது கண்டக்டர், "ஸார்! ஏறாதீர்கள்; விழுந்து விடுவீர்கள்" என்று எச்சரித்தான்.

பிரயாணி:—நான் ஆஸ்பத்திரிக்கு அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது ......

கண்டக்டர்:—அப்படியென்றால் பேஷாய் ஏறுங்கள்! —எம். எஸ். மணி.

★

அபிவிருத்தி

"நம்ம கிட்டு வகுப்பில் மிகவும் முன்னுக்கு வந்துவிட்டானே!"

"ஆமாம், இத்தனை நாள் கடைசி பெஞ்சியில் உட்கார்ந்திருந்தான். அவன் தூங்கினால் தெரியவில்லை என்று உபாத்தியாயர் இப்போது அவனை முன்வரிசையில் உட்கார்த்தி வைத்திருக்கிறார்." —எஸ். ஆர். மணி.

அவருக்குத் தேவை

பெரிய மனிதர்:—உம்மை என்னால் இப்பொழுது பார்க்க முடியாது; போய்வாரும்!

வந்தவர்:—அந்தக் கோளாறை நிவர்த்திக்கத்தான் வந்திருக்கிறேன்; நான் மூக்குக் கண்ணாடி வியாபாரி.

—பி. எஸ். சந்திரசேகரன்.

★

கவலை வேண்டாம்!

ராமு:—ஒரு விஷயத்தை உன்னால் ரகசியமாக வைத்துக்கொள்ள முடியுமா?

ராஜன்:—பேஷாக முடியும்.

ராமு:—எனக்கு ஐந்து ரூபாய் கடனாக வேண்டும்; நான் கடன் கேட்டது வெளியில் தெரியக் கூடாது.

ராஜன்:—கவலைப்பட வேண்டாம்; நீ கேட்டது என் காதில் படாததுபோலவே நடந்துகொள்கிறேன்! —எஸ். கோபாலன்.

★

டாக்டர் பீஸ்


முதல்வர்:—டாக்டர் வீட்டிற்குள் போகும் போது உமக்கு இடது விலாப் பக்கம் பருத்திருந்தது. இப்போது அது மறைந்து விட்டதே! அதற்குள் டாக்டர் சொஸ்தம் செய்து விட்டாரா?

மற்றவர்:—அதுவா! என் மணிபர்ஸ் அந்தப் பக்கத்துப் பையில் இருந்தது. அதில் இருந்ததை டாக்டர் எடுத்துக்கொண்டு விட்டார். —ஏ. எஸ். சீனிவாசன்.

★

ஞாபக முடிச்சு!

"என் மனைவி கடிதத்தை மறந்து போகாமல் தபாலில் சேர்க்கக் கைக் குட்டையில் முடிச்சுப் போட்டுத் தந்தாள்."



"கடிதத்தை மறந்து போகாமல் பெட்டியில் போட்டு விட்டீர்களல்லவா?"

"இல்லையே! கடிதத்தை என்னிடம் கொடுக்க அவள் மறந்து விட்டாள்!"

—ஜெயா.

ரயிலில் தங்களுடன் வந்தவரை அங்கே கண்டதும் மனதில் ஒரு விதமான சந்தோஷத்தை அடைந்து...

ரயிலில் விபத்து

[வி. ஆர். ராமஸ்வாமி]



திருச்சியிலிருந்து எழும்பூர் போகும் ரயிலில் தியாகராஜன் தன்னுடைய தாயார் கனகவல்லியம்மாளைப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு, சென்னையில் ஒரு பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்துத் தான் போட்ட விண்ணப்பத்திற்கு உடனே நேரில் வந்து பார்க்கும்படி உத்தரவு அனுப்பியிருந்த ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் மானேஜரைப் பார்ப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தான். அவன் ரயிலில் மூன்றும் வகுப்பில் அதிகக் கூட்டமிருக்குமென்று பயந்து இரண்டாம் வகுப்பில் போய்க் கொண்டிருந்தான்.

சாயங்காலம் ஏழு மணியிருக்கும். சூரியன் மறைந்து கால் மணி நேரமிருக்கும். இருளாத ஆகாயத்தில் அஸ்தமன வர்ணக் காட்சிகளைத் துடைத்துவிட்டு நீலத் திரையில் நக்ஷத்திரங்களை ஒவ்வொன்றாய் இட்டுக்கொண்டிருந்தது. தியாகராஜன் சாளரத்தருகில் உட்கார்ந்து கொண்டு மரங்களும், செடிகளும், வரும் பொழுது பெரிதாய்க் கொண்டும் போகும் பொழுது சிறிதாய்க் கொண்டும் விசையாகச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். மானிட வாழ்க்கையில் சம்பவங்களும் இப்படியே என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். தனது தகப்பனார் ஐந்து வருஷங்களுக்கு முன் இறந்து போய் விட்டதையும், தன் தாயார் திருச்சிக்கு அருகிலுள்ள லால்குடியிலிருந்த நிலத்தைக் கொண்டு ஜீவனம் நடத்தித் தன்னை பம்பாயில் வர்த்தகக் காலேஜில் படிக்க அனுப்பினதையும், தான் தன்னுடைய அம்மாஞ்சியுடன் பம்பாய்க்கு முதல் தடவை போனதையும், அங்கு வேடிக்கையாய்க் காலங் கழித்ததையும், ஒவ்வொன்றாக மனக்கண் முன் கண்டு, "நான் கற்றதற்கும் கேட்டதற்கும், இப்பொழுது கிடைத்தால் சேரப் போகும் வேலைக்கும் என்ன சம்பந்தம்? மனிதர்களின் வாழ்க்கை எல்லாத் தேசத்திலும் இப்படித்தான் திட்டமில்லாமல் நடத்தப்படுகிறதா?"—என்று சிந்திக்கலானான்.

வண்டி விருத்தாசலத்திற்கு வந்து நின்றதும் ஒரு பட்டைச் சரிகைத் தலைப்பாகை தரித்த ஒரு பிராமணரும், அவர் மனைவி என்று ஊகிக்கக்கூடிய ஒரு அம்மாளும் ஒரு இளம் பெண்ணும் வண்டியிலேறினார்கள். மற்றவர்கள் எல்லாரும் காலை நீட்டிப் படுத்

திருந்ததால் தியாகராஜன், அவர்களுக்குத் தான் படுத்திருந்த முழுப் பக்கத்தையும் விட்டுவிட்டு எதிர் வீட்டில் ஓரத்தில் கிடைத்த குறுகிய இடத்தில் போய் உட்கார்ந்தான். அப்பொழுது மணி எட்டு இருக்கும். ஜங்ஷனில் சற்று நேரம் ரயில் நிற்குமாதலால் ஏதாவது சாப்பிடலா மென்று வண்டியிலிருந்து இறங்கப் போனான்.

அதற்குள் வண்டியில் ஏறின ஸ்திரீகளில் பெரியவள் மூட்டையை அவிழ்த்துத் தயிர் சாதத்தைப் பங்கிட ஆரம்பித்தாள். தங்களுக்கு இடம் தந்த மனிதனுக்குப் பிரதியுபகாரம் செய்யவேண்டியோ என்னவோ "அவருக்கும் கொஞ்சம் கொடுங்கள்" என்று ஒரு இலையில் கொஞ்சம் தத்தியோதனத்தை எடுத்துக் கணவரிடம் கொடுத்தாள். கணவர் சற்று உதாசீனமாய்த் தியாகராஜனைக் கூப்பிட்டு, "ரயில் புறப்படும் சமயமாயிற்று, இதை எடுத்துக் கொள்ளுங்கள் !" என்றார். தியாகராஜன் முதலில் மரியாதைக்கு மறுத்து, பிறகு சாப்பிட உட்கார்ந்தான்.

தலைப்பாகைக்காரர் தலைப்பாகையை ஆணியில் மாட்டிவிட்டு மேல் சட்டையை அவிழ்த்துக்கொண்டே, "தாங்கள் எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்டார்.

"மதராசுக்கு" என்று சொன்னான் தியாகராஜன்.

பெரியவர்உட்கார்ந்து கொண்டு, "அங்கே என்ன வேலை உமக்கு ?" என்று கேட்டார்.

"எனக்கு வேலை ஒன்றுமில்லை. வேலை தேடப் போகிறேன்" என்று சொன்னான்.

"வேலையில்லாம லிருக்கையில் ஏன் இரண்டாவது வகுப்பில் போகவேண்டும்? தகப்பனார் வைத்த சொத்து நிறைய இருக்கிறதோ ?" என்று கேட்டார்.

தியாகராஜனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இருபத்தோராம் சகாப்தத்திலகூட இத்தமாதிரி அதிகப் பிரசங்கிகளா இருக்கிறார்களா என்று வியர்த்தான்.

"இரண்டாவது வகுப்பில் போனால் உங்களைப் போன்ற பெரிய மனிதர்களைச் சந்திக்க நேரும், ஏதாவது பிரயோஜனமும் ஏற்படலாமென்ற நம்பிக்கை தான்" என்று சொன்னான்.

பிறகு சற்று நேரம் யோசித்துவிட்டு, "நான் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் வேலை கேட்கப்போகிறேன். வேலை கிடைத்தவுடன் தங்களிடம் முதல் கேஸைப் பிடிக்க வருவேன். என் விஷயத்தில் இவ்வளவு விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டவர் அப்பொழுது ஏதாவது உதவி செய்வீரென்று நம்புகிறேன்" என்றான்.

இதைக் கேட்டுப் பெண் சிரித்தாள். பெரியவர் பதில் சொல்லவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்தவர்போல் மௌனமாயிருந்தார்.

தியாகராஜன் தூங்கிவிட்டான். விடியற்காலையில் எழுந்து உட்கார்ந்தான். பெரியவரும் ஸ்திரீகளும் தாம்பரத்தில் இறங்கி விட்டதாக மற்றப் பிரயாணிகள் சொன்னதிலிருந்து அறிந்தான். ரயில் எழும்பூரை யடைந்ததும் தான் கொண்டுவந்த கைப்பெட்டி நினைவுக்கு வந்தது. வண்டியில் பெரியவர் குடும்பம் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தான். பெட்டியைக் காணவில்லை. பலகைக்கு அடியில் பார்த்தான்; தன் பெட்டியைப்போலவே வேறொரு பெட்டியைக் கண்டான்.

"அவர்கள் தவறாக என் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். நல்லவேளை; பணப்பையை அதில் வைக்கவில்லை" என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு அவர்கள் விட்டுப்போன பெட்டியுடன் வண்டியை விட்டு இறங்கி உடுப்பி ஹோட்டலுக்குச் சென்றான். அங்கே இரண்டு மூன்று நாள் தங்க ஏற்பாடு செய்து விட்டு இன்ஷ்யூரன்ஸ் ஆபீசுக்குச் சென்றான்.

ஆபீசில் குமாஸ்தா மட்டும் இருந்தார். குமாஸ்தாவைக் கேட்டுக் கொண்டிருக்கையில் மேஜையில் டெலிபோன் மணி அடித்தது.

குமாஸ்தா : "பெட்டி காணோமா ?...... இங்கே விளம்பரம் செய்த வேலைக்காக ஒருவர் வந்திருக்கிறார். அவர் பெயரா ? உமது பெயர் என்ன ? 'நாகராஜன்...... இல்லை, தியாகராஜன்'...அங்கேயே வரச் சொல்லவா...?" என்று முடித்து டெலிபோனை மாட்டினார்.

பிறகு தியாகராஜனுக்கு மானேஜரின் விலாசச் சீட்டைக் கொடுத்தார். தியாகராஜனும் 'சென்னையில் எல்லாருமே மாம்பலத்தில் வசிக்கிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்துச் சீட்டைப் பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

* * *

ஜம்புத்வீப இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜர் விஸ்வநாதய்யர் மாம்பலத்தில் உஸ்மான் தெருவில் ஒரு மெத்தை வீட்டில் குடியிருந்தார். அவர் மனைவி பார்வதியம்மாளும் பெண் மதுராவும் ஹாலில் உட்கார்ந்து

கொண்டிருந்தனர். "பெட்டியில் அவ்வளவு நகைகளிருக்கையில் கொஞ்சம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டாமா?" என்று விஸ்வநாதய்யர் தம் மனைவியைக் கண்டித்துக்கொண்டிருந்தார். மனைவி, "நீங்கள் உங்கள் தலைக்கு அடியில் அதை வைத்துக் கொண்டு தூங்கிவிட்டு, இறங்குகையில் மறந்து விட்டீர்களாக்கும்!" என்றாள். அதற்கு விஸ்வநாதய்யர் "நான் மறக்கவில்லை. ஆனால் வேறு பெட்டியைக் கொண்டு வந்து விட்டேன்" என்று ரகசியத்தை மெள்ள வெளியே அவிழ்த்தார்.

மனைவி "உமது பெட்டி உமக்குத் தெரியவில்லையா? சாளேஸ்வரக் கண்ணாடி போட்டுக்கொள்ள வெட்கப்பட்டுப் பிரயோஜனமில்லை" என்றாள்.

"நான் பெட்டியை அதிகமாகக் கவனிக்கவில்லை. போர்ட்டர் வேறு பெட்டியைக் கொண்டுவந்து விட்டான். அதன்மேல் பேப்பர் வைத்திருந்ததால் நான் அதைச் சரியாய்ப் பார்க்க முடியவில்லை. நம்முடையதுதான் என்று நினைத்து விட்டேன். நகைகள் வாங்குவதுதான் என் பொறுப்பாயிருந்தால், அதை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வதாவது உன் பொறுப்பாயிருக்கக் கூடாதா?" என்று பேச்சை முடித்தார்.

* * *

அதற்குள் வாசலில் ஒரு ரிக்ஷா வண்டி வந்து நின்றது. அதிலிருந்து நமது நண்பன் தியாகராஜன் இறங்கினான். கால் சட்டை அணிந்திருந்தபடியால் மானேஜருக்கு முதலில் அவன் யார் என்று தெரியவில்லை. தெரிந்தபின், "ஓ! நீர்தானா?" என்றார்.

தியாகராஜன் தனக்கு வந்த உத்தரவையும், தன் பெயர், படிப்பு, பட்டம் அடங்கிய விசிடிங் கார்டையும் நீட்டினான். விஸ்வநாதய்யர் அதை வாங்கிப்பார்த்தார். பிறகு ஆபீஸ் அறைக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்துச் சற்று நேரம் பேசினார்.

அதற்குள் தபால்காரன் வந்து சில கடிதங்களைக் கொடுத்தான். அவற்றிலொன்று தம் மனைவிக்கு வந்திருப்பதைக் கண்டு அதைத் தம் பெண்ணைக் கூப்பிட்டுத் தாயாரிடம் கொடுக்கச் சொன்னார். பெண் ஆபீஸ் அறைக்கு வருகையில் ரயிலில் தங்களுடன் வந்த வாலிபனை அங்கே கண்டதும் மனதில் ஏதோ ஒரு விதமான சந்தோஷத்தை யடைந்து கடிதத்தை வாங்கிக் கொண்டு தாயாரிடம் சென்றாள்.

தாயார் பார்வதி அம்மாள் கடிதத்தை உடைத்துப் பார்த்தாள். அது அவள் தமையனிடமிருந்து வந்த கடிதம். தமையன் தன் பிள்ளை சந்திரசேகரன் பி.எல். பாஸ் செய்து விட்டதாகவும், அவன் புஸ்தகம் முதலிய செலவிற்கு இரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தால் கல்யாணம் ஏற்பாடு செய்யச் சௌகரியமாயிருக்குமென்றும், தனக்கு இப்பொழுது மிகவும் பணமுடையாயிருப்பதாகவும், மேற்சொன்னபடி பணம் கிடைக்காவிட்டால் இஷ்டத்திற்கு விரோதமாய் வேறு இடம் பார்ப்பது தவிர வேறு வழியில்லையென்றும் எழுதியிருந்தான்.

"மதுரம்! அப்பாவை அழைத்து வா!" என்றாள். மதுரம் போய்ப் பிதாவை அழைத்து வந்தாள். பார்வதி கடிதத்தில் எழுதியிருந்ததைச் சொல்லி அதைக் கணவர் கையில் தந்தாள்.

விஸ்வநாதய்யர் அதைப் படித்து விட்டு, "சொந்தக்காரனென்று சொல்லிக்கொள்வது, வரதக்ஷிணை கூசாமல் கேட்பது! ரொம்ப அழகாயிருக்கிறது!" என்று சொல்லி மறுபடியும் ஆபீஸ் அறைக்குச் சென்றார்.

பிறகு தனக்கு வந்த கடிதங்களைப் படித்தார். அதில் ஜோஸியர் குப்பா தீக்ஷிதரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் படித்ததும் அவர் ஆச்சரியமடைந்து "உங்கள் தகப்பனார் பெயர் என்ன?" என்று தியாகராஜனை வினவினார். அவன் தன் தகப்பனார் பெயரைச்சொன்னதும், "குப்பா தீக்ஷிதரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

தியாகராஜன், "ஆகா, தெரியும். என் தாயாருக்குத் தூர பந்து. அவர் ஒரு ஜோஸியர்" என்று சொன்னான். விஸ்வநாதய்யர் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"தீக்ஷிதர் உம்மைப் பற்றித்தான் எழுதியிருக்கிறார். உம்முடைய ஜாதகமும் நமது மதுரத்தின் ஜாதகமும் ரொம்பப் பொருந்தியிருக்கிறதென்றும், மற்ற விஷயங்கள் ஒத்து இருந்தால் கல்யாணம் நிச்சயம் செய்யலாமென்றும் எழுதி யிருக்கிறார்" என்று சொன்னார்.

"வேலை கிடைத்தபின் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாமென்று நினைத்தேன்" என்று சொன்னான் தியாகராஜன். விஸ்வநாதய்யர், "வேலைக்கென்ன! ஒரு வேலை போனால் இன்னொரு வேலை கிடைக்கும். ஆனால் மதுரத்தைப்போல் பெண் கிடைப்பது கஷ்டம்" என்றார்.

தியாகராஜனுக்கு இவருடைய அதிகப்பிரசங்கித்தனம், அழகிய முகத்திலுள்ள ஒரு மச்சம் அல்லது இலேசான கோணல் பழகப் பழக அந்த முகத்திற்கு ஒரு அழகாகவே தோன்றுவதுபோல், வர வரச் சரள சுபாவத்தின் ஒரு அறிகுறியாகத் தோன்றலாயிற்று.

இதற்குள் வீட்டிற்குள்ளிருந்து அவருக்கு மறுபடியும் ஒரு உத்தரவு புறப்பட்டது. உள்ளே சென்றார். இந்தத் தடவை அவருக்கு உத்தரவிட்டது அவருடைய பெண் மதுரம்.

“அவர் கிட்ட இருக்கிற கைப்பெட்டியைக் கவனித்தீர்களா? அது நமது பெட்டி போலிருக்கிறது. போய்ப் பாருங்கள்” என்று சொன்னாள்.

“என்னடி, புருஷன் பேரிலேயே சந்தேகம் உனக்கு?” என்றாள் அவள் தாயார்.

“இல்லை, அம்மா! கூடத்தானே வந்தோம்? பெட்டிகள் மாறிப் போயிருக்கலாம்” என்றாள்.

“இரண்டு பெட்டியிலுள்ள சாமான்களும் உன்னுடையதாகவே இருக்கப் போகிறதென்று தைரியமா?” என்றாள் தாயார்.

“என்னுடைய கைப்பெட்டி ரயிலில் காணாமற் போயிற்று. உங்களுடைய பெட்டியைப்போலவேதான் அதுவும் இருக்கும்” என்றார் விஸ்வநாதய்யர்.

“என்னுடைய பெட்டியும் காணாமற் போயிற்று. பெட்டிகள் மாறியிருக்கலாம். உங்களுக்கு ஏதாவது பெட்டி கிடைத்ததா?” என்று தியாகராஜன் கேட்டான்.

விஸ்வநாதய்யர் உள்ளே சென்று பெட்டியைக் கொண்டு வந்தார். தியாகராஜன் அது தன்னுடையதுதான் என்று திறந்து அதிலிருந்து சில காகிதங்களை எடுத்தான். உடனே தன்னுடைய பேரிலும் விஸ்வநாதய்யருடைய பேரிலும் இரண்டு பாலிசிகளை எழுதி முடித்தான்.

ஒரு வாரத்தில் கல்யாணமும் நல்ல சுபதினத்தில் மங்களமாய் நடந்தது.


• • •

வாசகர்கள் இப்படியும் நடந்திருக்குமோ என்று கேட்கலாம். கதைகள் மெய் போலும், உண்மைச் சம்பவங்கள் கதை போலும் அமைவது சகஜம் என்பது உலகமறிந்தவர்களுடைய அநுபவம்.



எல்லாவற்றையும்
குறைவாக உபயோகியுங்கள்
-உங்களுக்கும் உதவி செய்துகொண்டு
-இந்தியாவிற்கும் உதவுங்கள்!
இந்தியாவின் ஏழைகளுக்காக உங்களது தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். சாமான்களுக்கும் எல்லா வித சேவைகளுக்கும் பலமான நெருக்கடி இன்று ஏற்பட்டிருக்கிறது. யாருக்கும் அறவே இல்லாமல் போய் விடுவதைத் தடுக்க, ஒவ்வொருவரும் தானாகவே கொஞ்சம் தேவையைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இது நாட்டுப் பற்றுடையவரின் கடமை.
இப்படிப்பட்ட சிக்கனங்களை உங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, அதன் பலன்களை அநுபவியுங்கள். தேவைகளைக் குறைக்கும் ஒவ்வொரு செயலாலும் சிறு சிறு தொகைகள் மிச்சமாகும். அந்த மிச்சங்களின் பொருட்டு சிக்கனத்தைக் கையாளுங்கள்.
காகிதத்தை மிச்சப்படுத்த, சிறு காகித துண்டுகளை உபயோகியுங்கள். பழைய கவர்களை (உறைகளை) திரும்ப உபயோகியுங்கள்
விருந்துகளைக் குறையுங்கள்
ஆகாரத்தை சிக்கனப்படுத்துங்கள்—அது ஒரு தேசிய கடமை
குழந்தைகளின் பழைய விளையாட்டுச் சாமான்களைப் பழுது பார்த்துக் கொடுங்கள். புதிதாக வாங்காதீர்கள்.
நூலை வீணாக்காதீர்கள். அது கிடைப்பது அரிது என்பதும் அறிவீர்கள்.
அதிவேக மிதமிஞ்சிய பாரம் ஏற்றியும் குறைவாக காற்றை அடித்தும் டயர்களைப் பாழாக்காதீர்கள்.
செலுத்துங்கள்
உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்
இந்திய அரசாங்க இ. கு. பி. இலாகா வெளியீடு.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!




லீலா தேசாய்




அழகுபடுத்த நான் பல வருஷங்களாகக் கையாண்ட முறை மிக எளிதும், சீக்கிரமானதென்றும் கூறுகிறார் லீலா. லக்ஸ் டாய்லட் சோப்பைச் சரியாக ஒழுங்காய் உபயோகப்படுத்துவதுதான் அது. சருமத்தின்மீது மெதுவாகத் தடவி நன்றாக்கழுவிலும். இந்த அழகான சோப்பின் சிறந்த நுரை சருமத்தைச் சுத்தமாக்குகிறது; பட்டைப்போன்ற ஒரு மினுமினுப்பைக் கொடுக்கிறது; நல்ல வாசனையையும் அளிக்கிறது.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LEVER BROTHERS (INDIA) LIMITED





பெண்களுக்கு சுயநலமற்றதும் கௌரவப்படுத்தக் கூடியதுமான சுயேச்சை வாழ்க்கை

ஒரு பெண் சோம்பேறியாய் வீட்டோடு இருப்பதை சமூகம் விரும்பவில்லை. தற்கால புத்திசாலி பெண்ணுக்கு [illegible] இந்திய ஆக்ஸிலியரி நர்ஸிங் ஸர்வீஸில், மனதை ஆகர்ஷிக்கக் கூடியதும் [illegible] வேலைகள் இருக்கின்றன. "கருணையின் தேவ தூதர்கள்" [illegible] தொண்டை [illegible] எந்த உத்யோகமும் அதிக கௌரவத்தை அளிப்பதில்லை.

ஏ. என். எஸ்ஸில் [illegible] பயிற்சி யுத்தத்திற்குப் பிறகு உங்களுக்கு [illegible] வாழ்க்கையை அளிக்க [illegible] இருக்கும். உங்களுக்கு [illegible] இருந்தால், நீங்கள் பயிற்சி [illegible] அறிவு உங்கள் குடும்ப வாழ்க்கை [illegible] சமூக சேவைக்கு மதிப்பு [illegible] இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

சம்பளம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள் [illegible] சாப்பாடு, [illegible] மாதம் ரூ. 135 முதல் 175 வரை, அல்லது மாதம் ரூபாய் 203 முதல் 243 வரை. [illegible] இந்திய [illegible] 17 முதல் 45 வய[illegible] [illegible] பெண்ணும் சேவைக்கு முன் அனுபவம் தேவையில்லை. [illegible]

ஏ.என்.எஸ்


பெண்ணிற்கு மிகவும் கம்பீரமான வேலை

பூரா விவரங்களுக்கு

*

லேடி டிஸ்ட்ரிக்ட் ஸூபரின்டெண்ட் செயின்ட் ஜான் அம்புலன்ஸ் பிரிகேட் ஓவர்ஸீஸ், மதராஸ் என்ற விலாஸத்திற்கு இன்றே எழுதுங்கள்.

AAA. 1197. A. TM.



கைத்தொழில் மூலம் சட்டதிட்டமான அபிவிருத்தி

மேநாடுகளுக்கிடையில் சம அந்தஸ்துடன் தனக்குரிய ஸ்தானத்திலமர இந்தியா விவசாயத்தைப் புறக்கணிக்காமல் கைத்தொழில் விஷயத்தில் தனது மோசமான நிலைமையை சீக்கிரம் சமாளித்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும். கைத்தொழில், விவசாயம் இரண்டையும் சரியாக இணைத்துக் கொண்டு செல்வதிலேயே நாட்டின் உண்மை அபிவிருத்தி இருப்பது.

அது காரணமே ஜே. கே. தொழிற் ஸ்தாபனங்கள் இன்று ஓர் கைத் தொழிலபிவிருத்தி சட்ட திட்டத்தில் முனைந்து வேலை செய்து வருவது. அத் திட்டத்தின் உத்தேசம் இயற்கை விபவங்களை செழிப்பித்து இந்தியாவைக் கைத்தொழில் விஷயத்தில் பிற நாடுகளை நம்பியிராது தற்சார்பாகச் செய்தலும், ஜனங்களின் பொருளாதார நிலையை உயர்த்தலும், பொது மக்களின் வாழ்க்கை, கல்வி, சுகாதார வசதிகளை ஒழுங்காக வளர்ச்சியுறச் செய்தலுமேயாகும்.

ஜே. கே. ஸ்தாபனங்கள் தங்கள் அங்க ஸ்தாபனங்கள் வழியாக பற்பல கைத்தொழிற் துறைகளில் இறங்கி மிகுந்த அக்கறையுடன் முயற்சித்து வருகின்றன.

பொருள்களும், தொழில்களும்

தேவைகள்: பருத்தி* கம்பளி* ஹொஸியரி* சணல்* இரும்பு, எஃகு* உலோக நிர்மாண வேலைகள்* ரசாயனப் பொருள்கள்* குடும்பத்திற்கும் கைத் தொழிலுக்கும் வேண்டிய எண்ணெய்களும் ஸோப்புகளும்* வனஸ்பதி, சர்க்கரை மற்ற உணவுப் பொருள்கள்* ஐஸ்* எலெக்ட்ரிக் ப்ளாஸ்டிக் பிட்டிங்குகள்* கைத்தொழிலுக்கு ஏற்ற ரப்பர் பொருள்கள்* ப்ளைவுட், லாமினேட்ட் கட்டட போர்டுகள்* ஸ்ட்ரா போர்டு* பல்ப் போர்டு* கண்ணாடிச் சாமான்கள்* அலுமினியம்* ப்ரொடியூஸர் கியாஸ் "ப்ளாண்ட்"* டயர் பழுது பார்த்தல்* பாங்கிங்* இன்ஷுரன்ஸ்* லேவாதேவியும் முதலீடும்.

ஜே. கே. இண்டஸ்ட்ரீஸ்
கமலா டவர், கான்பூர்.

கல்கி



ALKI மே 13, 1945 4 அணா

Regd. No. M. 4892

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.